# மூன்றாம் பருவம்
# பகுதி -II

## அகில வாசகம்
### சம்பூர்ணத் தேவன் பரதேவதை மனுப்பிறப்பு

அந்தப் பொழுதில் ஆதிநா ராயணரும்
சிந்தை மகிழ்ந்து செப்புவா ராதியோடு
நல்லதுகா ணீசுரரே நாடுந்தே வாதிகளில்
வல்லசம் பூரணனும் வாய்த்த எமலோகமதில்
பரதே வதையான பைங்கிளியுந் தேவனுமாய்
மருவனைய மாதும் மன்னவனு மாய்ப்பிறக்க
உருவேற்றி நம்மை உயர்ந்ததவஞ் செய்திடவே
ஆனதா லவரை அவனிதனி லேபிறவி
ஈனமுட னமைக்க இதுநா ளாகுவதால்
நின்றந்தத் தேவனுட நிஷ்டைநிறை வேறினதோ
என்றெனவே பார்க்க எழுந்தருளு மீசுரரே
அப்படித்தா னீசுரரும் ஆதிநா ராயணரும்
இப்படியே தேவனிடம் ஏகின்ற வேளையிலே
தேவ ரெதிரே தெய்வேந் திரன்தானும்
மூவர் நடுவன் முத்தனரி நாரணரின்
சங்கு சரம்போல் தங்கநவ ரத்தினத்தால்
எங்கு மொளிவீசும் இரத்தினத் திருமுடியைச்
சூடித்தெய் வேந்திரனும் சிவனெதிரே போகவென்று
நாடி யகமகிழ்ந்து நாராயணருடனே
சந்தோச மாகத் தான்வருகும் வேளையிலே
முன்தோசத்தால் தேவன் முடியணிந்த இந்திரனைக்
கண்டுசம் பூரணனும் கைமறந்து நிஷ்டையது
பண்டு மையலாய்ப் பாவையோ டேதுரைப்பான்
மானே கேளிந்த வானவர்கோன் தன்சிரசில்
தானாகிய மான சங்குசரத் தங்கமுடி
என்தலையி லேவைத்து ஏந்திழையே உன்னோடு
தென்தலைவ ரத்தினச் சிங்கா சனமீதில்
இருபேரும் வாழ்ந்து இராச துரைத்தனமாய்ப்
பெருக்கான தெய்வகன்னி பெற்ற மனுவழியை
எல்லா மருகிருத்தி ஏற்றவொரு சொல்லதுக்குள்

வல்லான நீத வையகத்தை யாண்டிருந்தால்
எத்தனையோ நாமள் இலங்கு மகிழ்ச்சையுடன்
வர்த்தனையாய் வாழ்வதற்கு வாய்த்தமுடி ஈதல்லவோ
என்றுசொல்லத் தேவன் இச்சைகொண்டு பெண்ணாளும்
நன்றுநீர் சொன்னமொழி நல்லா யிருக்குதுகாண்
அப்படித்தா னம்மை ஆதிசிவன் படைத்தால்
இப்படியும் படைத்தோர் இறவா திருப்பாரோ
என்றுபெண் ணாளுரைக்க ஏற்றசம் பூரணனும்
அன்று பெருமூச்சு அலைபோ லெறியலுற்றான்
அந்தப் பொழுதில் ஆதி சிவமுதலும்
வந்தங்கு நின்றார் மாகிருஷ்ண மாலவரும்
கண்டந்தத் தேவன் கைமறந்த நிஷ்டையோடு
தண்டமிழ்சேர் பதத்தைத் தையலும்வந் தேவணங்கி
இத்தனைநாள் யாங்கள் நின்றதவம் கண்டிரங்கிச்
சித்த மிரங்கிச் சிவனேநீர் வந்தீரோ
எந்தன் பெருமானே இறையவரே வந்தீரோ
நந்தகோ பால நாரணரே வந்தீரோ
குருவே அரிநாதா கோபாலா வந்தீரோ
முருகக் குருபரனே முத்தாநீர் வந்தீரோ
செல்வக் கடலே சீமானே வந்தீரோ
கல்விக் கடலான கறைக்கண்டா வந்தீரோ
அரவணிந் தத்திவுரித்து அணிந்தோரே வந்தீரோ
பரமசிவ மான பச்சைமால் வந்தீரோ
இப்படியே மானாளும் ஏற்றசம் பூரணனும்
அப்படியே வந்தோர் அடிபணிந்து போற்றிடவே
மாய பரனும் மனமகிழ்ந்து கொண்டாடி
ஆயனைப் பார்த்து அருளுவா ராதியுமே
மாயவரே கேட்டீரோ வாய்த்தஇத் தேவனுந்தான்
தூயவரே நின்றதவம் துலைத்தறுத்தா னில்லையிவன்
முற்றுந் தவமும் முழுதும்நிறை வேறுகையில்
சிற்றின்ப மாகித் திருமுடிமே லிச்சைகொண்டு
வாடி யயர்ந்தான் மங்கையருந் தேவனுமே
நாடி யிவன்தனக்கு நல்வளமை யேதுசொல்வீர்
அப்போது நாரணரும் அகமகிழ்ந்து கொண்டாடிச்
செப்புகிறா ரந்தச் சிவனோடு எம்பெருமாள்
ஏது விதமாய் இருந்ததவ மேகுறைய
தீதுவந்த ஞாயம் செப்பிடீ ரென்றுரைத்தார்

அப்போ சிவனார் அகமகிழ்ந்து தேவனோடு
இப்போ துன்சிந்தை எண்ணமெல்லாஞ் சொல்லுவென்றார்
தேவ னதைக்கேட்டுச் சிந்தை மிகக்கலங்கி
ஆவி மறுகி அவனேது சொல்லலுற்றான்
காரணரே நாங்கள் கருத்தில் நினைத்ததெல்லாம்
பூரணமா யங்கே புகுந்துதோ யென்சிவனே
ஐயோநான் சொன்னேனென் ஆயிழையோ டல்லாது
கையோ கண்ணாலே காணேனே மற்றொருவர்
ஊமை மொழிபோல் ஒதுக்கி லுரைத்தாற்போல்
நாமறியப் பெண்ணறிவாள் நாடறியா தென்றிருந்தோம்
இவர்க ளறிவதற்கு யார்சொல்லிப் போட்டாரோ
எவர்களும் நாம்பேசுகையில் இங்குவரக் காணோமே
ஆர்சொல்லிப் போட்டாரோ அறியோமே யென்சிவனே
தார்சிறந்த என்சிவனே சர்வ தயாபரனே
பூரணனே வாசவனே பொறுத்தினிக் கொள்ளுமையா
நாரணரே என்சிவனே நாடிப் பொறுவுமையா
என்றுசொல்லித் தேவன் ஏற்ற விருத்தமதாய்
நன்றினிய முப்பொருள்மேல் நற்போற்ற லேபடிக்கப்

விருத்தம்

காரணா அரிநாரணா கருணாகரத்தருணா
வாரணா வெகுபூரணா வந்தாய் அருள்செய்வாயே
நாரணா பரிபூரணா நான்செய்த குற்றம்பொறுத்து
காரணா வைகுந்தம் கருத்தாய் அருள்வீரே

நடை

பரதே வதையான பைங்கிளியு மப்போது
திரமான தாயார் சிவசக்தி பேரதிலும்
சிவநாமப் பேரதிலும் ஸ்ரீகிருஷ்ணர் பேரதிலும்
விவமான ஆசிரிய விருத்தம்போல் போற்றலுற்றாள்

விருத்தம்

காரணா அரிநாரணா கவிபூரணா வெகுதோரணா
கவிஞோர் தொழும் வாரணா கருணகரத் தருணா

வெகு தருணா கவிவருணா கவிமால் சிவாபோற்றி
காயாம்பூவின் மேனிநிறமாயா சிவசிவாயா
கருவா யுருவுருவா யுனைத் தினமேயருள் மாயா
குறிமத்தகா கருணாகரா போற்றி
குணசீரா வெகுதீரா நவிவீரா புவிநாதா
தருணா கருணா இந்த்தருணம் வந்தாலே
கருவாய் உருத்திரண்டு கருத்தாய் வளர்ந்துஅன்று
இருந்தாய் எமலோகம் ஈசர்மாயிதான்என்று
திருவுருவம் கொண்டு சிவனும்நீரும் வந்ததினால்
திருவோடுறு மார்பா சிறியார்மிக தறியாச்செய்த
வெறியானதைச் சிறிதாக்கியே சேர்ப்பாய்
முகம்பார்ப்பாய் முடிவானதை யறியாமலே
மோகமாய் வெகுதாகமாய் உளறித் தவங்குளறியே
உன்சொற்பதம் அஞ்சல்லென
ஒஞ்சிப்பத மஞ்சினோம் உன் செயல்தந் தருள்வாயே

நடை

இப்படியே கன்னி ஏற்றபர தேவதையும்
முப்படியே யாசீர் விருத்தமொன்று பாடிடவே
கேட்டு அரிநாரணரும் கிளிமொழியைத் தான்பார்த்து
மெட்டுக் கொடியிடையே மின்னிடையே நீகேளு
உன்புருஷ னங்கே உற்றஎம லோகமதில்
இன்புருகி வாடி ஏங்கித் தவிப்பதினால்
அவனைநீ மறந்து ஆனதெய்வப் பூரணனை
இவனை மிகத்தாவி இருந்த தவமதிலும்
நிறைவேற மாட்டாமல் நினைத்தகே டித்தனையால்
பிறபோநீ பூமிதனில் பெரியசான் றோர்வழியில்
எமவழியி லோர்பிறவி என்மகவா யங்கிருக்க
அமைப்பா னதற்கு அவ்வழிதா னாயிழையே
இந்தத் தவக்குறைக்கு இன்னமங்கே நீபிறந்து
முந்தப் புருஷனுக்கு முன்வேலையுங் கழித்து
அழுந்தத் துயரப்பட்டு அவனூழியங்கள் செய்து
குளிர்ந்த மொழியற்றுக் கூடுஞ் சரசமற்று
எந்நேர முன்றனக்கு ஏக்கமுட னழுந்தி
மின்னேகே ளிந்த மிகத்தேவ னுன்வழியில்
கொண்டபச்சத் தாலே கோதைய ரேயுனையும்

கண்டிச்சை கூர்ந்து கர்மக் கடுவினையால்
கருவா லுருவைக் கைக்குள் வசமாக்கிப்
பருவா பருவமதில் பாவையேநீ யிவனோடு
இருவ ரொருவரென இச்சைமிகக் கூர்ந்து
குருவை மறந்து கொண்டவனைத் தான்மறந்து
தாய்தகப்பன் மாமன் தமையன் தனைமறந்து
வாயிற் படிமறந்து வாழ்வை மிகமறந்து
சொந்த மனைமறந்து சுகசோபன மறந்து
சந்தோச மற்று சகலோர்க்கும் நாணமுற்று
முற்புரு ஷன்தனக்கு மூலக்கருக் கேடணைத்து
இப்புருஷன் தானெனவே எவ்வுலகுந் தானறியக்
கட்டிய மங்கிலியம் காசினியோர் தாமறியக்
கெட்டினாற் போலே கீர்த்தி மிகப்பிறந்து
மேலும்பல தொந்தரவு மிகுநாள் வழிதோறும்
கேலி மிகவாகிக் கிலேச மிகவடைந்து
உதிர வெளியாகி உட்செருமல் விக்கலுமாய்த்
கெதியோவிதியென்று கேட்டுஇருக்கையிலே
தீனறா மந்தச் செடியேற்பச் செய்கையினால்
கானகமேநடக்க களைப்பா இருக்கயிலே
வீட்டை விரித்து மேலேதெய்வ வழியாய்
நாட்டையும் போட்டுக் குலபதவியுன் தனக்கே
என்று சிவனாரும் எம்பெருமாளு முரைத்து
அன்று ஏமச்சண்டன் அவ்வழியி லேயமைத்தார்
அமைக்க அணங்கும் அவனிதனி லேபிறக்க
எமக்குலத்தில் வந்து இயல்பாய்ப் பிறந்தனளாம்
மாது புவியில் வளரப் பிறந்தபின்பு
தாது கரமணிந்த சங்கு சரத்தாமன்
தேவன் தனைப்பார்த்துச் செப்புவா ரெம்பெருமாள்
பூவுலகி லுன்றனுட பெண்பிறக்கப் போனதல்லோ
ஏதுநீ தேவா இனியுனது செய்தியென்ன
சீரொத்தத் தேவன் திருப்பாட்டு ஓதலுற்றான்

## அகில வாசக விளக்கம்:

கலி அழிப்பதற்கு வல்லமை உடையவர்களாக மேல் உலக வாசிகளை நான் பூவுலகில் பிறவி செய்வதற்காக இருக்கின்றபோது தேவலோகத்தை சார்ந்த சம்பூரண தேவன்

என்பவன் பூவுலகில் பிறவி எடுப்பதற்கு முடியாது என்று மறுத்துரைதான் காரணம், எமலோகத்தை சார்ந்த பரதேவதையை எனக்கு மனையாள் அதாவது மனைவி போன்று மாற்றி தந்தால் நான் பூவுலகில் பிறப்பு எடுப்பதற்கு சம்மதம் தெரிவிக்கின்றேன் என்று கூறினார். அப்போது நான் அவனுக்கு பல புத்திமதிகளை கூறினேன். எமலோகத்தை சார்ந்த பரதேவதையும் நீயும் குணத்தோடு ஒத்துப் போக முடியாது. ஆகவே அந்த எண்ணத்தை விட்டு விடு என்று அவனுக்கு பல புத்திமதிகளை எடுத்து கூறினேன். ஆனால் அவன் அதை ஏற்றுக் கொள்வதாக இல்லை. ஆகவே அவர்கள் இரண்டு பேரையும் ஒரே நிலையில் வருவதற்காக தவம் இருக்கும் படிக் கூறினேன்.

எப்படி என்றால் சம்பூர்ண தேவனின் குணநலன்கள் உயர்ந்த நிலையில் தெய்வீக தன்மை பொருந்தியதாக இருக்கும். ஆனால் பரதேவதையின் குணநலன்கள் கீழான நிலையில் அதாவது எப்போதும் பிறருக்கு இடறு செய்கின்ற விதத்தில் இருக்கும். ஆகவே இதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே சம்பூர்ண தேவனிடம் பரதேவதையை உன்னுடைய (சம்பூர்ண தேவனுடைய) நிலைக்கு உயர்த்தி கொள்வதற்காக நீள நூலிட்டு சிவசுவாசம் பெருக்கி தவசு செய்ய வேண்டும் என்று கூறி அனுப்பி இருந்தேன். அதன்படி அவர்கள் இருவரும் தவம் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அவர்களுடைய தவத்தை நிறைவு செய்து வைப்பதற்கான தருணம் இப்போது நெருங்கி விட்டது. அவர்களுரடைய தவத்தை நாம் பார்க்க செல்ல வேண்டும் என்று சிவபெருமானிடம் நாராயணமூர்த்தி கூறினார்.

சம்பூர்ண தேவன் பரதேவதையினுடைய தவத்தை நிறைவு செய்வதற்காக நாராயண மூர்த்தி சிவபெருமான் பிரம்ம தேவர் என்கிற தேவேந்திரன் எல்லோருமாக அங்கே ஒன்றாக வருகின்றார்கள் அப்படி வருகின்றபோது தேவேந்திரன் தன்னுடைய தலையிலே ஒரு பொய்யான திருமுடியை சூடி வருகின்றார். அப்படி திருமுடியைசூடி வருகின்ற போது சம்பூரண தேவன் தவ நிலையில் இருக்கின்றவன் பரதேவதையிடம் அங்கு மனதோடு மனமாக பேசிக்கொள்கின்றார்.

பெண்ணே அங்கே பார் தேவேந்திரன் தலையில் சூடியிருக் கிறாரே திருமுடி அதேபோன்று நாமும் தவம் நிறைவேறிய பிறகு

இந்த திருமுடியை சூடி இந்த உலகை ஆள வேண்டும் என்று அங்கே மனதோடு மனம் பேசிக்கொள்ளுகின்றார்கள். எப்படி என்றால் பெண்ணே அங்கே பார் தேவேந்திரன் தன்னுடைய தலையிலே சூடி வருகின்றாரே அந்த திருமுடியை போல நாம் தலையிலே சூடி தலைவராக ரத்ன சிங்காசனத்தில் நாம் இருவரும் ராஜா தன்மையோடு கம்பீரத்தோடு இருந்து உலகை ஒரு சொல்லதற்குள் ஆள வேண்டும். அப்படி நாம் இந்த உலகத்தை நாம் ஒரு சொல்லுக்குள் ஆண்டு வருகின்ற போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். நாம் வர்த்தனமாய் வாழ்வதற்கு வாய்த்த திருமுடி இதல்லாவா என்று தேவன் அந்த திருமுடி மேல் இச்சை கொண்டு பரதேவதையிடம் பேசினான்.

சம்பூரண தேவன் பரதேவதியிடம் நாம் இந்த திருமுடியை வைத்து ஆட்சி செய்ய வேண்டும் என்று சொன்னவுடனே பரதேவதையானவள் சம்பூரண தேவனிடம் கூறுகின்றார், நன்றாகவே இருக்கிறது நீங்கள் சொன்ன மொழி . ஆனால் நம்முடைய விதி எப்படி இருக்கிறது என்று நமக்கு தெரியாது. அப்படிதான் சிவபெருமான் நம்மை படைத்திருந்தால் இப்படியும் படைத்தோர் இறவாது இருப்பாரோ என்று பரதேவதை கூறினாள். உடனே சம்பூர்ண தேவன் ஆசையை நிறைவேற்ற முடியாத நிலையில் மனம் எப்படி ஏக்கம் கொள்ளுமோ அந்த நிலையில் சம்பூர்ண தேவன் பெருமூச்சு விட்டான். இந்த செய்தியை தவத்தை நிறைவேற்றுவதற்காக வந்த சிவபெருமான் அறிந்து கொள்ளுகின்றார்.

அப்படி அவர்கள் இருக்கின்ற அந்த வேளையிலே சிவபெருமானும் நாராயண மூர்த்தியும் முதலான சங்கத்தார்கள் எல்லோரும் அங்கே வந்து நிற்கின்றார்கள். அப்போது சம்பூரண தேவன் கை மறந்த நிஷ்டையோடு தண்டமிழ்சேர் பாதத்தை பரதேவதையும், சம்பூர்ண தேவனும் வணங்கிப் பணிந்து நின்றார்கள். எப்படி என்றால் நாங்கள் இருந்த தவத்தை கண்டு மனம் இரங்கி நீங்கள் எங்களுடைய தவத்தை நிறைவேற்றுவதற்காக வந்தீர்களோ என்று போற்றி பணிந்து பாடுகின்றார்கள்.

"**சித்தம் இரங்கி சிவனே நீர் வந்தீரோ**,
**எந்தன் பெருமானே இறையவரே வந்திரோ**
**நந்தகோபால நாராயணரே வந்தீரோ**
**குருவே அரிநாதா கோபாலா வந்தீரோ**

**முருககுருபரனே முத்தாநீர் வந்தீரோ**
**செல்வக்கடலே சீமானே வந்தீரோ**
**கல்வி கடலான கரை கண்டா வந்தீரோ**
**அரவதனை அணிந்தோரே வந்தீரோ**
**பரமசிவமான பச்சைமாய் வந்தீரோ**"

என்று சம்பூரண தேவனும் பரதேவதையும் அடிபணிந்து போற்றி நின்றார்கள்.

சம்பூர்ண தேவன் மற்றும் பர தேவதையினுடைய போற்றுதலை பார்த்து மும்மூர்த்திகளும் மனமகிழ்ந்து இருக்கின்றபோது, சிவபெருமான் நாராயண மூர்த்தியை பார்த்து கூறுவார் மாயவரே கேட்டீரோ இந்த தேவனானவன் செய்த தவமானது நிறைவேறவில்லை. தவம் நிறைவேறுகின்ற நிலையிலே அவன் தெய்வேந்திரனின் திரு முடியின் மீது ஆசை கொண்டு விட்டான். ஆகவே அவன் தவம் முழுதும் நிறைவேறவில்லை என்று சிவப் பெருமான் நாராயணமூர்த்தியிடம் சொல்ல, இத் தேவனின் தவம் குளறுபடி ஆனதற்குரிய காரணத்தை நாராயண மூர்த்தி சிவபெருமானிடம் கேட்டார்.

அப்போது சிவபெருமான் சொல்லுகின்றார் நாம் இவர்களுடைய தவத்தை நிறைவேற்றுவதற்காக வருகின்ற போது தெய்வேந்திரனும் நம்மோடு வந்தார் அல்லவா!. அவருடைய தலையில் சூடி வந்த திருமுடிமேல் இச்சைக் கொண்டு பரதேவதையோடு பேசினான். அந்த செய்தியை சம்பூரண தேவனிடமே கூறும் படிச் சொல்ல, சம்பூரண தேவன் மனம் பதறி, காரணரே! நாங்கள் எங்களுடைய மனத்தோடு மனம் பேசியதை தாங்கள் எப்படி அறிந்துக் கொண்டீர்கள்.

ஐயோ நான் பேசியது வேறு யாரும் கண்டு கொள்ள வில்லை என்றல்லவா நினைத்தேன். நாங்கள் பேசுகின்ற அந்த இடத்திலே வேறு எந்த ஒரு மனிதரையும் நாங்கள் காணவில்லையே! ஊமை பேசியது போல் அல்லவா நாங்கள் மனத்தோடு மனம் பேசிக்கொண்டிருந்தோம். அப்படி இருக்க தங்களது எப்படி அறிந்தீர்கள். அந்தப் பெண் மட்டும் அறிவாள் என்று அல்லவா கூறினேன். அந்த இடத்தில் வேறு யாரு வரவில்லையே! நாங்கள்

இருவரும் மட்டும் தானே இருந்தோம். வேறு யாரும் அறிய மாட்டார்கள் என்று எண்ணி இருந்தோம்

ஆனால் நீங்கள் அறிவதற்கு யார் சொல்லி போட்டாரோ! நாங்கள் பேசுகிறப்போது அங்கு யாரும் வரக் காணோம். அப்படி இருக்க உங்களிடம் யார் செல்லிப் போட்டார்களோ எம்சிவனே என்று சிவபெருமானிடம் பணிந்து நின்றான் சம்பூரணதேவன். நாங்கள் செய்த தவறை பொறுத்துக் கொள்ளுங்கள் ஐயா என்று சொல்லி தேவன், சிவப்பெருமானிடம் நாடிப் பொறுவுமையா என்று பணிந்து நின்றான். மேலும் சம்பூரணதேவனும் பரதேவதையும் மும்மூர்த்திகளையும் அம்மை உமையவளையும் போற்றி பாடினார்கள்.

"**காரணா அரிநாரணா கவிபூரணா வெகுதோரணா**
**கவிஞோர் தொழும் வாரணா கருணகரத் தருணா**
**வெகு தருணா கவிவருணா கவிமால் சிவாபோற்றி**
**காயாம்பூவின் மேனிநிறமாயா சிவசிவாயா**
**கருவா யுருவுருவா யுனைத் தினமேயருள் மாயா**
**குறிமத்தகா கருணாகரா போற்றி**
**குணசீரா வெகுதீரா நவிவீரா புவிநாதா**
**திருவோடுறு மார்பா சிறியார்மிக தறியாச்செய்த**
**வெறியானதைச் சிறிதாக்கியே சேர்ப்பாய்**
**முகம்பார்ப்பாய் முடிவானதை யறியாமலே**
**மோகமாய் வெகுதாகமாய் உளறித் தவங்குளறியே**
**உன்சொற்பதம் அஞ்சொல்லென**
**ஒஞ்சிப்பத மஞ்சினோம் உன் செயல்தந் தருள்வாயே**"

அண்ட சராசரங்களையும் ஆதி சாஸ்திரங்களையும் இயக்கிக் கொண்டிருக்கும் கருணாகரனே! ஆதி நாராயணா! ஆசு,மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய கவிக்குள் பூரணமாய் அமைந்தவரே! தோரணமாய் வெகு தோரணமாய் ஜொலிப்பவரே! கவிதைகள் எழுதும் கவிஞர்கள் போற்றும் கருணைக்கடலே! உம்மை போற்றுகிறோம். வள்ளலை போல் வாரி வழங்கும் வள்ளல் பெருமானே! வித்தாரகவி போல் இனிமையை பொழிபவரே! கவிஞர்கள் பாடும் கவிமாலே போற்றி சிவ சிவ சிவாய நம என்று போற்றினார்கள்.

காயாம் பூ மேனி உடையவரே! நீல நிறம் மாறா திருமாலே! சிவசிவா அரகரா என்று போற்றுகிறோம். நஞ்சை உண்டவா! திருநீலகண்டன் என்று சொல்லும் சிவமே போற்றி சிவ சிவ சிவாய போற்றியே! நமச்சிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தின் உட்பொருளில் உறைந்த சிவனே போற்றி! ஓம் என்ற ஓங்கார ஒளிக்குள் கருவாகி உருவாகி அருவாகி தினமும் அருள்புரியும் மாயவா! ஆதிமூலமே அருள் புரிவாயே போற்றி! மனதின் குறையைப் போக்கும் மதுசூதனா போற்றி! மக்கள் மனதில் உதிக்கும் எண்ணங்களை புரிந்து கொள்ளும் உத்தமனே! சிவமே உம்மைப் போற்றுகிறோம்.

உள்ளம் உருகி உருகி வேண்டிட உடனே அருள்புரிய கருணை காட்டும் காரண குருவே போற்றி! உயர்வான குணம் கொண்ட குணசீலா! உறுதியோடு செயல்பட வீரத்தை தருகின்ற வீராதி வீர தீரா போற்றுகிறோம். பூலோகம் வந்த பூமகள் நாயகா! பூலோக வாசகா உம்மைப் போற்றுகிறோம். திருமகளின் நாயகா! நாங்கள் அறியாமல் செய்த பிழையை பொறுக்க வேண்டும் என்று போற்றுகிறோம்.

தவ நிலையில் இருப்பதை மறந்து பேசிய வீணான செயலை மன்னித்து எங்களை கரை சேர்ப்பாய் என்று போற்றுகிறோம்.திருமுடியை கண்டு பேராசைக் கொண்டு உலக இன்பமான வாழ்க்கை மீதும் மோகம் கொண்ட படியால் பாவம் பற்றிக் கொண்டதே அய்யா! தேவையில்லாமல் அர்த்தமற்ற வார்த்தைகளை பேசியதால் நாங்கள் செய்த தவறை மன்னிக்க வேண்டும் எம்பிரானே! என்று கண்ணீர் சிந்தி எங்களை கரை சேர்க்க வேண்டும் அய்யா நாராயணரே! உமது பொற்பாதம் பணிந்து கேட்கிறோம் எங்களுக்கு ஆறுதல் தர வேண்டும்.

அய்யா உன் பாதம் சரணடைந்தோம் அருள் புரிவாய் என்று வேண்டினார்கள். இப்படியாக மனமுருகி சிவஞானம் உள்ள சிவபெருமானையும் கருணையுள்ள கருணா மூர்த்தியான ஸ்ரீ கிருஷ்ணா பெருமானையும் போற்றி அவர்களின் உள்ளம் உருகும் படியாக சம்பூரண தேவனோடு சேர்ந்த பரதேவதையும் போற்றி பாடல்களைப் பாடி ஒரு இனிமையான இசை நயத்தோடு ஆசிரியப்பா தன்மையோடு விருத்தம் மாறாமல் பாடினார்கள்.

இவர்கள் போற்றிப் பாடிய பாடல்களைக் கேட்ட நாராயணர், பரதேவதையைப் பார்த்து கூறுவார், மெல்லிசை பாடிய மென்மையான கொடி இடையுடைய பெண்ணே நான் சொல்வதைக் கேள்! உன்னை முதலில் திருமணம் செய்த மணவாளன் உன்னுடைய உலகமாகிய எமலோகத்தில் உன்னை நினைத்து சந்தோஷம் இழந்து தனிமையில் இருந்து ஏக்கத்தால் வாடுகிறான். மனம் வருந்திய நிலையில் உன்னையே எண்ணி எண்ணி வாடுகின்ற கணவனை உதறி தள்ளி விட்டு தவறான முறையில் யாருமறியாமல் சம்பூரணதேவனோடுத் தொடர்பு வைத்திருந்த காரணத்தினால் ஏற்பட்ட விளைவு தான் உன்னுடைய தவம் நிறைவு சரியாக பெறாத காரணமாகும்.

உங்கள் புத்தி தடுமாறும் நிலையை மறந்து திரு முடிக்கு ஆசைப்பட்டு அநியாய சிந்தனைகள் தோன்றிய காரணத்தினால் செய்த தவம் முழுமையான முறையில் முடிக்க முடியவில்லை. கட்டிய மனைவி கணவனுக்கு துன்பம் விளைவித்து வந்ததன் விளைவுதான் தவம் நிறைவேறாமல் போனது. அல்லாமல் இங்கு வேறு எந்த செயலும் இல்லை என்றார் நாராயணர். நீ செய்த தவறான செயல்களுக்கு பிரதிபலனாக கிடைத்த தண்டனை தான் இந்த தவம் தவறிய காரணம். ஆகவே நான் கூறும் யோசனைப்படி நடக்க வேண்டும். நீ செய்த தவத்தை முழுமையாக முடிக்காமல் போனபடியால் அதற்கான தண்டனையாகப் பூலோகத்தில் பிறவி எடுக்க வேண்டியதாகி விட்டது.

கணவனுக்குச் செய்த தோஷம் தீர பூலோகத்தில் பிறந்துதான் ஆகவேண்டும். எனவே நீ பெருந்திரளாக பெருகி காணப்படுகின்ற சான்றோர் இனத்து வழியில் பிள்ளையாய் பிறக்க வேண்டும். நீ செய்த தவறான செயல்களால். மீண்டும் அவனை நீ திருமணம் செய்து முன்வினை கருமத்தை தொலைத்து மனம் வருந்தக் கூடிய அளவில் பலவிதமான துன்பங்களுக்கு ஆளாகி துன்பப்படுவாய். கணவனுக்குச் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து முடித்தாலும், கணவன் மனைவிக்கு இடையில் வரும் இனிமையான பேச்சு வார்த்தைகள் உங்களுக்கு இருக்காது. ஒற்றுமை இல்லாமல் எந்த நேரமும் ஏக்கத்தோடு வாழும் இல்லற வாழ்க்கை தான் அமையும்.

அதற்கு பின் நீ விரும்பியவாறே இந்த பிறவியில் சம்பூரணதேவனைச் சந்திப்பாய். நீங்கள் ஒருவரை ஒருவர் விரும்பிய பாசத்தால் மீண்டும் நீங்கள் வந்து சேரும் நிலை உருவாகும். அப்போது உன்னை யாரென்று சூட்சமமாக அடையாளம் கண்டுபிடித்து உன் மீது ஆசை கொள்வதில் ஏற்பட்ட கர்ம வினையின் பயனாக உங்களுக்கு விதிக்கப்பட்ட விதியின் படி இருவருடைய மனமும் ஒன்றாகி இளமைப்பருவம் தாண்டிய நிலையில் இருவரல்ல ஒருவர் என்று கணவன் மனைவி போல் வாழ்ந்து இருப்பீர்கள். அப்பொழுது உன் வாழ்க்கையில் பலமாற்றங்கள் ஏற்படும். குருவை மறந்து உன்னை மாலையிட்ட சொந்த கணவனையும் கைவிட்டு, தாய் தகப்பன் மற்றும் உள்ள சொந்தங்களை எல்லாம் வேண்டாம் என்று உதறி விட்டு புகுந்த வீட்டு வாசல்படி தாண்டி கணவனோடு வாழ்ந்த குடும்ப வாழ்க்கையும் அடியோடு மறந்து போவாய்.

சொந்த மனை மறந்து சுகங்களை துறந்து மனமகிழ்ச்சி இல்லாமல் மனம் வாடிய நிலையை அடைவாய். சம்பரணதேவனே உன்னுடைய கணவன் என்கிற நிலையில் நீ அவனோடு வாழும் போது மக்கள் கண்முன் நடமாட முடியாமல் நாணமுற்ற நிலையில் இருப்பாய். இத்தனை கஷ்டங்களும் ஏற்பட காரணம், நீ உன்னுடைய முதல் கணவனுக்கும் ஆரம்பத்திலிருந்து செய்து வந்த பாவ வினையாகும். அந்த பாவவினைக்கு மேலும் பல தண்டனையை அனுபவிப்பாய்.

[சொந்த கணவனைக் கைவிட்டு மாற்றான் ஒருவனை விரும்பினாள் ஏற்படும் துன்பம் எளிதாக விட்டுவிடாது. பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் கற்பு உண்டு. அதை ஆண்களும் கடைப்பிடிக்க வேண்டும். கட்டிய மனைவியைக் கைவிட்டு அடுத்தவன் மனைவியிடம் ஆசைப்பட்டு பாவம் செய்தால் அந்த பாவத்தைத் தொலைப்பதற்கு பல துன்பங்களை அனுபவிக்க வேண்டும்.

ஒருவனுக்கு ஒருத்தி என்றும், ஒருத்திக்கு ஒரு கணவன் என்றும் ஒருங்கிணைந்த உயர்வான உத்தம நிலையில் வாழ வேண்டும். இதுவே தான் உயர்ந்த வாழ்க்கை நிலை ஆகும். இதுவே வாழ்வை உயர்வாக்கும். கற்புடைய பெண் தன் கணவன் குறிப்பறிந்து சேவைகள் செய்வாள். அப்படி கணவனின் குறிப்பறிந்து

கடமைகளை செய்வாளேயானால் மழை பெய் என்றால் மழை பெய்யும்.

தன் கணவனை கள்வன் என்ற அரசனுக்கு சத்தியத்தை மீறாத கணவன் என்பதை தெரிவிக்க, என் கணவன் கள்வன் அல்ல என்று எதிர்த்த கண்ணகி மதுரையை எரித்தாள். அது அவள் பத்தினி தன்மையைக் காட்டியது. சத்தியவானின் உயிரை எடுத்துச் சென்ற எமதர்ம ராஜனை தேடி சென்று கணவனின் உயிரை திருப்பி வாங்கிய சாவித்திரியின் கற்புத் திறன் அவள் கணவனுக்கு செய்த கடமை தவறாத கண்ணியத்தை காட்டுகிறது. இப்படித்தான் பெண்கள் வாழ்ந்து கடமை தவறாமல் நாட்டின் இரு கண்களாக வாழ்க்கையினை பாதுகாக்க வேண்டும். அது போல ஆண்களும் ஸ்ரீராமனை போல் வாழ வேண்டும். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற எண்ணம் மாறாதவரே நல்ல பெண்மணி. ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த தத்துவத்தை கடைபிடித்து வாழ்பவள் தான் கடவுளுக்கு நிகரானவன் திருமணம் புரிந்து அமைந்த வாழ்க்கையை நிறைவுடன் வாழ்பவர்கள் தான் உத்தமர்கள்.]

மேலும் நாராயண பரதேவதையிடம் கூறுவார், நீ செய்த கர்ம வினைக்கு தண்டனை அனுபவித்து இரண்டாவது கனவு நாயகனே உன்னுடைய கணவன் என்றும் உலக மக்கள் அறியும்படி ஆக நடந்தாலும் உன்னுடைய முதல் கணவன் கட்டிய மாங்கலியம் தான் உன் கழுத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும். பூமியில் உள்ள மக்கள் எல்லோரும் அறிய அந்த மங்களகரமானது கழுத்தில் அணிந்த படியே நீ காணப்படுவதால் மக்களால் பலவித கேலிப் பேச்சிற்கு ஆளாகி கெட்டப் பெயரோடும் அலைவாய். மீண்டும் மீண்டும் பல விதமான துன்பங்களுக்கு ஆளாவாய்.

எல்லோருடைய கேலிப் பேச்சிற்கும் கிண்டலுக்கும் ஆளாகி உன்னுடைய வாழ்நாளெல்லாம் உன்னை எல்லோரும் நளினமாக பார்பதையும் இழிவாக பேசுவதை கேட்டு வெளியில் தலைதலைகாட்ட முடியாமல் வெட்கி நிம்மதியற்ற நிலையில் தவிப்பாய். மேலும் மிகவும் கவலை கொண்டு மனமுருகி இரத்த போக்கு நோய்க்கு ஆளாகியும் , காச நோய் உருவாகி இடைவிடாமல் கக்கல், இருமல் எனத்துன்பப்படுவாய்.

தொண்டை வீக்கம் உண்டாகி வயிறு உப்பிசம் கொண்டு உணவு உண்ண முடியாமல் மூச்சுத் திணறி காணப்படுவாய்.

உள் மனதில் ஏற்பட்ட ஆர்வத்தால் முறை தவறிப் போன செயல்பாடுகளால் மோசமான நிலையை அடைவாய். இதனால் அக்கம் பக்கம் செல்ல முடியாமல் இந்தக் கர்மத்தை தீர்க்க என்ன செய்வேன் என்று வீட்டில் இருந்தபடியே வீடுபேறு அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் இறைவன் மீது அளவில்லாத பற்று கொண்டவளாக இருப்பாய். அப்போது இறையருளால் உன்னுடையபாவங்கள் மன்னிக்கப்பட்டு ஒரு நாட்டை ஆளும் மன்னனின் மனைவியை போலிருப்பாய். இவ்வாறு பரதேவதை முன்ஜென்ம கர்ம வினைப் பயன்களை எல்லாம் சிவபெருமானும் நாராயணமூர்த்தியின் பரதேவதை இடம் கூறினார்கள். இப்படி எல்லா விவரங்களையும் தெளிவுபடுத்தி உடனடியாக அவளை பூலோகத்தில் எமலோக வழியில் பிறவிச் செய்தார்கள்.

**வினா விடை**:-

1. சம்பூர்ண தேவன் பரதேவதையினுடைய தவத்தை பார்ப்பதற்கு நாராயண மூர்த்தியுடன் சென்றவர்கள் யார்?

   சிவப்பெருமான் மற்றும் தெய்வேந்திரன்

2. தெய்வேந்திரன் தன்னுடைய தலையில் சூடி இருந்த பொய் திருமுடியானது எப்படி இருந்தது?
   நாராயணரின் சங்கு சரம் போல் தங்க நவரத்தினத்தால் ஆன எங்கும் ஒளி வீசுகின்ற வகையில் இருந்தது.

3. நாராயணமூர்த்தி சிவபெருமானோடு சம்பூர்ண தேவரின் தவத்தை பார்க்க செல்லுகின்ற போது சம்பூர்ண தேவன் தவநிலையில் இருந்தானா? தவம் குளறிவிட்டதா?
   தவநிலையில் இருந்தான்.

4. சம்பூரண தேவன் பரதேவதையினுடைய தவம் எப்போது குளறுபடி ஆனது?

தெய்வேந்திரன் உடைய திருமுடியை பார்க்கின்ற போது அவருடைய தவம் குளறுபடி ஆனது.

5. தெய்வேந்திரனுடைய திருமுடியை கண்டவுடன் சம்பூர்ண தேவனுடைய நிலை யாது?
சம்பூர்ண தேவன் பரதேவதையிடம் பெண்ணே அங்கே பார்! தெய்வேந்திரன் தன்னுடைய தலையில் சூடி வரும் அந்த திருமுடியை போல் நாமும் திருமுடிச் சூடி இந்த உலகை ஆள வேண்டும் என்று பரதேவதையோடு மனதோடு மனம் பேசினான்.

6. வானவர் கோன் யார்?
தெய்வேந்திரன்

7. சம்பூர்ண தேவன் பரதேவதையிடம் எப்படிப்பட்ட சிங்காசனத்தில் இருந்து எவ்வாறு ஆட்சிச் செய்ய வேண்டும் என்று கூறினான்?
தென் தலைவ ரத்தின சிங்காசனத்தில் இருந்து இராசதுரைதனமாய் ஆட்சிச் செய்ய வேண்டும் என்றுக் கூறினான்.

8. சம்பூர்ண தேவன் பர தேவதையிடம் தெய்வேந்திரன் சூடிய திருமுடியைப்போல் நாமும் சூடி இந்த நாட்டை ஆள வேண்டும் என்றுக் கூறிய உடனே பரதேவதைக்கு எழுந்த சந்தேகம் எது?
பரதேவதை சம்பூர்ண தேவனிடம் அப்படியே இந்த உலகை ஆள வேண்டும் என்று ஆதி சிவன் படைத்தால் இப்படி படைத்தோர் இறவாது (இறப்பு வராமல்) இருப்பாரோ என்று பரதேவதை கேட்டாள்.

9. பரதேவதை சம்பூர்ண தேவனுடன் இப்படி இந்த உலகாள்வதற்கு இறைவன் படைத்திருந்தால் அப்படிப் படைத்தவர்கள் இறப்பு வராமல் இருப்பார்களா என்று கேட்டவுடன் சம்பூர்ண தேவன் பெருமூச்சு விடும் செயல் எதைக் குறிக்கிறது?
நிறைவேறாத ஆசையைக் குறிக்கிறது.

10. சம்பூரண தேவனும் பரதேவதையும் சிவப்பெருமான் நாராயணமூர்த்தி யினுடைய திருவடியை பணிந்து தொழுது

நின்றவுடன் சிவப்பெருமான் நாராயண மூர்த்தியிடம் கூறியச் செய்தி யாது?
சிவப்பெருமான் நாராயண மூர்த்தியிடம் மாய பெருமானே! இந்த சம்பூர்ண தேவனும் பர தேவதையும் அவர்கள் நின்ற தவத்தை தொலைத்து விட்டார்கள். ஆகையால் அவர்கள் இரண்டு பேருடைய தவம் நிறைவேறவில்லை என்றுக் கூறினார்.

11. சிவப்பெருமான் நாராயணமூர்த்தியிடம் சம்பூர்ணதேவனுடைய தவம்குளறுபடி ஆவதற்குரிய காரணமாக கூறிய செய்தி எது?
சிவப்பெருமான் நாராயணமூர்த்தியிடம் சம்பூர்ணதேவன் தவம் நிறை வேறுகின்ற நேரத்தில் தேவேந்திரனுடைய திருமுடியில் சிற்றின்ப ஆசைக் கொண்டான். ஆகையால் தவம் குளறி விட்டது என்றார்.

12. தவம் குளறுபடியான சம்பூரண தேவன் மற்றும் பரதேவதையினுடைய சிற்றின்ப ஆசையால் தொடர்ந்த கர்மவினை யை போக்க பூலோகத்தில் பிறவி செய்ய வேண்டும் என்பது பற்றி கூறியது சிவபெருமானா? நாராயண மூர்த்தியா?
நாராயண மூர்த்தி.

13. சம்பூர்ண தேவனுடைய தவம் குளறுபடியான செய்தியை எல்லோருக்கும் தெரியும் படியாக சொல்ல வேண்டும் என்று கூறியது சிவபெருமானா? நாராயண மூர்த்தியா?
நாராயண மூர்த்தி

14. சம்பூர்ணதேவனுடைய தவம்குளறுபடியான செய்தியை எல்லோருக்கும் தெரியும் படியாக சொல்ல வேண்டும் என்று கேட்டதற்கு சம்பூர்ணதேவனிடம் உன்சிந்தையில் எண்ணம் எல்லாம் சொல் என்று கூறியது சிவபெருமானா? நாராயணமூர்த்தியா?
சிவப்பெருமான்

15. சம்பூர்ணதேவனுடைய தவம் குளறுபடியான செய்தியை எல்லோருக்கும் தெரியும் படியாக சொல்ல வேண்டும் என்று கேட்டதற்கு சம்பூர்ணதேவனிடம் உன் சிந்தையில் எண்ணம்

எல்லாம் சொல் என்று கூறியதும் சம்பூர்ண தேவனுடைய நிலை என்ன?
தாங்கள் மனதில் நினைத்து கொண்டதை எப்படி அறிந்து கொண்டார்கள் என்று மனம் பதறி நின்றார்கள்.

16. சம்பூர்ண தேவனும் மற்றும் பரதேவதையும் தவம் குளறி விட்டது என்று சிவப்பெருமான் கூறிய தருணம் மனம் பதறியதற்கு காரணம் என்ன?
நாங்கள் இருவரும் பேசிய செய்தியானது மனதோடு மனதாக பேசினோம். இதை இவர்கள் எப்படி அறிந்து கொண்டார்கள் என்று நினைத்து சம்பூர்ண தேவனும் பரதேவதையும் மனம் பதறினார்கள்.

17. நாம் நம்முடைய வாழ்வில் மனதில் நினைப்பதெல்லாம் இறைவனால் அறிந்து கொள்ள முடியுமா?
முடியும். எங்கும் நிறைந்து ஏகமயமாய் இருக்கின்ற இறைவனால் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள முடியும். ஏனென்றால் நம்முடைய மனதுக்குள் இருந்து இறைவன் நம்மை கண்காணித்து கொண்டு இருக்கின்றார்.

18. சம்பூர்ணதேவன் பரதேவதனுடைய வாழ்க்கை உணர்த்தும் வாழ்வியல் செய்தி என்ன?
உலகப்பொருட்களின் மீது பற்று வைத்தால் மீண்டும் பிறவித் தொடரும் என்பதாகும்.

19. பரதேவதை பூவுலகில் பிறப்பதற்கு காரணமாக அமைந்த செயல் எது?
தன்னுடைய புருஷனுக்கு ஆற்ற வேண்டிய கடமையை அவள் சரியாக செய்யவில்லை. அது மட்டுமல்லாமல் சம்பூரண தேவன் மீது இச்சை கொண்டு அவனோடு வாழ வேண்டும் என்று ஆசையோடு வந்தும் அந்த தவநிலையிலும் அவள் குளறுபடி ஆன காரணத்தினால் பூலோகத்தில் பிறவி ஏற்பட்டது.

20. பர தேவதையின் பூவுலக பிறவியானது சந்தோஷமாக இருந்ததா? காரணம் கூறு?

இல்லை. காரணம் அவள் முந்தைய புருஷனுக்கு செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் செய்து மிகுந்த அழுத்த துன்பப்பட்டு எந்த ஒரு பந்த பாசமும் கிடைக்காமல் ஏங்கி தவித்தாள்.

21. பரதேவதையினுடைய வாழ்க்கை நமக்கு உணர்த்தும் செய்தி யாது?
கடமையை சரியாக செய்யவில்லை என்றால் முக்தி பேறு இல்லை என்பதாகும்.

22. பரதேவதை முந்தைய புருஷனை விட்டு விட்டு சம்பூரண தேவனை நாடி வந்தாள். அவளுடைய வாழ்க்கையில் நல்ல இனிமையாக வாழ முடிந்ததா? காரணம் கூறு?
இல்லை காரணம் அவள் சம்பூர்ண தேவனோடு இனிமையாக வாழ முடியாமல் பல விதமான நோய்களுக்கு உட்பட்டு அந்த வாழ்க்கையை வெறுக்குகின்ற ஒரு நிலைக்கு அவள் தள்ளப்பட்டாள்.

23. இன்றைய கால பெண்களுக்கு பரதேவதையினுடைய வாழ்க்கை உணர்த்தும் பாடம் எது?
கணவன் சரி இல்லை என்று கணவனை மறந்து இன்னொருவனோடு வாழ நினைத்தால் அந்த வாழ்வில் நிம்மதி அற்ற ஒரு நிலை உருவாகும்.

24. பரதேவதை தன்னுடைய வாழ்க்கையில் என்ன என்ன துன்பங்களை அனுபவித்தாள்?
குருவை மறந்தாள் கொண்டவனை(கணவனை) தான் மறந்தாள், தாய்த் தகப்பன் மாமன் தமையன் தன்னை மறந்தாள், வாயில்படி மறந்து சொந்த மனை மிக மறந்தாள், சிவ சோபனம் மறந்தாள், எதிலும் சந்தோஷம் கிடைக்காமலும், முன் புருஷன் தனக்கு மூலக்கரு கேடு( அவனுக்கு துன்பங்களை கொடுக்கும் வகையில் இவள் செய்த செய்கைகள்) அனைத்தும் இப்புருஷன் தானே என்று சம்பூர்ண தேவனோடு இருந்து அனுபவித்தாள். சம்பூர்ண தேவனோடு வாழும் போது ஊர் மக்களால் பல கேலிப் பேச்சுக்கு ஆளாகி மேலும் பல துன்பங்களை அனுபவித்து சம்பூர்ண தேவனோடும் வாழ முடியாமல், உடலில் பல தொந்தரவுகள்

தோன்றி இனிமேல் வாழ்வே வேண்டாம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டு, இனிமேல் இறைவனே தஞ்சம் என்ற நிலையில் உலக வாழ்க்கையில் வெறுப்பு தோன்றி வாழ்ந்தாள்.

25. சிவப்பெருமான் பரதேவதையிடம் எப்போதும் முக்தி நிலையை அடைய முடியும் என்று கூறினார்?
இந்த உலக இன்பங்களை எல்லாம் ஒன்றும் இல்லை ஒரு மாயை என்று உணர்ந்து இறைவனே தஞ்சம் என்ற நிலையில் வாழ்கின்ற போது முக்தி நிலையை அடைய முடியும் என்றுக் கூறினார்.

26. "**வீட்டை விரித்து மேலே தெய்வ வழியாய் நாட்டை அரசாண்டு நாச்சியார் போலிருப்பாய்** " இதில் வீட்டை விரித்து என்பது எதை குறிக்கிறது?
உலக இன்பங்களை துறந்து இறைவனே தஞ்சம் என்று வாழும் நிலை ஆகும்.

27. "**வீட்டை விரித்து மேலே தெய்வ வழியாய் நாட்டை அரசாண்டு நாச்சியார் போலிருப்பாய்** " யார் யாரிடம் கூறியது?
சிவப்பெருமான் மற்றும் நாராயண மூர்த்தி பரதேவதையிடம் கூறியது.

## அகில வாசகம்

விருத்தம்

ஆறுசெஞ்சடை சூடிய ஐயனே அலையிலேதுயி லாதி வராகவா
நீறுமேனி நிரந்தரம் பூசிவா நீசிவாசிவ மைத்துன ராகவா
வீறுசத்தி மணவாள ரானவா வீரலட்சுமி மன்னரரி ராகவா
ஏறுமீதினி லேறிடு மீஸ்வரா எமையாட்கொள் ளும்நாரணா போற்றியே

விருத்தம்

சீதமாங்குணச் செல்வனே போற்றி சிவசிவா சிவனே போற்றி
நீதவா நட்பெய்துவா போற்றி நீசிவா சிவராகவா போற்றி
மாதவா அரிகேசவா போற்றி வல்லனே அரிசெல்லனே போற்றி
ஆதவா அரிநாரணா போற்றி அனாதியேயுன் றன்போற்றிப் போற்றியே

விருத்தம்

அய்யனேதவம் யானிற்கும் போதிலே
அந்திராணி மன்னனிந்திர னானவன்
பொய்யின் மாய்கைநினை வதினாலவன்
பொற்பக்கிரீடமீ துற்பனத் தாசையால்
மெய்யின்ஞா னத்தவம் விட்டுவாடினேன்
வித்தகாவுன் சித்த மிரங்கியே
செய்யும் பாவவினை தவிர்த்தாண்டருள்
சிவசிவா சிவசிவா சிவாபோற்றியே

விருத்தம்

போற்றியென் றேத்தித் தேவன் பொற்பதம் வணங்கி நிற்க
ஆத்தியே சூடும் வேதன் ஆகமே மகிழ்ச்சை கூர்ந்து
தீத்திய ஆய னோடு செய்தியே தெனவே கேட்க
நாற்றிசை புகழுந் தெய்வ நாரண ருரைக்கின் றாரே

தேவன் வணங்கித் திருப்பாதம் போற்றிடவே
ஆயனோ டந்த ஆதிசிவ மேதுரைக்கும்
அச்சுதரே தேவனுக்கு ஆன வளமையது
நிச்சயமாய்ச் சொல்லி நீரனுப்பு மென்றுரைத்தார்
அப்போது நாரா யணரு மகமகிழ்ந்து
செப்புகிறோ மென்று தேவனுக்கங் கேதுரைப்பார்
கேளாய்நீ தேவா கீழான மங்கையரைத்
தாழாத மேல்வகையில் சரியாக்க வேணுமென்று
நின்றாய் தவத்தில் நினைவொன்றைத் தானாட்டி
சண்டாளா நீநினைத்த நினைவுதவத் தொத்திடுமோ
சூழ வினையறுத்துச் சுருதிநே ருள்ளாக்கி
நீளநூ லிட்டு நீதவசு நிற்கையிலே
ஆசை நினைவாமோ அறிவுகெட்ட மாதேவா
பாச மறுத்தல்லவோ பரகெதியைக் காணுவது
ஏதுகா ணுன்றனக்கு இந்நினைவு வந்ததினால்
மாது பிறந்ததுபோல் வையகத்தில் நீபிறந்து

இந்த நினைவதற்கு இனிப்பிறந்து நீசிலநாள்
தொந்துயர மெல்லாம் தொல்புவியி லேதொலைத்துக்
கண்டந்த மங்கையரைக் கருவால் வசமாக்கிக்
கொண்டு திரிந்து கோதையரின் தன்னாலே
மிஞ்சிய தீனம் மேலுக்கு உண்டாகி
நஞ்சுதின் றானாலும் நாண்டுகொண் டானாலும்
உன்சீவன் மாய்க்க உனக்கு மனதாகிப்
இன்னுஞ்சில நாள்கழித்துப் பெண்ணோ டுறவாடித்
தன்னோவியம் போல் தானிருக்கும் நாளையிலே
உன்துயரந் தீர்த்து உன்னையெடுத் தென்மகவாய்
என்துயர மெல்லாம் யானேநீ மாற்றல்செய்து
என்வரிசை தானம் எல்லாமுனக் களித்துப்
பொன்னரசு தந்து புவியாள வைத்திடுவேன்
என்றுமா கிருஷ்ணர் இப்படியே சொல்லிடவே
அன்றந்தத் தேவன் அவரடியைத் தான்போற்றி
அய்யாவே பூமிதனில் அவதரிபோ என்றீரே
பொய்யா னகலியன் பூமிதனி லேபிறந்தால்
பிறந்த வழியும் பிதிருமந் தக்குலமும்
அறந்தழைக்கு மாலே அதுவுமென் னாற்கெதிதான்
பெற்றுக்கொள் ளும்படியாய்ப் புத்தி கொடுத்தருளிப்
பற்றுத லாகப் பலன்கொடுப்போ மென்றுசொல்லும்
அல்லாம லென்னைவந்து ஆட்கொள்ளும் நாளதுதான்
எல்லாம் விவரமதாய் இயம்பி யனுப்புமையா
அப்பொழு தந்த ஆதிநா ராயணரும்
செப்புகிறா ரந்தத் தேவன் தனக்குத்திடம்
தெச்சணா பூமிதனில் தேசபர சோதனைக்கு
நிச்சயமாய் நான்வருகும் நிசத்துக் கடையாளம்
பூமியி லோர்திக்குப் பொருந்தி மிகவாழும்
சாமிவே தமறந்து சுழல்வேத முண்டாகும்
சாதி வரம்பு தப்பி நிலைமாறும்
பாரிகட்கு மூப்புப் பார்மீதி லுண்டாகும்
நீசக் குலங்கள் நெளுநெளௌனப் பூமிதனில்
தேசமிட்ட தெண்டந் தொடர்ந்து பிடிப்பார்கள்
வானத் திடிகள் வருடவரு டந்தோறும்
நீணிலத்தில் வீழும் நின்று மலைமுழங்கும்
பூமிமுழங்கும் பொழுதுமிகச் சாய்ந்துவரும்
சீமை தென்சோழன் சீர்பயிரு மேவிவரும்

இலைகள் கருகும் இருவேதம் பொய்யாகும்
தலைக்கண் படலம் தட்டழிய ஓடிநிற்கும்
நச்சேத் திரமுதிரும் நடக்கும் வழிகுறுகும்
பொய்ச்சேத் திரக்குருக்கள் பூமிதனில் மேவிவரும்
நவ்வா துலுக்கு நாட்டில் கலசல்வரும்
சிவ்வா லயங்கள் தேய்ந்து சுவரிடியும்
கிணறு பாழாகும் கீழூற்றுப் பொய்யாகும்
இணறு பெருத்து ஏங்குவாரே மனுக்கள்
மனுக்கள் தங்களுக்கு மாகலச லுண்டாகும்
முனக்கத்துரோகி உலகில் மிகவுண்டாகும்
மாமோக ஆசையினால் மாசண்டை யாகிவரும்
காமோக வெறியால் கனபழிக ளுண்டாகும்
மாதாவைப் பிள்ளை வைப்பு நினைத்துநிற்கும்
தாதாவை வேலை சந்ததிகள் கொண்டிடுவார்
மாடாடு வயிற்றில் மனிதர்போல் தான்பிறக்கும்
கோடா னதுபெருத்துக் கொல்வார் சிலபேரை
காணிக்கை வேண்டல் கைக்கூலி தான்மீறும்
மாணிக்கத் தங்கம் வையிர மிகமறையும்
நீணிலத்தில் பேய்கள் நிரந்துமிகக் கோட்டிசெய்யும்
மாநிலத்தில் வேளாண்மை மழையில் மிகக்கேடுவரும்
பேதையர்கள் பிள்ளை பிறக்கு மதிசயம்போல்
கோதையர்கள் கொங்கை கூடாம லேவாழ்வார்
கூடப் பிறப்பைக் கொடும்பகைபோ லெண்ணிடுவார்
ஊடப்பிறப்பை உள்நினைப்பார் வைப்பாக
வான முறுமும் மழைகீழ்ச் சொரியாது
தான மழியும் சாஸ்திரங்கள் பொய்யாகும்
ஈனருக்குக் காலம் ரெம்பரெம்ப வுண்டாகும்
வீணர் பெருப்பார் வீடதனைக் கெடுப்பார்
தாணருட வேதம் தலையழிய விட்டிடுவார்
பொய்வேதம் பூமிதனில் பெருத்துமிக வுண்டாகும்
மெய்வேதந் தன்னை விரும்பா திகழ்ச்சிசெய்வார்
கள்ளர் பெருப்பார் கறியுப்பு மேமலியும்
கொள்ளையாய்ச் சம்பை கோடாமுக் கோடியுமாய்
நாணி யிறப்பார் நஞ்சித்தின் றேயிறப்பார்
கேணிக்குள் ளேயிறப்பார் கீறிக்கொண் டேசாவார்
வயிர முழுங்கி மாள்வார் சிலபேர்கள்
துயரம் பொறுக்காமல் தோயமதி லேவிழுவார்

ஈக்கள் பெருகும் எறும்பு மிகப்பெருகும்
காய்கள் பெருகும் கஞ்சா அபின்பெருகும்
சன்னாசி நிஷ்டை தவறி யலைவார்கள்
ஒன்னாமது சாதி உலைமெழுகு போலலைவார்
கட்டழிந்து பெண்கள் கற்பு மிகத்தவறும்
சட்ட மழியும் சந்தியம்பல மிடியும்
கூட்டங் குலையும் குடும்பம் பகையாகும்
நாட்டை யரசாங்கம் நாலுரண்டு மூன்றாகும்
கோட்டை யழியும் குச்சிக்கட் டைமதிலாம்
நாட்டையறுக்கும் நாதனுட சக்கரந்தான்
சீவசெந் தெல்லாம் தீனில்லாத் தட்டழியும்
சூவை பெருக்கும் சூறா வளிமீறும்
அக்கினியால் தண்ணீரால் அநேக சீமையழியும்
முக்கியமாய் லோகமதில் வாந்தி மிகமீறும்
இப்படித்தா னல்லாமல் இன்னு மநேகவளம்
செப்பத் தொலையாது செப்புவேன் பின்னுனக்கு
நீகேட் டதற்கு நிலையாக இத்தனையும்
நான்தேட் டமாக நாடியுன் னோடுரைத்தேன்
உன்பேரால் நானும் உள்ளாசை கொண்டிருந்துன்
என்பேரால் நீயும் என்சொர்க்கம் சேரனுமே
சொன்னே னுனக்குச் சொல்லுவே னின்னமுமே
என்ன இனிப்பிறக்க ஏதுனக்குச் சங்கடங்கள்
என்றுரைக்க நாதன் இசைந்ததே வனுரைப்பான்
அய்யாவே யென்னுடைய ஆதித் திருவுளமே
பொய்யா னகலியில் போய்ப்பிறக்கச் சொன்னீரே
சாதி பதினெண்ணாய்த் தான்பிரித்தா னேநீசன்
ஆதித்தா திதனிலே அமையுமையா என்கோவே
அல்லாம லுன்றனக்கு ஆதிவரை யெந்நாளும்
நல்லாகத் தொண்டுபண்ணி நவ்வியிருக்கு மனுவில்
படையுமையா யென்றன் பிதாவே யெனப்பணிந்தான்
குடையொன் றாற்பெரிய குருவு மகிழ்ந்துரைப்பார்
நல்லதுகாண் தேவாநீ நம்மக்கள் ஏழ்பேரில்
வெல்லமர் கோன்வாழும் வெற்றிதெய்வ லோகவித்தாய்
அவ்வழியி லம்மனுவில் ஆனசான் றோர்குலத்தில்
மெய்வழியி லங்கே மிகப்பிறக்கப் போநீயென்றார்
நல்லதுதா னென்று நவிலுவான் தேவனுமே
வல்லவரே மூவருக்கும் மைத்துனராய் நிற்போரே

என்னைப் பிறவி இப்போது செய்யுமென்று
வன்னத் தேவாதி வணங்கிநின்றான் மாயவரை

ஆத்ம ஜெயம்

அப்பொழுது அய்யா நாராயணர் மகிழ்ந்து
முப்பொழுது வுள்ள முறைமையது கூறலுற்றார்
ஆறுதரம் நம்மை அகம்வைத்துக் கொண்டசடம்
பேறுபெற்ற தில்லையே பேறுநா மீந்திலையே
அச்சடல மம்மலையில் அருந்தவசு பண்ணினதே
இச்சடல மீடேற இந்தநாள் வந்துதென்று
நற்சடலமானதை நருக்கென்றளித்து விட்டு
தேவன் சடலமதைத் திக்கென் றழித்துவிட்டு
மூவர் நடுவருட முச்சடலக் கூடதையும்
தேவருக்கு அதிபதியாம் திருமால்ஆனவரும்
வரவழைத்து வாருமென்று மறையோரைத் தானேவி
விரைவாக வாருமென்று விடைகொடுத்தா ரெல்லோரும்
நடந்து மறையோர் நல்ல மலைபார்த்துச்
சடம் வீற்றிருந்த தங்கமலை மீதில்வந்தார்
மலைமீதில் வந்து மலைப்புதுமை தான் பார்த்து
அலைமீதில் வாழ்துவரா ஆனபதி தன்னுடைய
வடவாசல் நேரே வாழு மலையிதுதான்
தடவரை யிம்மலையில் தானிருக்கும் நதிகள்
தங்கக்கிணர் வங்கக்கிணர் தாம்பிரக் கிணறுடனே
சங்கமகி ழிம்மலையின் தடாகமிது நன்றெனவே
கரைகாணாத் தேவர் காட்சியிடு மிம்மலைதான்
விரைவான மாமுனிவர் வீற்றிருக்கு மிம்மலைதான்
மரித்தோரைத் தானெழுப்பும் வாய்த்தசஞ்சீ விவளரும்
பரித்தான மிம்மலையின் பகுத்துரைக்கக் கூடாது
என்றுசொல்லித் தேவர் ஏற்றமலைக் குள்ளேகி
நன்றுநன் றென்று நாடியவர் பார்க்குகையில்
கண்டாரே காயாம்பூ கண்ணர்முக் கூடதையும்
கொண்டாடிக் கூடதையும் குளிர்ந்தரத மீதேற்றி
நடந்தார் கயிலை நாதர்திருக் கூட்டமதில்
வடந்தார மார்பன் வாய்த்த அரிநாரணரும்
பார்த்துச் சடலமதைப் பதிந்தமுகத் தோடணைத்துத்
தேற்றி உயிர்க்கொடுத்துச் செப்புவார் கூடுடனே

எடுத்த பிறப்புக்கு எல்லாமெனைச் சுமந்து
அடுத்து மூவுலகும் அங்கங்கே கொண்டேகிப்
பூமி கடலும் பொருப்புப்பூ லோகமெல்லாம்
நேமித் தெனைச்சுமந்து நேட்டமுடன் திரிந்தாய்
நீசெய்த நன்றி நினக்குரைக்கக் கூடாது
நானுனக்குச் செய்யும் நன்றி மிகக்கேளு
இத்தனை நாளும் எனைச்சுமந்து பாடுபட்டாய்
புத்திரனைப் போல பெரிய சம்பூர்ணனை
சுமந்துவருவாய் கடலில் சொர்க்கங் கொடுக்கவேணும்
அமர்ந்த முகூர்த்தமதில் அங்குன்னை நானெடுத்து
உன்தனக்குப் புத்தி உபதேசங் களுரைத்து
எந்தனோடு எல்லாரும் இன்பமாய் தவசிருந்து
சிவநாராயணரை சிறுமதலை குண்டராக்கி
நவசோதனைக்கு நாட்டுக் கனுப்பி வைத்து
புத்திரனாய் நீயெனக்குப் பெரிய தெய்வவுயிரில்
பிறந்து புவிமீதில் பின்னுஞ்சில நாள்க்கழித்து
சிறந்த முகிர்த்தமதில்ச் சேர்த்தேயுனையெடுத்து
உன்தனக்குப் புத்தி உபதேசங் களுரைத்து
என்றன் துயரமாற்ற யுகசோதனைக் கனுப்பி
உன்றன்துயர மாற்றி உகத்துயர மும்மாற்றி
என்றன்துயர மாற்றி ஈசர்துயரம் மாற்றி
கலியை யறுத்துக் கனாப்பயங்கள் தானறுத்துச்
சலிவில்லாத் தர்ம தங்கநவ ரத்னபதி
முத்துநவ ரத்தின முடியுனக்கு நானருளி
எத்திசையு மெய்க்க ஏற்றமனு அன்போர்கள்
கட்டியங் கூறிக் காட்சியிட்டு வுன்றனக்கு
எட்டுத்திசை போற்ற ஏற்றகுடை யொன்றுதந்து
அரசாண்டு நீயும் அழியாத் திருவுளம்போல்
வீரசான்றோர் சூழ வீரக் கொடிநிறுத்திச்
செங்கோற்கு தர்ம சிவசெங்கோ லுமருளி
எங்கோ லரசு என்நாமச் சக்கரத்தால்
சீமையைம்பத் தாறுமுன் சொல்லொன்றுக் குள்ளாக்கிப்
பூமுகச்சிங் காசனமும் பொன்முகச்சிங் காசனமும்
கோமுகச்சிங் காசனமும் குணமுகச்சிங் காசனமும்
மாமுகச்சிங் காசனமும் மயில்முகச்சிங் காசனமும்
அன்னமுகச் சிங்கா சனமீதோ டாகவேதான்
பொன்னம் பலம்போல் பெரியசிங் காசனந்தான்

முப்பத்தி ரண்டும் முழுது முனக்கருளி
செப்பொத்த மாணாக்கர் சேவிக்க வுன்றனக்குத்
தருவேனா னுன்னுடைய தாயார்பே ராணையதாய்
அரசாளவைப்பேன் என ஆதிமிகவுரைத்து
தேவனுயிரை திக்கென்று தான்பிடித்து
மூவர்நடுவருட கூட்டிலிட்டு முகத்தேவன் கூடழித்தார்
என்றையா நாதன் எடுத்தவர்க் கேவுரைக்க
நன்றெனவே வானோர் நற்பூரணனைக் கொண்டாடிப்
பேறுபெற்ற சென்மம் பிராணனிது நன்றெனவே
பூர்வத்தி லுள்ள பூசாந்திர மிவ்வளமை
என்னதவஞ் செய்தாரோ இத்தேவன் தாய்தகப்பன்
பொன்னப்ப நாரணர்க்கு பிள்ளையென வந்துதிக்க
நாரண ரைப்பெறவே நல்ல தசரதரும்
பூரணமாய் நின்றதவம் புகன்றிடவே கூடாது
பன்னீரா யிரம்வருசம் பாரத் தவசுபண்ணி
முன்னூறு வாரமதாய் உலகளந்தோர் ராமருரு
எண்ணாயிரத்தில் எடுத்தாரொரூராமஉரு
கண்ணாளர் தம்கூட்டில் கற்பகம்போ லித்தேவன்
சொர்க்கலோகம் போறார் சொர்ணமுடிபெறவே
ஆர்க்கும் கிடைக்காது அந்தலோக முடியின்
மதலையாகப் பிறந்து சொர்க்கந்தான் சேரவென்று
கதலிவாய் நாதன் கற்பித்தா ரிப்படியே
ஆருபெற்ற பேறும் அல்லப்பே றிப்பலன்தான்
பேறுபெற்ற வரிவர்தான் பிறந்த இனமதிலே
நாம்பிறந்தா லும்பெரிய நலங்கிட்டு மென்றுசொல்லித்
தாம் பிறப்போமென்று சான்றோராய்த் தான்பிறந்தார்
அவர்கள் பிறக்க ஆனதெய்வப் பூரணனை
திவசமது பார்த்துச் செய்தார் பிறவியது
செய்யச் சிவமும் சிவவேதனும் மகிழ்ந்து
வைய மளந்த மாலும்பிறவி செய்தார்
கர்மக்கடன் கழிக்க கலியுகத்திலே பிறக்கத்
தர்மச்சம் பூரணனைத் தரணிப் பிறவிசெய்தார்
செய்த சடமதையும் சுமக்கச் சடம்பார்த்து
மெய்யிசையும் நாதன் மேதினியில் செய்தனராம்
சடம்பிறக்க லோகம் தட்டுமிக மாறி
உடன்பிறக்கச் செய்தார் உலகளந்தோர் கற்பினையால்
அன்று பிறவிசெய்தார் அவனிசோ தனைக்கெனவே

## அகில வாசக விளக்கம்:

அதன் பிறகு பஞ்சபூத சக்திகளையும், உலக ஐஸ்வரியங்களையும் தன்னகத்தே அணிந்துகொண்டு சங்கு சக்கரத்தை கையில் ஏந்திய திருமால், தெய்வ லோகத்தை சேர்ந்த சம்பூரண தேவனைப் பார்த்து கூறுவார் சம்பூரணா பரதேவதை பூலோகத்தில் பிறந்து பிறவி பலனாகிய கர்மவினையை அனுபவிக்க போய் பிறந்துவிட்டாள். மேலும் நீ உன்னுடைய விருப்பத்தை சொல்கிறாயா அல்லது வேறு ஏதாவது காரணங்கள் உள்ளதா என்று கேட்டார். நாரயண மூர்த்தி சம்பூரண தேவனிடம் கேட்டதும் சம்பூரணம் தேவன் சீரும் சிறப்பும் அடையவேண்டி சிவபெருமானையும் திருமாலையும் திருமகளையும் புகழ்ந்து பாடலாகப் பாடினான்.

**"ஆறுசெஞ்சடை சூடிய ஐயனே அலையிலேதுயி லாதி வராகவா**
**நீறுமேனி நிரந்தரம் பூசிவா நீசிவாசிவ மைத்துன ராகவா**
**வீறுசத்தி மணவாள ரானவா வீரலட்சுமி மன்னரரி ராகவா**
**ஏறுமீதினி லேறிடு மீஸ்வரா எமையாட்கொள் ளும்நாரணா போற்றியே"**

சிவப்பெருமானையும், நாராயண மூர்த்தியையும் போற்றி பாடினான் ஆறுசெஞ்சடை சூடிய சிவனே கடலலை மேல் பள்ளி கொண்டிருக்கும் ஆதிநாராயணா, என் நேரமும் உன் மேனி எல்லாம் திருநீறு பூசி இருக்கும் சிவமே, சிவசிவா என்கிற மந்திரத்திற்கு மயங்கி நிற்கும் மானுட மைத்துனரே! வெற்றி மாலை சூடும் சக்தியாகிய பார்வதியின் கணவரே! வீர லட்சுமி தேவிக்கு துணையான ஹரி ஹரி கோவிந்தா! காளை வாகனத்தில் பவனி வருகின்ற ஈஸ்வரா! என்னை ஆளும் நாராயணா உங்களை போற்றுகிறேன் அய்யா சிவசிவா அரகரா என்று சிவப்பெருமானையும், நாராயண மூர்த்தியையும் போற்றி பாடினான்.

**"சீதமாங்குணச் செல்வனே போற்றி சிவசிவா சிவனே போற்றி**
**நீதவா நட்பெய்துவா போற்றி நீசிவா சிவராகவா போற்றி**
**மாதவா அரிகேசவா போற்றி வல்லனே அரிசெல்லனே போற்றி**
**ஆதவா அரிநாரணா போற்றி அனாதியேயுன் றன்போற்றிப் போற்றியே"**

உள்ளத்தை குளிர வைக்கும் குணம் கொண்டவரே உம்மை போற்றுகிறேன். சிவ சிவா உன்னைப் போற்றி வணங்குகிறேன். நீதி நேர்மையோடு நீதநிலை தவறாமல் உலகத்தை சமநிலை படுத்தி காத்துக் கொண்டு இருப்பவரே உம்மைப் போற்றுகிறேன். நீயே சக்தியாகவும் சிவனாகவும் இருந்து இந்த உலகை இயக்கி கொண்டிருக்கும் சிவ சிவராகவா உம்மைப் போற்றுகிறேன். மாதவா அரிகேசவா கோபாலா வலிமையான சக்தி பொருந்திய ஹரி ஹரி நாராயணா உன்னைப் போற்றுகிறேன். உலகிற்கே ஒளி கொடுக்கும் சூரியநாராயணா உம்மை போற்றுகிறேன். ஆதியும் அந்தமும் இல்லாமல் எங்கும் நிறைந்து ஏகமயமாய் இருக்கும் மாயனே! அற்புதங்கள் புரிகின்ற மாயப் பெருமானே நான் உன்னை போற்றுகிறேன்.

"**அய்யனேதவம் யானிற்கும் போதிலே அந்திராணி மன்னனிந்திர னானவன்**
**பொய்யின் மாய்கைநினை வதினாலவன் பொற்பக்கிரீடமீ துற்பனத் தாசையால்**
**மெய்யின்ஞா னத்தவம் விட்டுவாடினேன் வித்தகாவுன் சித்த மிரங்கியே**
**செய்யும் பாவவினை தவிர்த்தாண்டருள் சிவசிவா சிவசிவா சிவாபோற்றியே**"

நான் உம்மை நினைத்து தவ நிலையில் நின்று கொண்டிருந்தபோது இந்திரலோகத்து இந்திராணியின் கணவனே பார்த்தவுடன் கலி எண்ணமாகிய ஆசை என்னை சூழ்ந்து கொண்டதால் தேவேந்திரன் தலையில் அணிந்திருந்த அழகு வாய்ந்த ஜொலிக்கும் தங்க கிரீடத்தில் மீது எனக்கு ஆசை ஏற்பட்டது. அதனால் உண்மையான ஞானத்தை அடையும் தவத்தை முடிக்க முடியவில்லை விஷ்ணுவே! என் குறைகளை களைந்து மனமிரங்கி நான் செய்த பாவங்களை மன்னித்து எனக்கு வீடுபேறு அளித்து என்னை ஆட்கொள்வீர் ராகவா! நான் செய்த பாவவினைகளைத் தவிர்த்தாண்டருளும் அய்யா சிவசிவா சிவசிவா சிவாபோற்றியே என்று உம்மைப் போற்றுகிறேன்.

இவ்வாறுப் போற்றிப் பாடிய சம்பூரண தேவன் அய்யா உம்மை போற்றுகிறேன் போற்றி போற்றி என்று புகழ்ந்து பாடிய தேவன் தன்னுடைய தவறைப் பொருத்துக் கொள்ளும்படி புகழ்ந்து பாடி சிவ விஷ்ணுவின் பாதத்தில் விழுந்து வணங்கினான். சம்பூரண தேவன் புகழ்ந்து பாடிய பிற்பாடு , அசையும் அசையாப் பொருளிலும், ஆயக்கலை அறுபத்து நான்கிற்கும் நாயகனாகிய இறைவன், வேத ஆகம நூலுக்கு ஆணிவேராய் திகழும் சிவசங்கரன் மனம் இரக்கம் கொண்டு தீர்ப்புச் சொல்லும் திருமூர்த்தியாகிய பெருமானிடம் மைத்துனரே சம்பூரண

தேவனுக்கு என்ன தீர்ப்பு வழங்கப் போகிறீர் என்பதை என்னிடம் சொல்லுங்கள் என்றார் சிவபெருமான்.

சிவபெருமான் நாராயணனை பார்த்து கூறுவார், நான்கு திசையும் புகழ் பெறவே செயல்புரியும் நாராயணரே! நடு தீர்ப்பு வழங்கி நன்மை சேர்க்கும் வையகம் மலர்ந்த மாயவரே! சம்பூரண தேவன் உன்னையும் என்னையும் மரியாதையோடு போற்றி துதித்துப் பாடி தானே தன் தவறை உணர்ந்துள்ளான். எனவே அவனுக்கு எப்படிப்பட்ட வரம் கொடுத்து, எந்த விதமாக வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க நினைக்கிறேன் என்பதை எனக்கு வாக்கு தவறாமல் உறுதியாக சொல்ல வேண்டும் என்றார் சிவபெருமான். உடனே வாக்கு மாறாத நாராயணர் உறுதிமொழியாக நல்லது நடக்க வேண்டும் என்று நல்ல முடிவு சொல்வேன் மைத்துனரே! என்று சிவபெருமானைப் பார்த்து கூறுகிறார்,

சம்பூரண தேவனே! நாங்கள் சொல்வதை நீ கேட்பாயாக! நீ மாற்றான் மனைவி மேல் இச்சை கொண்டு எமலோகத்தில் வாழ்ந்த பரதேவதையை உன் நிலைக்கு உயர்த்த உயர்ந்த தவம் இருந்தாய். ஆனால் தவ நிலையில் நிற்கும் போது தடுமாற்றம் கொண்டு பெரும் ஆசைப்பட்டது உன் தவத்திற்கு பெருமை சேர்க்குமா? உலக பொருளில் மனதை வைத்து ஆனந்தம் தேடும் மனிதன் ஒரு குருடன். ஆனந்தமே ஆன்மாவின் இயல்பு என்று அறிந்தவன் ஒரு அறிவாளி.

அப்படி அறிந்த அறிவாளி ஆகிய நீ இந்த உலகப் பொருட்களின் மீது ஆசை படலாமா? உன்னை கரை சேர முடியாதபடி பாவ வினைகள் சூழ வழி வகுத்து விட்டது அல்லவா? தீமையை அகற்ற இறை மந்திரத்தை உச்சரித்து ஓம் என்ற சுவாசத்தை உள்ளிழுத்து மெதுவாக அதை வெளியிட்டு மனதை ஒருநிலைப்படுத்தி நிற்கும்போது உன் மனதை அலைக்கழிக்கும் படியாக திருமுடி மேல் ஆசைப்பட்டது நியாயமா சம்பூரண தேவனே!

உலக பந்த பாசங்களை எல்லாம் மறந்து தவம் செய்தால் தானே வீடுபேறு பெற்று உன் விருப்பம் நிறைவேறும். வேண்டியது கிடைக்கும். விரும்பியது நடக்கும். ஆனால் உன்னுடைய தவத்தில் தவறு நடந்து விட்ட படியால் அறிவுகெட்ட உனக்கு . இப்போது நீ

மீண்டும் பிறவி எடுப்பதற்கான கர்மாவைப் பெற்று விட்டாய். எமலோக பரதேவதை உலகத்தில் பிறந்தது போல் தேவலோகத்து சம்பூர்ண தேவனாகிய நீயும் பூலோகத்தில் பிறக்கவேண்டும். தவநிலையில் நின்றிருந்தபோது தவறு செய்த காரணத்தினால் கர்மவினை பலனாக நீயும் சிறிது காலம் பூலோகத்தில் பிறந்து உன்னுடைய முன்வினை பாவங்களையும், ஆசைகளையும் இந்த பூமியில் வாழ்ந்து அனுபவித்து தொலைக்க வேண்டும்.

அப்போது பூலோக பிறவி எடுத்த பரதேவதையை கண்டு உனக்கு விதித்த விதிப்படி, கருவிலே வசமாகி உன்னோடு சேர்ந்து வாழும்படியான ஒரு நிலை வரும். அப்போது அவள் மீது ஆசை கொண்டு பின் இருவரும் சேர்ந்து இருவர் ஒருவரென வாழ்வீர்கள். அந்த வேளையில் உலக மக்களால் அவமானப்படுத்தப்பட்டு அலைந்து திரிந்து கடைசியில் வெளியே நடமாட முடியாமல் பல பிரச்சனைகள் ஏற்படும். அதனால் விசம் அருந்தலாமா? அல்லது தூக்கிட்டு சாகலாமா என்று வாழ்க்கையை வெறுக்கும் நிலைக்கு தள்ளப்படுவீர்கள். உயிரோடு உலகத்தில் நிம்மதியாக வாழ விருப்பம் இல்லாத மனநிலை உருவாகும். வாழவும் மனமில்லாமல் சாகவும் முடியாமல் தத்தளித்து வாழும் நிலை உருவாகும்.

இத்தனை கஷ்டங்களுக்கு பிறகும் அவளோடு நட்புறவு கொண்டு உறவாடி சொந்தமான அழகு தேவதை போல் நினைத்து பாசமாய் பற்றோடு வாழ்வாய். அப்படி கஷ்டப்பட்டு துன்பங்களை அனுபவித்து வருகின்ற போது உன்னுடைய வேதனை நிறைந்த வாழ்க்கையை விடுவித்து, உன்னை என்னுடைய பிள்ளையாக பேரன்போடு சேர்த்துக் கொள்வேன். என்னுடைய துன்பங்களை எல்லாம் தீர்ப்பதற்காகவே நானே உனக்குள் ஐக்கியமாகி நீ நானாகவே இருக்கும்படி செய்வேன். என்னுடைய புகழ் வலிமை வீரம் சக்தி போன்ற சிறப்பு அம்சங்கள் எல்லாவற்றையும் உனக்கு தந்துவிடுவேன்.

அப்பொழுது உலகை ஒரு குடையின் கீழ் ஆட்சி புரியும் படி செய்து என் வரிசை தானம் எல்லாம் உனக்கு அளித்து பொன்னரசு தந்து புவியாள வைப்பேன் என்று இறைவனாகிய மகாவிஷ்ணு உறுதிமொழியாக கூறினார். உடனே பழைய நிலையில் இருந்த சம்பூரண தேவன் அவனுக்கு பின்னால் வரும்

துன்பத்தையும் அதை தீர்த்து அருள் கொடுக்கும் வழிமுறைகளையும் சொன்ன திருமாலின் திருவடிகளைத் போற்றி எம்பெருமானே! என்னுடைய மனதை மறைத்து மூடிய மாய இருளை அகற்றிய மாயவரே! என்னோடு கலந்து அன்பாகிக் கசிந்து உருகி எழுகின்ற காரண குருவே! நான் எனும் நிலையில் இருந்த என்னை மேலாக மாற்றிய தயாபரனே! பாசம் நிறைந்த பெண்ணை காப்பாற்றிய பெருந்தகையே! நான் பிறந்த பிறப்பை தவிர்த்த ஞானச் சுடரே! மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு பேறு பெற்றேன்.

நான் பிறந்த என் பிறப்பை அறுக்க திருமாலே அருள்புரிய வேண்டும் என்று பணிந்தான். அகில உலகத்தையும் பாதுகாக்கும் நாராயணரே எனக்கு பிறவி தந்து என்னை பூலோகத்தில் பிறவி எடுக்க போ என்றுச் சொன்னீர்களே, அங்கே பொய்யும் புரட்டும் உடலாக கொண்ட மாய கலியன் வாழ்ந்து இருக்கும் பொய்யான உலகில் நான் போய் பிறந்தால், நான் பிறக்கின்ற சான்றோர் இனம் அவ்வினத்தின் முன்னோர்கள் தேவலோக சான்றோர் இனம் ஆகிய அனைவரும் என் மூலமாக நற்கதி அடைய வேண்டும்.

அய்யா நீதிநெறி தவறாமல் நேர்மையோடு விளங்குகின்ற திருமாலே அருள்புரிய வேண்டும் என்றான். மேலும் எல்லோரும் நற்கதி அடைந்து நல்லபடியாக வாழ நல்புத்தியும் அறிவும் கொடுத்து அருள வேண்டும். என் பிள்ளைகள் போல் எல்லோரிடமும் பற்றுதல் கொண்டு எல்லா செல்வமும் கொடுப்பேன் என்று சொல்லும் அய்யா, பூலோகத்திற்கு நீர் வந்து என்னை உன்னோடு ஐக்கியப்படுத்தும் நாள் எப்போது வரும் என்ற விவரங்களையும் விவரமாக சொல்ல வேண்டும் . உம்முடைய பூலோக வருகையையும் தெளிவுபட சொல்லி அனுப்ப வேண்டும் என்றான் சம்பூரண தேவன். அதை கேட்டு அய்யா நாராயண சம்பூரண தேவனுக்கு திடமான நம்பிக்கை கொடுக்கும் விதத்தில் திருமாலாகிய நான் பாரதத்தின் தென் மூலையாகிய தெட்சணா பூமியிலே உலக மக்களை பரிசோதனை செய்வதற்கு வருவேன். அப்படி நான் வருகின்ற போது உலகத்தில் ஒரு திசையில் உள்ளவர்கள் பொறுமையான குணத்தோடு எனக்கு ஏற்றவர்களாக நேர்மை உடையவர்களாக வாழ்வார்கள்.

நான் மக்களுக்கு தெரிவித்த வேதாகம கருத்துக்களை எல்லாம் கைவிட்டு சொந்த கருத்துக்கள் கொண்ட சுழல் வேதம் உண்டாகும். புதிய வேதம், புதிய மதங்கள், புதிய சட்ட திட்டங்கள் உருவாகி இறை நம்பிக்கை குறைந்து தன் விருப்பம் போல நடப்பார்கள். கணவனும் மனைவியும் அன்போடு இருக்கும் நிலை மாறி நீ பெரிது நான் பெரிது என்ற மூர்க்க குணத்தோடு ஒற்றுமை இல்லாமல் நடப்பார்கள். மூர்க்கத்தனமும் அதிகாரமும் ஆணவமும் பெண்களுக்கு அதிகரிப்பதால் கண்ணீரில் மூழ்கி மக்கள் பெரும் துன்பத்திற்குளாவார்கள் .

சாதி வரம்புகள் தப்பி நிலை மாறும். நீசதன்மையுடைய மக்கள் பூமியில் அதிகரிப்பார்கள். காரணம் கலியின் நீச தன்மையால் உயிர்களை பிறவிச் செய்யும் பிரம்மாவிற்கே இருநினைவு ஆகி பாவ குண உயிர்களை அதிகமாகப் பிறவிச் செய்கின்ற நிலை உருவாகிய காரணத்தினால் நல்லவர்கள் குறைவாகவும் நீச குணம் கொண்டோர் அதிகமாகவும் காணப்படுவார்கள்.

கொடுங்கோல் ஆட்சி நாட்டில் அதிகமாக இருக்கும். கொடுங்கோல் ஆட்சி நாட்டில் அதிகமாக இருக்கும் இராஜ நீதம் அழிந்து நாட்டை ஆட்சிச் செய்பவர்கள் மக்களின் மீது அதிகமான வரிசுமையை விதிப்பார்கள். வரி சுமைகளை ஏற்றி தொடர்ந்து கொடுமைகள் செய்வான். சின்ன சின்ன குற்றத்தை எல்லாம் பெரிதாக்கி அடிமை செய்வான். இந்தக் கொடுமைகள் தாங்காத இறைவனும் கோபம் கொண்டு இயற்கை சீற்றத்தினால் இன்னல்கள் உண்டாகும். வானத்தில் இடி மின்னல்கள் உண்டாகி அதிர்ச்சியை ஏற்படுத்தும். பூமியில் நில அதிர்வுகள் ஏற்பட்டு பெரிய ஆபத்துகள் உருவாகும். இடி மின்னல் மழையினாலும் பல அழிவுகள் உண்டாகும். நிலநடுக்கம் ஏற்பட்டு பூமி அதிரும் போது பூமத்திய ரேகையின் நேர்கோட்டை விட்டு சாய்ந்து செல்லும் போது காலமாற்றங்கள் உருவாகும்.

புகழ்பெற்ற சீமை ஆகிய சோறுடைத்த சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும் செழித்து வளர்ந்து செழிப்பைத் தருகின்ற பயிர்களையும் பயிர் வகைககளையும் மக்கள் பயிரிட மாட்டார்கள். அதிக மகசூல் வேண்டி கலப்பின பயிர்களை அதிகம் பயிரிடுவார்கள். இதனால் மக்களுக்கு நன்மை தரக்கூடிய

இயற்கையான பயிர் வகைகள் அழிந்து செயற்கை முறையில் உருவாக்கப்பட்ட கலப்பின பயிர்களின் மீது மோகம் ஏற்பட்டு நிலமும் பாழ்பட்டு மக்களுடைய உடல் நலனும் பாதித்து இயற்கை அழிந்து மண்ணோடு மூழ்கி அழிந்து போகும்.

கீரைவகைகள் பச்சிலை மூலிகைகள் மதிப்புமிக்க மருந்துச் செடிகள் எல்லாம் அழிந்து போகும். முதன்மை பெற்று செயல்படுகின்ற இரண்டு வேதங்கள் பொய் என்று நிரூபிக்கப்படும். தலைமைப் பொறுப்பாளர்கள் நல்ல முடிவு எடுக்க முடியாமல் திணறுவார்கள். தலைகீழ் படலம் என்று சொல்லக்கூடிய லென்ஸ் மூலம் உருவாக்கப்பட்ட பொழுதுபோக்கு சாதனங்கள் அதிகமாகி கேளிக்கைகளாலும் பல அழிவுகள் அதிகமாகி வரும். நாகரிக மோகத்தால் இயற்கை அழிக்கப்படுவதால் பூமியின் அடுக்கு மற்றும் சுழற்சியில் மாற்றம் ஏற்பட்டு பூகம்பம் உருவாகும். வானம் இடிந்து விழுகின்ற நிலை உருவாகும். ஆகாய மார்க்கத்தில் அந்தரமாய் பறந்து செல்வான்.

வானத்து நட்சத்திரங்கள் உதிரும். மக்கள் நடந்து செல்லுகின்ற வழியின் அளவானது குறைந்துவிடும். ஏனென்றால் இன்றைக்கு வாகன வசதிகள் அதிகபட்டுவிட்ட காரணத்தினால் நடக்கின்ற தொலைவானது மிக குறைவாகவே இருக்கும். குறைந்த தூரம் செல்வதற்கு கூட மக்கள் வாகனங்களை பயன்படுத்தக்கூடிய நிலை உருவாகும். மக்கள் ஆன்மீக பற்றுதல் இல்லாமல் போவார்கள். வாழ்நாள் குறையும்.

பொய்யான கருத்துக்களை கூறும் மதகுருமார்கள் நாட்டில் அதிகரித்து மக்களின் மனநிலையை கெடுப்பார்கள். மக்களின் நலனில் அக்கறை இல்லாத மன்னன் வழித்தோன்றிய மக்கள் ஆளும் நாட்டில் சண்டை சச்சரவுகளை உருவாக்கி பகை உண்டாகி அழிவுகள் அதிகம் ஏற்படும். ஆதிகாலத்து சிவகோத்திரம் ஆலயங்கள் எல்லாம் கவனிப்பார் இல்லாமல் அழிந்து போகும். நிலத்தடி நீர் மட்டம் குறைந்து விடும். கிணறுகள் மூடும் நிலை உண்டாகும். கிணற்று நீர் இருந்தாலும் பயிர்கள் பயிரிட முடியாமல் போகும்.

மக்கள் தொகை பெருகி காற்று கூட மாசுபடும். மக்கள் தொகை பெருகி பஞ்சம் உண்டாகி பட்டினி தான் பெருகும். மக்கள் நிம்மதி இல்லாம லும் ஒருவருக்கொருவர் ஒற்றுமை இல்லாமலும் வாய்ச்சண்டை விடுவார்கள். கோள் வார்த்தைகளை கேட்டு கொடும் பகைகள் உண்டாகும். துரோகம் அதிகரிக்கும். வெளியில் நல்லவர்களைப் போல் இருந்து உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும் துரோகிகளும் அதிகரிப்பார்கள். மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை, பெருகிவரும். அண்ணன் தம்பிகளுக்குள் ஒற்றுமை இல்லாமல் அனைத்தும் உறவுமுறை களும் இல்லாமல் போய்விடும்.

பேராசையின் காரணமாக பல பேரழிவுகள் உருவாகும் குடும்பத்திற்குள் ஒற்றுமை இல்லாமல் மக்கள் சண்டை இட்டு பிரிந்து விடுவார்கள். குடும்ப ஒற்றுமை சீர்குலைந்து விடும். மேலும் கமோக வெறியாகிய காதலால் உண்டாகும் காமத்தால் அறிவிழந்து அனேக உயிர்களையும் அழித்திருப்பார்கள்.

பெற்ற தாயையே மனைவிக்கு ஒப்பாக வைத்துப் பார்க்கின்ற ஒரு நிலை வரும். பெற்றோர்களை பிள்ளைகள் வேலை வாங்குகின்ற ஒரு நிலையும் வரும். பெற்றோருடையச் சொல்லுக்கு பிள்ளைகள் கட்டுப்பட்டு வாழ்ந்தார்கள். இன்றைக்கு பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு கட்டுப்பட்டு வாழும் நிலை உருவாகும் .அது மட்டுமல்லாமல் மாட்டின் வயிற்றில் மனிதர்கள் போன்று பிறக்கக்கூடிய அதிசய பிறவி அதிகமாக இருக்கும். மக்கள் நெறி தவறியும், பிறர் மீது வெறுப்புற்றும், நடுநிலைமை தவறியும் கொலைகள் அதிகம் செய்வார்கள்.

அது மட்டுமல்ல காணிக்கை வேண்டுவதும் கைக்கூலி வேண்டுவதும் அதிகமாக இருக்கும். இறைவனை வழிபடக்கூடிய இடங்களில் இறைவனுக்கு பயந்து பணிவிடைகள் செய்கின்ற நிலைமாறி பணத்திற்காகவே இறைவனுக்கு பூஜை செய்கின்ற ஒரு நிலையும் வரும். அது மட்டுமல்ல எந்த ஒரு செயலை செய்தாலும் அரசாங்கத்திலும் சரி, இறைவனை வழிபாட்டிலும் சரி அதற்கு கைக்கூலி என்று சொல்லக்கூடிய லஞ்சம் வாங்குகின்ற ஒரு நிலை அதிகமாகவே இருக்கும்.

மாணிக்கம், தங்கம், வைரம் போன்ற விலை மதிப்பு மிக்க ஆபரணங்கள் அணிவதை மக்கள் விட்டு விடுவார்கள். உலகில் பேய்களினாலும் அதிக துன்பம் ஏற்படும். மக்கள் உயிர் வாழ்வதற்கு ஆதாரமாக இருக்கக் கூடிய வேளான் தொழில்களுக்கு மழையினால் மிகுந்த பாதிப்பு ஏற்படும். விவசாய நிலங்கள் எல்லாம் வீடு கட்டி குடி இருக்கும் இதனால் விளை நிலங்களில் பயிர் செய்யா முடியாமல் போகும்.

பத்தினிப் பெண்களை காம வசத்தால் கற்பழித்து கொன்று விடுவார்கள். அறியா பருவத்தில் இருக்கும் பேதையாகிய பால் மணம் ஏழு வயதிற்குள்பட்ட பெண் பிள்ளைகள் கூட பிள்ளைகளைப் பெற்று எடுப்பார்கள். பெண்கள் பிள்ளைப் பெற்ற பின் தாய் பால் கொடுத்து பிள்ளைகளை தாலாட்டி சீராட்டி வளர்க்கும் நிலை மறைந்துவிடும். தங்களுடைய அழகிற்கு முக்கியத்துவம் கொடுத்து பிள்ளைகளுக்கு தாய்பால் கொடுப்பதை தவிர்த்து விடுவார்கள். தன்னோடு கூடி பிறந்த சகோதர சகோதரிகளைக் கொடும் பகையாக எண்ணுவார்கள்.

இப்படி மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் நெறி தவறி வாழும் போது இயற்கையும் அதன் நிலையில் இருந்து தடுமாறி மக்களுக்கு பயன்படாமல் போய்விடும். மழைப்பொழிவதற்குரிய அத்தனை நிலைகளும் இருக்கும் . ஆனால் மழைப்பொழியாது. கருமேகங்கள் உருவாகும், இடிமின்னல் தோன்றும். ஆனால் மழைப்பொழியாது. வானம் கறுத்து வரும் பொய் மேகம் உண்டாகி மழை பொழியாமல் போகும்.

தானம் என்றுச் சொல்ல கூடிய பெரியவர்களுக்கு கொடுக்கப்படும் பதவி மரியாதை போன்றவற்றை யாரும் கொடுக்க மாட்டார்கள் . அந்த நிலையைப் பின்பற்றவும் மாட்டார்கள். மேலும் முன்னோர்கள் வகுத்து வைத்த வாழ்வியல் நெறிகளையோ, சாஸ்திர வேத கருத்துகளை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மேற்கைத்திய நாடுகளில் பின்பற்ற பட்டு வரும் நாகரீக மோகத்திற்கு அடிமையாகி நம்முடைய உண்மையான வாழ்கை நெறிகளையோ இறைவனை கண்டுணரும் மெய்ஞானத்தையோ விரும்ப மாட்டார்கள். இவையெல்லாம் பொய் என்று நிரூப்பிக்க படும். தான தர்மங்கள்

எல்லாம் இல்லாமல் அழிந்து போகும். 18 விதமான தர்மசாஸ்தர்ம சாஸ்திரங்களும் பயனற்றுப் போகும்.

ஈன குணம் உடையவர்களான பிறருக்கு துன்பம் செய்து வாழக்கூடியவர்கள், பிறருடைய பொருளை அபகரித்து வாழக்கூடியவர்கள், பிறருக்கு கெடுதல் செய்து வாழக்கூடியவர்கள் அதிகமாக பெருகுவார்கள். அது மட்டுமல்லாமல் உழைத்து வாழ வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் இருக்க மாட்டார்கள். தான் உழைக்காமல் பிறருடைய உழைப்பில் வாழ்க்கையை வாழக்கூடியவர்கள் பிறருடைய பொருளை அபகரித்து வாழக்கூடியவர்கள் அதிகமாக உருவாவார்கள். இதனால் அவர்கள் பெறவேண்டிய வீடு பேறாகிய இறை ஞானத்தைப் பெற முடியாமல் அலைவார்கள். அது மட்டுமல்ல பொய்யாக உருவாக்கப்பட்டிருக்கின்ற வேதங்கள் அதிகமாக தலைவிரித்தாடும். இதனால் மக்கள் உண்மையான வேதத்தை விரும்பாமல் பொய்யாக உருவாக்கப்பட்டிருக்கின்ற வேதத்தை பின்பற்றுவார்கள்.

இந்த பொய்யான வேதமானது மிக அதிக அளவில் பெருத்து காணப்படுவதால் மக்கள் அதை நோக்கி செல்லுவார்கள். மேலும் பணத்தாலும், பொருளாலும் மக்களை அந்த பொய்யான வேதத்தில் சேர்ப்பதற்கு அதிகம் வற்புறுத்தப்படுவார்கள். இதனால் உண்மையான வேதமாகிய இறைவனை அடையக்கூடிய மெய்வேதம் மறைக்கப்படும். இப்படி பணத்திற்காகவும் பொருளுக்காகவும் நாடி செல்கின்ற பேர்களால் பொய்யான வேதம் உலகம் முழுவதும் பரவி காணப்படும். ஆகமங்கள் கற்பதெல்லாம் ஆகாத வேலை என்பார் மூடநம்பிக்கையால் முற்றும் இழப்பார்கள். புனிதமான அற நெறிகளை கூறும் வேதங்களை படிக்காமல் மானிடன் புதிதாய் எழுதும் கண்டகண்ட வகையான கற்பனையால் வெளியாகும் கதைகளை எல்லாம் படித்துவிட்டு இதுதான் இப்போதைய அறிவு கதைகள் என்று புத்தியைக் கெடுப்பார்கள் அந்த கதைகளை வேகமாக உள்ளே பரவியிருக்கும். திருடர் கூட்டம் பெருகி வரும்.

வேலை செய்யாமல் வாழ்ந்து தரித்திரம் வந்ததென்று வறுமை தாண்டவமாடும். பிறருடைய பொருளைக் கொள்ளை அடிக்கக்கூடிய திருடர்கள் அதிகம் ஆவார்கள். அது மட்டுமல்ல

உணவு பொருளில் கூட கலப்படம் செய்து அதன் மூலம் பல வருமானங்களை உருவாக்கி வாழ்வதற்கு மக்கள் நினைப்பார்கள். அவ்வாறு கலப்படம் செய்யப்பட்ட பொருட்களுக் கண்டுபிடிக்கப்படுகின்ற போது அந்த பொருட்களை எல்லாம் அப்படியே வெளியிலே கொட்டி அழிப்பார்கள். கொள்ளையர்கள் அதிகரிப்பார்கள்.

உணவு பொருட்களை கடத்துபவர்கள் அதிகமாக இருப்பார்கள். மேலும் கொலை குற்றங்கள் அதிகமா இருக்கும். வழிபறிக்காரர்களாகிய கொள்ளையர்களைப் பிடித்து தண்டனைக் கொடுக்கும் போது அவர்கள் அந்த நேரத்திலே தங்களுடைய வாழ்க்கையை அழித்துக் கொள்ளுவார்கள். மேலும் தானாக தங்களுடைய உயிரை தற்கொலை செய்து மாளுபவர்களும், விஷத்தை உண்டு தன்னுடைய உயிரை அழித்துக் கொள்பவர்களும், ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு அவர்களுக்குள்ளே இறப்பவர்களும் அதிகம் இருப்பார்கள்.

சில பேர் வைரம் விழுங்கி மாழ்வார்கள். சில பேர்கள் அடித்து கொண்டு மாழ்வார்கள். மேலும் சிலர் கிணற்றில் விழுந்து இறப்பார்கள். சிலர் கடல் போன்ற நீர்நிலைகளில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வார்கள். மேலும் சிலர் பல தீமைகளைச் செய்துக் கொண்டு நாணம் பொறுக்க முடியாமல் தன்னுடைய வாழ்க்கையை அழித்துக் கொள்வார்கள்.

மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்க கூடிய பூச்சி இனங்கள் அதிகமாக உருவாகும். இதனால் பலவிதமான நோய்கள் உருவாகி அதனால் மக்கள் இறப்பிற்கு காரணமாக அமைந்துவிடும். பல விதமாக புதிய நோய்களும் உருவாக்கி மக்கள் அழிவிற்கு காரணமாகிவிடும். அது மட்டும் அல்லாமல் போதை பொருட்களாகிய கஞ்சா அபின் போன்றவை அதிகமாக இருக்கும். சிறு வயதில் முதலே பிள்ளைகள் போதைப் பொருளை பயன்படுத்துகின்ற நிலை அதிகமாகும். போதைப் பொருட்களால் தன்னிலை மறந்து பல குற்றங்கள் செய்து அழிவைத் தேடிக் கொள்வார்கள். போதையூட்டும் மது பானங்களை குடித்து குடும்பத்தை அ ழிப்பார்கள் நிம்மதி இழந்து தவிப்பார்கள்.

மக்களுக்கு நல்லறிவுப் போதிக்கின்ற சன்னியாசி மார்களெல்லாம் தங்களுடைய தவநிலை தவறியவர்களாக தவறு செய்வார்கள். மக்களுக்கு நல் வழிகாட்டுகின்ற சன்னியாசி மார்களெல்லாம் வழிதவறி தவறு செய்வதால் மக்களும் தங்களுடைய ஒழுக்கமான வாழ்வை இழந்து நிலைதடுமாறுவார்கள்.

ஒண்ணாமது சாதி என்று சொல்ல கூடிய சாஸ்திர வேத நூலுக்கு சரியொத்தப் பேர்கள், அதாவது இறைவன் வகுத்த நெறிப்படி வாழுகின்ற மக்கள் நீசக்குலங்களால் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டு உலையில் இட்ட மெழுகு உருகுவது போல் மனம் உருகி துன்புறுவார்கள். மேலும் பெண்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கட்டுப்பாட்டோடு வாழுகின்ற நிலை மாறி , சுதந்திரம் என்ற பேரில் தங்களுடைய வாழ்க்கையை தானாகவே சீரழித்து கொள்ளுவார்கள். இதனால் பெண்களின் கற்புநிலை தடுமாறி விடும். எப்படியென்றால் பருவ வயது வரும் முன்னே குழந்தைகளைப் பெற்றெடுப்பார்கள். சிறு வயதிலே திருமணம் செய்து வாழ்வார்கள். திருமணம் செய்யாமலும் ஆண்களோடு பெண்கள் சேர்ந்து வாழ்வார்கள். இவ்வாறு பெண்கள் கட்டுபாடற்ற நிலையில் வாழ்ந்து நிலை தடுமாறி தங்கள் வாழ்வை அழித்துக் கொள்வதோடு சமுதாய சீரழிவையும் ஏற்படுத்துவார்கள்.

மக்கள் சிறப்போடு வாழ வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட சட்டத்திட்டங்கள் எல்லாம் அழித்துவிடும். நீதியுரைப்பதற்காக உருவாக்க பட்ட சந்தி அம்பலம் என்றுச் சொல்லக்கூடிய முச்சந்தியில் வைத்து நாட்டாமை தீர்ப்பு கூறுகின்ற முறை அழிந்து விடும். கலியுகத்தில் மக்கள் அதிகமாக தனிக்குடித்தனத்தை அதிகம் விரும்புவார்கள். இதனால் கூட்டு குடும்பத்திலிருந்து பிரிந்து சென்று விடுவார்கள். இதனால் தனிக்குடும்ப வாழ்க்கை அதிகமாகிவிடும். கூட்டு குடும்ப வாழ்க்கை அழிந்துவிடும். ஒற்றுமை சீர்குலைந்து விடும். இதனால் குடும்பத்திற்குள் சண்டை சச்சரவுகள் அதிகமாகி குடும்ப உறுப்பினர் இடையே பகையுணர்வு அதிகமாகி விடும். இவ்வாறு கூட்டு வாழ்க்கை வாழக்கூடிய குடும்ப வாழ்க்கை சீர்குலைந்து சொந்தம் பந்தம் எல்லாம் உறவு நிலை மாறி பகையாகி பிரிந்து போகும்.

நாட்டை பாதுகாக்க அமைந்திருக்கும் அரசாங்கம் பிரிந்து எதிரும் புதிருமாய் காணப்படும். அது மட்டுமல்லாமல் ஒற்றுமையாக இருக்கக்கூடிய நாட்டைக் கூட பிரித்து தனித்தனி பிரிவுகளாக மாற்றி தாம் ஒவ்வொருவரும் தான் ஆட்சியாளராக மாற வேண்டும் என்று பல பிரிவுகளாக பிரித்து ஆட்சி செய்கின்ற நிலை கூட உருவாகும். பாதுகாப்பிற்காக சுற்றி எழுப்பும் சுவர் ஆகிய மதங்கள் எல்லாம் கல்லால் கட்டப் படாமல் மரப்பலகை அலங்காரமாய் சுவர்கள் அமைக்கப் படும். அன்றைய காலங்களில் நாட்டினுடைய எல்லையை ஒரு பெரிய கோட்டையாக கட்டி வைத்திருந்தார்கள்.

பிறர் அறிந்து கொள்ளும்படியாக தன்நாட்டின் கொடியை மதிலில் ஏற்றி வைத்திருப்பார்கள். ஆனால் இன்று ஒரு நாட்டின் எல்கை என்பது ஒரு சிறிய கல்லாலும், பெயர் பலகையினாலும் குறிக்கப்படுகின்றது. மேலும் நாட்டின் கொடியானது ஒரு கம்பத்தில் ஏற்றப்பட்டிருக்கும். இவ்வாறு நாட்டின் எல்கையானது கோட்டையில் இருந்த நிலைமறைந்து சிறிய குச்சு கட்டையே மதிலாக இருக்கும் நிலை உருவாகும். மனிதனும் மிருகங்களும் மற்றும் உள்ள உயிரினங்களும் உணவு கிடைக்காமல் பஞ்சம் ஏற்பட்டு பட்டினியால் தவிக்கும் நிலை உருவாகும் .

அக்கினியாலும் தண்ணீராலும் அதிகமான இடங்களில் அழிவுகள் பெருகும். மேலும் உலகில் பலவிதமான நோய்கள் தோன்றி அதனால் இறப்புகள் அதிகமாகும். உலகில் வாந்தி பேதி போன்ற நோய்கள் அதிகரித்து குணப்படுத்த முடியாமல் மக்கள் நிம்மதி இழந்து தவிப்பார்கள்.

இதுபோன்ற செயல்கள் மட்டுமல்ல இன்னும் சொல்லித் தொலையாது சம்பவங்கள் அதிகம் உண்டு. எத்தனையோ விதமான செயல்கள் உள்ளன. இப்போது சொல்ல எனக்கு சமயம் போதாது. எனவே தகுந்த நேரம் வரும்போது நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ விரும்பி கேட்டபடியால் இத்தனை அடையாளங்களையும் உன் மீது விருப்பம் கொண்டு நடக்கப் போகும் முன் கதையையும் நாட்டில் நடக்க இருக்கின்ற சம்பவங்களையும் கூறினேன் என்றார் அய்யா நாராயணர்.

மேலும் அனேக காரியங்கள் நடக்க இருக்கிறது, சமயம் வரும்போது சொல்கிறேன் என்று தெளிவாகச் சொல்லி, இனி நீ பூமியில் பிறக்க உனக்கு ஏதாவது மாற்றங்களோ மறுப்போ அல்லது சங்கடங்களும் இருக்கின்றதா சொல் என்று திருமால் கேட்டார்.

திருமால் சொன்ன வார்த்தைகளை எல்லாம் செவிகொடுத்து கேட்டு மௌனமாய் இருந்த சம்பூரண தேவன் மனம் கலங்கி சிந்தை உருகி அன்பு தகப்பனாகிய விளங்குகின்ற ஆதிநாராயணரே! என்னை மன்னித்து அருள் புரிய வேண்டும் என்றான் சம்பூரணம் தேவன். மேலும் நாராயண மூர்த்தியிடம் கலங்கிய மனநிலையோடு கூறுவான் அய்யா, நிரந்தரமில்லாத ஏமாற்று உலகில் பொய்யும் புரட்டும் நிறைந்த இந்த உலகில் பிறவி எடுக்க சொன்னீரே அய்யா, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று ஒன்றாக இருந்த மக்களை பதினெட்டு வகையாக பிரித்து விட்டான் அந்த கலிநீசன். அந்தப் பதினெட்டு சாதிகளில் முதலாவதாகத் தோன்றிய இனத்தில் என்னை பிறவி செய்யும் அய்யா என்றான்.

மேலும் சம்பூர்ண தேவன் அய்யா உன் மீது நம்பிக்கை கொண்டு ஆதியில் உலகம் தோன்றியது முதல், காலம் காலமாக வரைமுறை தவறாமல் நல்ல முறையில் உமக்கு பிடித்த படி பணிவிடைகள் செய்து நீயே கதி என்று நம்பியிருக்கும் மானிட சாதியாகிய உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்கு பிள்ளையாக என்னை நீர் பிறவிச் செய்ய வேண்டும் என் பிதாவே என்று பணிந்தான்.

உடனே அய்யா நாராயணர், நீ பேசிய வார்த்தைகளும் எடுத்த முடிவுகளும் நல்லது தான். அப்படி என்றால் நீ என்னுடைய பிள்ளைகளாகிய நன்மக்கள் ஏழு பேரில் வெற்றித் தெய்வ லோக வித்தாய் தேவர்களுக்கு அதிபதியான தேவேந்திரனுடைய தேவலோகத்தின் வழியாக முதல் வாரிசான சான்றோர் குலத்தில் சத்திய வழி தவறாமல் வாழும் நல்ல மக்களுடைய இனத்தில் நல்லப்படியாகப் பிறவி எடுக்க நீ போ என்று உரைத்தார்.

நாராயண மூர்த்தியின் அறிவுரைகளைக் கேட்ட சம்பூரண தேவன், தங்களுடைய விருப்பப்படியே என்னை பூலோகத்தில்

பிறவிச் செய்யுங்கள் என்றான். முப்பத்து முக்கோடி தேவாதி தேவர்களில் மிகவும் சக்தி வாய்ந்த சம்பூரண தேவன் திருமாலின் திருவடிகளைப் பணிந்து நின்றான்.

சம்பூரண தேவன் பூலோக பிறவி எடுப்பதற்கு சம்மதம் தெரிவித்த உடன் நாராயணர் முகத்தில் புன்னகையோடு திருப்தியான மனநிலையோடும், அவனுடைய கடந்த காலத்தைப் பற்றி ஞாபகப்படுத்தி கூறலானார் எப்படியென்றால், ஆறுதரம் என்னை அகம் வைத்துக் கொண்ட சடம் நற்பேறு பெறவில்லை. அதாவது நீ ஆறுமுறை பிறவி எடுத்து உன்னுடைய மனதில் என்னை நினைத்து உயர்ந்த நிலையை அடைந்தாய். இதுவரையிலும் நான் உனக்கு முக்தி அருளவில்லை. மேலும் உன்னை சான்றோர் வழியில் பிறவிச் செய்து முக்தி அருள இருக்கும் தருணத்தில் நீ பரதேவதை மேல் ஆசை கொண்டாய். எவ்வளவு புத்தி கூறியும் கேளாததால் பூலோகத்தில் பிறவி எடுப்பதற்கு காரணமானாய். ஆகையால் அச்சடம் [பிறவிக்கு ஏற்ற நிலையில் இருக்கும் ஆன்மா] அம்மலையில் அரும் தவசு பண்ணி கொண்டு இருக்கிறது. அச்சடலம் ஈடேற நாள் நெருங்கி வந்து விட்டதை அறிந்து அந்த நற்சடலத்தை அழைத்து வர திருவுளம் கொண்டார்.

எனவே அந்த உடலானது கைலாயம் சென்று வீடு பேறு அடைய இந்த நாள் இனிய நாளாக அமைந்தது. அதனால் பிறவிக்கு ஏற்ற நிலையில் இருக்கும் ஆன்மா பிறவிச் செய்வதற்கு ஐந்து கர்த்தாக்களுள் முதல்வராய் இருந்து உயிர்களுக்கு அருள்பாலிப்பதற்காக சிவப்பெருமான் மேற்கொள்ளும் அருவுருவாகிய சாதாசிவத்தை சீக்கிரமாக அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று மறையோரை அனுப்பி வைத்தார். மேலும் மறையோராகிய முனிவர்களிடம் காலதாமதம் செய்யாமல் வேகமாக செயல்பட அனுமதியும் கொடுத்து அனுப்பினார்.

முனிவர்கள் எல்லோரும் திருமாலின் கட்டளையை நிறைவேற்ற மிகவும் நல்ல மலையாகிய மேருவை நோக்கி நடந்தனர் அப்படியே வந்து கொண்டிருக்கும் வழியில் கைலாயமலை ஆன நல்ல ஆன்மாக்களை பாதுகாக்கும் பொன்மலையில் வந்து சேர்ந்தார்கள். கைலாயமலையின் ஒரு பகுதியாக விளங்குகின்ற பொன்மலைக்கு வந்து மலையில் இருக்கின்ற அதிசயங்களை

பார்த்தார்கள். அப்போது அவர்களின் சிந்தனையில் இது அலை மீது பள்ளி கொண்ட மகாவிஷ்ணு கிருஷ்ணாவதாரம் எடுத்து இருந்த போது வடக்கு வாசலுக்கு எதிராக அமைந்திருந்ததுதான். சிவபெருமான் வீற்றிருக்கும் இந்த கைலாய மலை ஆகும்.

இந்த கைலாய மலைக்கு எதிர்புறமாக நேர் பார்வையாக காணப்படுவதுதான் இந்த பொன்னாலான தங்க மலை என்று புரிந்துகொண்டார்கள். இங்கேதான் தங்கத்தாலான கிணறு, வெள்ளியினாலான கிணறுகளும் சங்கங்களுக்கு மகிழ்ச்சியினை உருவாக்கும் தடாகங்களும், தானாகவே உருவான கிணறுகளும் அழகாக காணப்படுகிறது. இந்த மலையின் இயற்கை அழகு இவ்வளவு தான் என்று வர்ணித்து சொல்ல முடியாத அளவுக்கு அழகு வாய்ந்ததாக காணப்படுவதையும் கண்டு மகிழ்ந்தார்கள்.

தெய்வங்கள் வீற்றிருக்கும் அழகு வாய்ந்த மலை இந்த மலை. தெய்வ லோகம் முனிவர்கள் காட்சிக் கொடுக்கும் மாமலை இந்த மலை. விரைவான மாமுனிவர்கள் வீற்றிருக்கும் மலை. தெய்வத்தால் உடல் எடுப்பதற்காக முனிவர்களும் ரிஷிகளும் இருப்பதும் இந்த பொன் கைலாய மலையில் தான். இறந்தவர்களை மீண்டும் உயிரோடு எழுப்பும் சஞ்சீவி மூலிகைகள் வளர்ந்து வருகின்ற சஞ்சீவி மலையும் இங்கே தான் உள்ளது . இது போன்ற பலவிதமான அதிசய தன்மையுடைய பெருமையையும் மகத்துவம் நிறைந்த இந்த மலையைப் பற்றி விவரித்து சொல்ல முடியாது. அத்தனை விதமான வர்ணஜாலம் புரிகின்ற மலை. உள்ளே சென்றார்கள் திரும்புகிற திசையெல்லாம் கண்கொள்ளாக் காட்சியாகவே காணப்படுகிறது.

ஆகவே அந்தப் பொன்மலையில் இவ்வளவு புதுமைகள் இருக்கிறது. இங்கு தான் அந்த மேன்மை பொருந்திய ஆன்மா இருக்கிறது என்று ஆன்மாவை தேடினார்கள். அங்கு தேடி ஆன்மாவை கண்டு ஆனந்த நிலையை அடைந்தார்கள். ஆன்மாவை பார்த்து மகிழ்ச்சி பொங்க புகழ்வாய்ந்த அபூர்வ சக்தி பெற்ற குளிர்ந்த ரதத்தில் ஏற்றி சுமந்து சிவபெருமான் வீற்றிருக்கும் கைலாயத்தில் வந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த ஆன்மா கண்டு நாராயணரும் அதிசயம் வாய்ந்த ஆன்மாவை அன்போடு அரவணைத்தார்.

அரவணைத்து பாசத்தோடு முகத்தோடு முகம் வைத்து முகர்ந்து முத்தமிட்டு ஆன்மாவிற்க்கு புத்துணர்வு கொடுத்தும், அதாவது இயக்க நிலைக் கொடுப்பதற்கு உயிர் கொடுத்து ஆன்மாவோடு உரையாற்றுகிறார் நாராயண பரம்பொருள். என் அன்புக்குரிய ஆன்மாவே! நீ இதற்கு முன் பிறந்த ஒவ்வொரு பிறவியில் என்னை உன் அகம் வைத்து கொண்டாய். அதாவது உன் கர்மாவின் படி அமைந்த ஒவ்வொரு பிறவியிலும் மூன்று லோகங்களிலும் [மேலோகம் பூலோகம் பாதாளலோகம்] என்னை மனதில் சுமந்துகொண்டு அலைந்தாயே! பூமியென்றும், மலையென்றும், கடல் என்றும் பாராமல் எல்லா இடங்களும் சலிப்பில்லாமல் சென்றாயே! நாராயணராக என்னை சுமந்து நான் விரும்பியபடி எல்லா இடங்களும் நீ என்னை மனதில் நினைத்து வந்தாய். நீ எனக்கு செய்த நன்றி கடனே வார்த்தைகளால் உன்னிடம் உரைக்க முடியாது. நீ செய்த உபகாரம் அத்தனை உயர்வானது. அந்த நன்றியை மறக்க முடியாது. நான் உனக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இத்தனை யுகங்களிலும் நீ நன்றியோடு என்னை சுமந்த காரணத்தினால் நான் உனக்கு பிரதிபலனாக செய்யப் போகின்ற நன்றிக்கடனை கூறுகிறேன் கேள்.

என்னை அன்பாக சுமந்து [நீ என்னை மனதில் நினைத்து வந்தாய்] அலைந்து அலைந்து திரிந்தாயே! ஆகையால் நீ எனக்கு அன்பான மகனாக என்னுடைய சான்றோர் இனத்தில் பூலோகத்தில் புவிமீதில் வாழ்வாய். அதன் பிறகு சில நாள் கழித்து நான் வகுத்தளித்த மிகவும் சிறப்பான நல்ல சுபமுகூர்த்த நாளில் நான் வந்து உன்னை எடுத்து சேர்த்துக் கொள்வேன். மேலும் நீ பூலோகத்தில் எப்படி வாழ வேண்டும் என்கிற வழிமுறைகளை புத்திமதி கூறி நல்ல ஆலோசனைகளையும் கூறி அற்புதமாக நடத்துவேன். எனக்கு ஏற்பட்ட எல்லாவிதமான துயர சம்பவங்களையும் மாற்றி அமைக்க உன்னை நகர் சோதனைக்கு அனுப்பி வைப்பேன். அதாவது ஒரு ஆன்மாவானது இறைத்தன்மை பெறுகின்ற போது அந்த ஆன்மாவை சூழ்ந்து இருக்கின்ற அத்தனை துன்பங்களும் மாற்றப்படும் என்பதை இங்கு குறிப்பிடப்படுகிறது

உன்னுடைய துயரமான சம்பவங்களையும் இந்த உலகத்திற்கு கலியினால் ஏற்பட்ட துயரங்களையும் மாற்றி கவலைகளை

எல்லாம் இல்லாமல் ஆக்கி விடுவேன். மேலும் கைலையில் இருக்கின்ற சிவனுடைய கவலைகளையும் போக்கி, உலகத்தை ஆட்டிப்படைக்கும் கலியை அடியோடு அழித்து, கலிக்குள் அகப்பட்டு அடுத்து என்ன நடக்குமோ என்று துன்புறும் சான்றோர் மக்களின் துயரங்கள் எல்லாம் உன் துயரத்தை மாற்றுவது போல் தீர்த்து வைப்பேன். மேலும் வேறு எந்தவிதமான சஞ்சலங்களும் உனக்கு இல்லாத படி கலியின் தாக்கத்தால் வந்த அத்தனைத் துன்பங்களையும் மாற்றி மேன்மையோடு வாழ வழி வகுப்பேன்.

இவ்வாறு கலியழிந்த பிற்பாடு தர்மயுக வாழ்வில் என்ன என்ன சிறப்புகள் இருக்கிறது என்பதைக் கூறுகிறார். எப்படி என்றால் எந்த வித குறையுமில்லாத தங்க நவரத்தினபதியானது உனக்காக இருக்கிறது. அதிலே முத்து நவரத்தின முடி சூடி அரசாட்சி செய்யும் படி நான் உனக்கு அருளுவேன். மேலும் எல்லா திசைகளிலும் உள்ள ஏற்ற புகழ் சான்றோர் மக்களோடு போற்றி நிற்கும் சிறப்பை நான் உனக்கு தருவேன் என்றுக் கூறினார்.

மேலும் முக்தி நிலை அடைந்த ஆன்மாவிற்கு கொடுக்கபடும் சிறப்பைக் கூறுகின்றார், எப்படி என்றால் எட்டு திசையில் உள்ள சான்றோர் மக்களும் உன்னைப்(ஆன்மாவை} போற்றி நிற்க செய்து இந்த உலக ஆளக்கூடிய ஏற்ற ஒரு குடையை தந்து அரசாண்டு நீயும் என்றைக்கும் அழியாத திருவுளம் போல் வீர சான்றோர்கள் சூழ வீரக்கொடி நிறுத்தி நல்லாட்சி செய்கின்ற வகையில் தர்ம செங்கோலும், சிவ செங்கோலும் உனக்கு அருளி, நான் ஆண்டு கொண்டிருக்கின்ற அரசும் உனக்கு(ஆன்மாவிற்கு} தந்து என் பெயரால் சீமை ஐம்பத்தாறும் ஒரு சொல்லுக்குள் ஆளுகின்ற வகையில் வழிவகைகளைச் செய்து தருவேன்.

நீ { முக்தி பெற்ற ஆன்மா} ஆட்சியில் அமர்வதற்கு சிம்மாசனம் ஆக தாமரைப்பூ அமைப்பிலுள்ள அழகு சிம்மாசனம் பொன் முக அமைப்பில் உள்ள சிம்மாசனம் கோமுகம் கொண்ட பசுமாடு உருவ அமைப்பில் உள்ள சிங்காசனம் இன்னும் பல அவதார முகம் கொண்ட சிங்காசன எல்லாம் உனக்கு நான் தருவேன். மேலும் அன்னப்பறவையின் முக அமைப்பைக் கொண்ட சிம்மாசனம் தந்து இன்னும் இது போன்ற மிக உயர்வான சிம்மாசனம் தந்து அரசாள வைப்பேன். நீ எல்லாம்

பெற்றுக்கொண்டு சிறப்புடைய பொன்னுலகம் ஆகிய கைலாய மலையில் இருப்பதைப் போன்று தங்கத்தாலான மிகப்பெரிய சிம்மாசனம் மணிமண்டபம் அமைத்து முப்பத்திரண்டு அறங்களையும் முழுமையாக உனக்குத் தந்து செப்பொத்த மாணாக்கர் சூழ்ந்து பணிவிடைகள் செய்ய வைப்பேன்.

தாயாகிய லட்சுமி மேல் ஆணையிட்டு கூறுகிறேன் நீ நம்பிக்கையோடு செயல்படு என்றார் இவ்வாறு சத்திய வாக்கு கொடுத்து சம்பூரணதேவனுடைய ஆன்மாவிற்கு அய்யா நாராயண அருளுரை கூறினார். இந்த நல்ல செய்தியை கேட்ட முனிவர்கள் எல்லோரும் நன்றி நன்றி சம்பூரண தேவன் மிகவும் யோக சக்தி உள்ளவன் அவனுடைய நல்ல நேரம் தான் இது என்று எண்ணி மகிழ்ந்தார்கள்.

சம்பூரணம் மிக உயர்ந்த நிலையை அடைவதற்கான பிறவியையும் உடலும் பெற்றுள்ளது மிகவும் பெரிய காரியமே! பரம்பொருளின் பேறு பெற்ற சென்மம். இந்த ஆன்மா என்ன புண்ணியம் செய்ததோ இந்த பேறு பெறுவதற்கு பிராணனிது உடல் கிடைக்க எவ்வளவு மகிமை பெற்றவனாக இருக்கிறான். சம்பூர்ண தேவனுக்கு இந்த சிறப்புகள் கிடைப்பதற்கு அவனுடைய பெற்றோர்கள் என்ன தவம் செய்தார்களோ? என்று ஆச்சரியம் அடைந்தார்கள். திரேதாயுகத்தில் நாராயணரை பிள்ளையாக பெறுவதற்கு அயோத்தி மன்னர் தசரதர் தவமிருந்து ராமரை பெற்றதையும் நினைத்து ஆனந்தம் கொண்டார்கள்.

அயோத்தியை ஆண்ட தசரத மன்னர் 12 ஆயிரம் ஆண்டுகள் வனத்தில் கடுமையான தவம் மேற்கொண்டார். தசரதரின் தவத்தின் காரணமாக தான் விருப்பத்தோடு ஏற்று நடந்த விஷ்ணுவின் 300 வாரமதாய் உலகளந்தோர் வேசமதில் ஒன்று தான் ராமர் அவதாராம் என்று ஆனந்தம் அடைந்தார்கள். இராமர் அவதாரம் எடுத்த விஷ்ணு அதை மிக விரும்பி ஏற்றுக் கொண்டதாகவும் தன்னுடைய எண்ணாயிரம் வேடங்களில் ஒன்றானது இராமர் அவதாரம் என்று முனிவர்கள் போற்றிப் புகழ்ந்தார்கள். மேலும் துவாபராயுகத்தில் திருமால் கண்ணன் அவதாரம் எடுக்கும்போது அவருக்கு கிடைத்த சிறப்புகள் போல சம்பூரண தேவன் குழந்தையாக பூலோகத்தில் பிறந்து முக்தி

நிலையை அடைவான் என்றார்கள். இவ்வாறு பச்சைமால் நாராயணர் விவரமாக நடக்கப் போவதை பற்றி கூறினார்.

இதுவரையிலும் உள்ள எவருமே அடையாத மிக உயர்ந்த நிலையை சம்பூரணனுக்கு கிடைத்துள்ளது. பதினான்கு உலகங்களிலும் மிக உயர்ந்த பாக்கியம் பெற்றவர் என்ற சம்பூரண தேவன் தான் என்று புகழ்ந்தார்கள். இந்த புண்ணிய புருஷர் இனத்தில் தேவலோகத்தை சேர்ந்த வானவர்கள் ஆகிய நாம் எல்லோரும் போய் பிறந்தால் தான் நமக்கு புண்ணியமே கிடைக்கும் நல்லதே நடக்கும் என்று பேசிக் கொண்டார்கள். அதனால் நாமும் நல்ல முடிவெடுத்து பூலோக பிறவி எடுப்போம் என்று சான்றோர் இனத்து முனிவர்களும் மானிடப் பிறவி எடுத்தார்கள்.

இப்படியாக தேவலோகம் முனிவர்கள் எல்லோரும் சான்றோர் இனத்தில் வந்து பிறந்த பிறகு தேவலோக சம்பூரண தேவனின் பிறவிக் கேற்ற திட்டம் வகுத்தார்கள். நாள் நட்சத்திரங்கள் எல்லாம் சரியாக பார்த்த பிறகு பிறப்பதற்கான நல்ல நேரத்தை கணக்கிட்டு நல்ல சுக லக்கனத்தில் பிறவி செய்யத் தீர்மானித்தார்கள். நல்ல முகூர்த்த நாளில் நல்ல பிறவி செய்ய வேண்டுமென்று சிவமும், பிரம்மாவும், நாராயண மூர்த்தியும் ஆலோசித்தார்கள்.

உடனே நாராயணமூர்த்தி சம்பூரண தேவனை கர்ம கடன் கழிக்க கலியுகத்தில் பிறவி எடுக்க வேண்டும் என்று பூமியில் பிறவிச்செய்தார். நாராயணமூர்த்தியனுடைய கற்பனைப்படி அவனுடைய கர்ம வினைகளை அகற்றுவதற்காக அந்த சம்பூரண தேவனை அங்கே நாராயணமூர்த்தி பிறவிச் செய்தார்.

## வினா விடை:-

1. சம்பூரண தேவனின் பூலோக பிறப்பதற்கு காரணமாக அமைந்த நிகழ்வு எது?
   பரதேவதையின் மீது கொண்ட ஆசை.

2. சம்பூரண தேவன் பரதேவதையின் மீது கொண்ட ஆசையினால் கர்மவினை அவனை சூழ்ந்து விடுகின்றது அந்த கர்மவினையில் இருந்து விடுபடுவதற்காக அய்யா கூறிய வழி யாது?
நீள நூல் இட்டு(சுழிமுனையில் சுவாசத்தை நிறுத்தி) தவம் செய்ய கூறினார்.

3. அய்யா நாராயணமூர்த்தி சம்பூரண தேவனிடம் இறைவனை அடைவதற்குரிய வழியாக கூறியது யாது?
பாசமறுத்தல்லவோ பரகதியை தேடுவது என்றுக் கூறினார்.

4. சம்பூர்ண தேவனுக்கு பர தேவதையின் மீது ஆசை வந்த காரணத்தினால் பூலோக பிறப்பில் அவனுக்கு ஏற்பட்ட துன்ப துயரங்கள் எவை எவை?
பூலோவாழ்வில் பரதேவதையை கண்டு கருவால் வசமாகி இருவர் ஒருவர் என வாழும் போது ஊர் மக்களால் பல கேலிப் பேச்சுக்கு ஆளாகி மேலும் பல துன்பங்களை அனுபவித்து நஞ்சு நின்று ஆனாலும் நாட்டு கொண்டோ உயிரை விட்டு விட மனதில் எண்ணங்கள் உருவாகியது.

5. அய்யா சம்பூரண தேவனிடம் அய்யா உன் துயரம் தீர்த்து உன்னை எடுத்து என் மகவாய் என் துயரம் எல்லாம் யானே நீ மாற்றி செய்து என் வரிசை தானம் எல்லாம் உனக்கு அளித்து பொன்னரசு தந்து புவியாள வைத்திடுவேன் என்றுச் சொல்லக்கூடிய செய்தியானது எதைக் குறிக்கிறது?
ஒரு ஆன்மா முக்தி பேறு அடையும் நிலையைக் குறிக்கிறது.

6. அய்யா சம்பூரண தேவனிடம் எப்போது முக்தியாகிய நற்பேறு அருளுவேன் என்றார்?
பூலோவாழ்வில் பல துன்பங்களை அனுபவித்து நஞ்சு நின்று ஆனாலும் நாண்டு கொண்டோ உயிரை விட்டு விட மனதில் எண்ணங்கள் உருவாகி இருக்கும் போது நான் உன்னை எடுத்து நற்பேறு அருளுவேன் என்றார்.

7. சம்பூரண தேவன் நாராயண மூர்த்தியிடம் பூமியில் நான் போய் பிறந்து சான்றோர் வழியில் வாழ்ந்து வருகின்ற போது எதை தனக்கு பேறாக தரவேண்டும் என்று வேண்டினான்?

சம்பூர்ண தேவனுடைய குலமும் அவனுடைய பிதிர் வழியும் நற்பேறு அடைய புத்தி கொடுக்க வேண்டும் என்று வேண்டினான்.

8. சுவாமி வேதம் மற்றும் சுழல் வேதம் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?
சுவாமி வேதம் என்பது இறைவனை அடைவதற்கு வழிகாட்டக்கூடிய வாழ்வியலை போதிக்க கூடிய சமயம் ஆகும். சுழல் வேதம் என்பது நேரத்திற்கு ஏற்றார் போல் மக்களை தன்வச படுத்துவதற்காக நீச கூட்டத்தினரால் உருவாக்கப்பட்ட வேதம் ஆகும்.

9. தெட்சணா பூமியில் தேசபர சோதனைக்கு வரும் போது நிகழ்வன எவை?
தெச்சணா பூமிதனில் தேசபர சோதனைக்கு
நிச்சயமாய் நான்வருகும் நிசத்துக் கடையாளம்
பூமியி லோர்திக்குப் பொருந்தி மிகவாழும்
சாமிவே தமறந்து சுழல்வேத முண்டாகும்
சாதி வரம்பு தப்பி நிலைமாறும்
பாரிகட்கு மூப்புப் பார்மீதி லுண்டாகும்
நீசக் குலங்கள் நெளுநெளெனப் பூமிதனில்
தூசியிடத் தெண்டந் தொடர்ந்து பிடிப்பார்கள்
வானத் திடிகள் வருடவரு டந்தோறும்
ujkl; கூறினார்

10. "**தூசியிடத் தெண்டம் தொடர்ந்து பிடிப்பார்கள்**" என்ற வரியில் கொடுக்கப்பட்ட '**தூசியிட தெண்டம்**' என்பது எதை குறிக்கிறது?
அநியாயமாக வரி வசூல் செய்வது, வட்டி லஞ்சம் முதலியன அதிகப்படும் என்பதாகும்.

11. சம்பூரண தேவன் நாராயண மூர்த்தியிடம் தன்னை பூவுலகில் பிறவிச் செய்யும் போது எந்த சாதியில் பிறவிச் செய்ய வேண்டும் என்று வேண்டினான்?
ஆதி சாதியாகிய சான்றோர் வழியில் பிறவிச் செய்ய வேண்டும் என்று வேண்டினான்.

12. ஆதி சாதி என்று யாரைக் கூறினார்?

எப்போதும் இறைவனுக்கு தொண்டு செய்து இருக்கும் மனுக்கள் ஆகும்.

13. ஆதிசாதியில் தன்னை பிறவி செய்ய வேண்டும் என்று வேண்டுமென்ற சம்பூரண தேவனுக்கு அய்யா நாராயணமூர்த்தி கூறிய பதில் யாது?
நாராயணமூர்த்தி சம்பூரண தேவனிடம் தேவனே நம் மக்கள் ஏழு பேரில் வெல்லமர் கோன் வாழும் வெற்றி தெய்வ லோகவித்தாய் மெய்வழியில் வாழும் சான்றோர் வழியில் போய் பிறக்க போ என்று விடைக் கொடுத்தார்.

14. சடம் என்பது என்ன?
ஒரு உடல் பிறவி எடுக்கும் போது அதன் ஆன்மாவில் மோதி அ தன் அறிவைக் கெடுக்கும் ஒரு வாயு வகை .

15. சம்பூர்ண தேவனுடைய பிறவியில் சடம் என்று எதைக் குறிப்பிடப்பட்டுள்ளது?
இதற்கு முன் சம்பூர்ண தேவனுடைய ஆறு பிறவியைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

16. “**ஆறு தரம் நம்மை அகம் வைத்துக் கொண்ட சடம் பேறு பெற்றதில்லையே பேறு நா மீந்திலையே**” இதில் கூறப்பட்டுள்ள செய்தி யாது?
சம்பூர்ண தேவனுடைய ஆறு பிறவியைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆறு முறை பிறவி எடுத்து இறைவனை மனதில் நினைத்து உயர்ந்த நிலையில் தெய்வீக தன்மை கொண்டு இருக்கும் ஆன்மாவிற்கு இன்னும் முக்தி பேறு அடையும் நிலையை அருள வில்லை என்பதைக் குறிக்கிறது.

17. ஆறு தரம் அகம் வைத்து கொண்ட சடம்- விளக்குக?
மனித உடலில் நூற்றுக்கணக்கான சக்கரங்கள் உள்ளன. ஆனால் நாடிகள் சந்திக்கும் மையங்களாக ஏழு சக்கரங்கள் உள்ளன. அவைதான் மனிதனின் சக்தி நிலைக்கான ஊற்றுக் கண்கள். அவை மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுக்தி, ஆக்ஞை, சஹஸ்ரஹாரம் ஆகிய சக்கரங்களே.

**மூலாதாரம்**:
இந்த சக்கரம் தூண்டப்பட்டிருந்தால் உணவு, உறக்கம் ஆகியவற்றிலேயே அதிக நாட்டம் இருக்கும். அவை நிறைவேறியவுடன் இறை சிந்தனை மேலோங்கும் இது முதல்நிலை.

**சுவாதிஷ்டானம்**:
உலகின் பொருள் தன்மை சார்ந்து நுகர்ச்சிகளில் இருக்கிற ஈடுபாட்டிற்குக் காரணமானது. சிலருக்கு உணவு மற்றும் உறக்க நிலையில் திருப்தி அடைந்து உலக பொருட்கள் மீது ஆசை அதிகமாகி அந்த ஆசை நிறைவேறியதும் இறைச்சிந்தனை மேலோங்கி வரும். இது இரண்டாவது நிலை.

**மணிப்பூரகம்**:
உடலின் உறுதி மற்றும் நல மேம்பாட்டுக்கானது. இந்த சக்கரம் தூண்டப்பட்டவர்கள் கடும் உழைப்பாளிகளாக எறும்பைப் போல் சுறுசுறுப்பானவர்களாக இருப்பார்கள். தன்னுடைய அடிப்படைதேவைகளை நிறைவு செய்து கொண்டு பின் இறைவனை அடையவேண்டும் என்ற நிலை. இது மூன்றாவது நிலை.

**அனாஹதம்**:
இந்த சக்கரத்துக்கென்று சில முக்கியத்துவங்கள் உண்டு. படைப்பாற்றல், அன்பு போன்றவற்றின் ஆதார சக்கரம் இது. முந்தைய மூன்று சக்கரங்களான மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம் ஆகியவை உலகியல் இன்பங்களுக்கும், வாழ்க்கைக்கும் உரியவை. அநாஹதத்தை அடுத்து வருகிற விசுக்தி, ஆக்ஞை, சஹஸ்ரஹாரம் ஆகியவை அருள் நிலை, ஆன்மீக வளர்ச்சி போன்றவற்றிற்கு உரியவை.

இந்த இருவேறு நிலைகளுக்கும் மத்தியில் ஒரு சமநிலையான தன்மை அநாஹதத்திற்கு உண்டு. இரண்டு இயல்புகளும் கலந்ததாக இது அமைந்துள்ளது. இந்தநிலையில் இருந்து ஆன்மீக விழிப்புணர்வு ஏற்படுத்தபட்டு ஆன்மா விழிப்படையத் துவங்குகிறது. இது நான்காவது நிலை.

**விசுக்தி**:

தொண்டை குழியில் அமைந்துள்ளது. இது தீயவற்றை வடிகட்டும் ஆற்றல். விசுக்தி சக்கரம் தூண்டப்பட்டிருந்தால் விஷத்தன்மை உடலுக்குள் நுழையாமல் தடுக்க முடியும் .விஷம் என்றால் உணவு மட்டுமல்ல .தீய உணர்வுகள் ,எண்ணங்கள் ,சக்திகள் என்று விஷத்தன்மை கொண்டவற்றிலிருந்து விடுபட முடியும். தீய எண்ணங்களை மனதில் நினைத்து கொள்ளாமல் இருந்தால் ஞானம் பிறக்கும்.

**ஆக்னா**:
புருவ மத்தியில் உள்ளது .இது ஞானம் ,தெளிவு போன்றவற்றுக்கான சக்கரம் .விசுக்தியைப் பொறுத்தவரை , அந்தச் சக்கரம் தூண்டப்பட்டால் ஆற்றலோடு திகழ முடியுமே தவிர சமூகத்தில் நிறைய எதிர்ப்புகள் இருக்கும் .சமூக வாழ்க்கையோடு உடன்பட இயலாது .மக்களிடமிருந்து விலகி வாழ்கிற நிலையிலேயே இருப்பார்கள் .ஆனால் ஆக்ஞா முழுவதுமாகத் தூண்டப்பட்டவர்கள் சமூகத்தில் அங்கீகாரத்தைப் பெற்ற ஞானவான்களாகத் திகழ்வார்கள்.

**சஹஸ்ரஹாரம்**:
இந்த சக்கரம், பரவச நிலையைத் தரத்தக்கது. எப்போதும் ஒருவிதமான பரவச நிலையிலேயே இருக்கிற தன்மை, சஹஸ்ரஹாரா முழுமையாகத் தூண்டப்பட்டவர்களுக்கு உரியது. இந்த ஏழு சக்கரங்களும், வாழ்வின் ஏழுவிதமான தீவிரத்தன்மைகள், பெரும்பான்மையான மக்கள் மூலதாரத்திற்கும், மணி பூரகத்திற்கும் நடுவில் சக்திநிலை தூண்டப்பட்டு வாழ்ந்து முடிக்கிறார்கள். சிலருக்கு மட்டுமே அநாஹதம் வரையில் அந்த ஆற்றல் தூண்டப்படுகிறது.

பூலோக வாழ்விற்கு ஆசைபட்ட காரணத்தால் அந்த வாழ்வையும் நிறைவு செய்த பின் முக்தி அருளுவேன் என்றுக் கூறியிருக்கிறார் . இவ்வாறு ஆறுதரம் நல்ல நிலையில் வாழ்ந்து முக்தி பேறு அடையும் நிலையில் பூலோக வாழ்விற்கு ஆசைபட்ட சம்பூர்ணதேவனை பூலோகத்தில் பிறவிச் செய்யவேண்டும் என்று எண்ணி முந்தைய விவரங்களை எடுத்துக் கூறினார்.

**குறிப்பு**:

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆறுதரம் என்பது ஆறு ஆதார சக்திகளை இயக்கி உயர்ந்த நிலையில் அடைந்தவர்களாக இருக்கட்டும், ஆறு ஆதார சக்திகளையும் வாழ்வியல் பூர்வமாக அனுபவித்து தங்களுடைய எண்ணங்களை உயர்ந்த நிலையில் கொண்டு வந்தவர்களாக இருக்கட்டும், இரண்டு நிலைகளில் இருப்பவர்களுக்கும் பொருந்தும் விதமாக அகிலத்திரட்டு அம்மானையில் எம்பெருமான் நமக்கு அருளியிருக்கின்றார். மேலும் இல்லறத்தை தவமாக நடத்த வேண்டும் என்று சொல்லி இருப்பதன் மூலம் அய்யா வாழ்வியலை மேன்மைப்படுத்தி இருக்கின்றார்.

மனிதப்பிறவியின் நோக்கம் வாழ்க்கையில் நாம் ஒவ்வொரு நிலைகளையும் கடந்து வாழ்ந்து இறைவனுடைய அந்த முழுமை பெற்ற ஏழாவது நிலையை அடைய வேண்டும். அந்த ஞானத்தை உணர வேண்டும். நமக்குள்ளே இறைவனை அறிய வேண்டும் என்பதை இங்கே எம்பெருமான் எடுத்துரைப்பதைக் காணலாம். இந்த நிலையை ஒரே பிறவியில் அடைந்தவர்களும் இருக்கிறார்கள், பல பிறவிகள் பிறந்து (எண்ண ஓட்டத்தின் காரணமாக கர்மவினையில் சிக்குண்டு பல முறை பிறவி பெற்ற ஆன்மா) உயர்ந்த நிலையை அடைந்தவர்களும் இருக்கிறார்கள். இதில் சம்பூர்ண தேவனுடைய பிறவி உயர்ந்த தெய்வப்பிறவி. அதாவது ஆறு ஆதார சக்தியை கடந்து தெய்வ தன்மை பெற்று அமைந்துள்ளது என்பது புலனாகிறது.

18. ."**ஆறு தரம் நம்மை அகம் வைத்துக் கொண்ட சடம் பேறுபெற்றதில்லையே பேறு நாம் மீந்திலையே அச்சடலம் அம்மலையில் அருந்தவசு பண்ணினதே இச்சடலமீடேற இந்த நாள் வந்ததென்று**" இங்கு குறிப்பிடபட்டுள்ள செய்தி எது?

ஆறு ஆதாரச் சக்தியை கடந்து இறை சிந்தனையோடு வாழ்ந்த அந்த ஆன்மாவானது இன்னும் முக்தி அடையாத நிலையில் இருக்கின்றது. அதற்கு முத்தி கொடுக்க வேண்டும்.அதற்குரிய சரியான தருணம் இப்போது வந்திருக்கிறது என்பது ஆகும்.

19. **தேவன் சடலம் அதை திக்கென்று தான் அழித்து மூவர் நடுவருடைய முச்சடல கூடதையும் வரவழைத்து வாருமென்று மறையோரை தானேவி விரைவாக வாரும் என்று விடை**

**கொடுத்தாரெல்லோரும்**” இதில் கூறப்பட்டுள்ள “**மூவர் நடுவருட முச்சடலக் கூடு**” என்பது எதை குறிக்கிறது?

ஒரு ஆன்மா பிறவிச் செய்யப்பட வேண்டும் என்றால் மூன்று தன்மை உடைய வினைகளால் (தொல்வினை, நுகர்வினை, ஊழ்வினை) ஆன்மாவின் பிறவி நிர்ணயிக்கப்படுகிறது. அப்படி நிர்ணயம் செய்யப் பட்ட வினையுடலை அழைத்து வாருங்கள் என்பதாகும்.

20. தவ நிலையில் இருக்கின்ற ஆன்மாவை அழைத்து வர யாரை அனுப்பினார்கள்?
மறையோரை அனுப்பினார்கள்.

21. மறையோர் என்பவர் யார் ?
வேதங்களை கற்று உணர்ந்தவர்கள் மறையோர்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள்.

22. மறையோர்கள் ஆன்மாக்கள் இருக்கின்ற அந்த மலையானது எங்கு இருப்பதாக கூறினார்கள்?
அலையில் இருக்கின்ற துவாரகாபதிக்கு நேர வடக்குதிசையில், துவராகாபதியின் வடக்கு வாசலின் நேராக இருப்பதாக கூறினார்கள்.

23. முச்சடலக்கூடு விளக்குக?
ஒரு ஆன்மாபிறவி எடுக்கும் போது மூன்று விதமான வினைகள் சூழ்ந்து தொடர்ந்து வரும். இதை கர்மா என்றுக் கூறுகிறோம். இந்த கர்மா தொல்வினை (ஆன்மா முற்பிறவியில் சேகரித்த வினை) நுகர்வினை ( ஆணவம், கன்மம், மாயை இவற்றால் வரும்வினை) ஊழ்வினை ( ஆன்மாவால் செய்யபடும் நன்மை தீமைகளைப் பொறுத்து அமையும் வினை) என்ற மூன்று வினையோடு சேர்ந்து அமைகிறது. இதையே முச்சடலக் கூடு என்றுஅழைக்கப்படும்.

24. ஒரு ஆன்மாவினுடைய மறுப்பிறவி எவ்வாறு அமைகிறது?

ஒரு ஆன்மா வினுடைய மறுப்பிறவியானது அவரவர் செய்யும் வினைப்பயன் அல்லது கர்ம வினையை பொறுத்தது ஆகும். நல்ல

செயல்களை செய்தால் அதன் பயன் நன்மை தரும். மாறாக தீவினையோ, துன்பம் தரும். ஒருவரின் அனைத்து செயல்களின் பயன்கள், அவரவர் முற்பிறவிச் செயல்பாடுகள் உட்பட, அவரது கர்மவினை தீர்மானிக்கின்றது. நல்வினை மற்றும் தீவினைகளின் தொகுதியே வினைப்பயன். இந்த வினைப்பயன், சஞ்சிதகர்மம் (சேமித்தவினைப்பயன்), பிராரப்த் கர்மம் (செயல்படுகின்ற வினைப்ப்யன்) மற்றும் ஆகாமிய கர்மம் (வர இருக்கின்ற வினைப்பயன்) என மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று விதமான வினைகளோடு மறுப்பிறவி அமைக்கப்படுகிறது.

25. ஒரு ஆன்மா எப்போது முக்தி நிலையை அடைகிறது?

ஆன்மாவின் பிறவி விதிப்படி தீவினைகள் செய்தவர்கள், மறுபிறவியில் கீழ் உலகங்களில் உழன்று மீண்டும் பூமியில் இழி பிறப்பாளர்களாகவும் ,நல்வினைகள் செய்தவர்கள் சொர்க்கலோகம் ,பித்ரு லோகம் போன்ற மேலுலகங்களுக்குச் சென்று ,நல்வினைப்பயன்கள் முடிந்தவுடன் மீண்டும் புவியில் உயர் பிறப்பாளர்களாகவும் பிறப்பர் .தீவினைகள் மற்றும் நல்வினைகள் செய்தவர்களானாலும் பிறவிச்சுழற்சியில் இருந்து தப்பி ,பிறப்பிலா பெருவாழ்வு அடைய இயலாது .பிறப்பிலா பெருநிலை என்பது ,வாழ்வின் ஒரு குறிப்பிட்ட நிலையில் அனைத்து தீவினை மற்றும் நல்வினைப் பயன்களிலிருந்து விடுபட்டு ,மனவடக்கம் ,புலனடக்கம், தியாகம், தவம் போன்ற நற்குணங்களுடன் குரு மற்றும் மெய்யியல் சாத்திரங்களின் துணையுடன் ஆத்மாவை அறிந்து மன அமைதி பெறுதலே மரணமிலாப் பெருவாழ்வு என்ற முக்தி நிலையாகும்.

26. மறையோர்கள் ஆன்மாவை தேடி வந்த தங்க மலையினுடைய சிறப்பு என்ன?

தங்க கிணறு வங்க கிணறு தாமிரபர கிணறுடன் கூடிய தடாகம் அமைந்திருக்கிறது. கரைக்காணா தேவர்கள் காட்சியிடும் மலை, முனிவர் கள் வீற்றிருக்கும் மலை, இறந்தோரை தானெழுப்பும் சஞ்சீவி மூலிகை வளரும் மலை. இவ்வாறு பல சிறப்புகளைப் பெற்ற மலைதான் சடம் வீத்திருந்த தங்க மலை ஆகும்.

27. "**கண்டாரே காயம் பூ கண்ணர்முக் கூடதையும் கொண்டாடி கூடதையும் குளிர்ந்த ரதமீதேற்றி**" இதில் கண்டாரேக் காயாம்பு கண்ணர் முக்கூடு என்பது என்ன?
மூவினைகளுடன் கூடிய ஆன்மா.

28. "**கண்டாரே காயம் பூ கண்ணர்முக் கூடதையும் கொண்டாடி கூடதையும் குளிர்ந்த ரதமீதேற்றி**" இதில் குளிர்ந்த ரதம் என்பது என்ன?
குளிர்ந்த ரதம் என்பது தெளிந்த உள்ளம். அல்லது தூய்மையான உள்ளம் என்பது ஆகும்.

29. "**பார்த்து சடலமதை பதிந்த முகத்தோடணைத்து இதில்** "**பதிந்த முகத்தோடணைத்து**" என்பது என்ன?
இறை உணர்வை கொடுத்து என்பதாகும்.

30. "**தேற்றியுயிர்க் கொடுத்துச் செப்பு வார் கூடுடனே**" தேற்றியுயிர் கொடுப்பது என்பது என்ன?
தூக்க நிலையில் உள்ள ஆன்மாவை விழிப்பு நிலைக்கு கொண்டு வரும் நிகழ்வு ஆகும்.

31. "**தேற்றியுயிர்க் கொடுத்துச் செப்பு வார் கூடுடனே**" தேற்றியுயிர் கொடுத்து ஆன்மாவோடு கூறியச் செய்தி யாது?
இதற்கு முன்பு எடுத்த ஒவ்வொரு பிறவியிலும் என்னை அகத்தில் வைத்து இறை சிந்தனையோடு வாழ்ந்து வந்தாய். ஒவ்வொரு பிறவியிலும், மூவுலகுக்கும் பூமி, கடல், பொருப்பு பூலோகம் எல்லாம் என்னை சுமந்து வாழ்ந்து என்னை நினைத்தபடி இறை எண்ணத்தோடு வாழ்ந்தாய். முந்தைய பிறவியில் இறைவனை மனதில் கொண்டு தூய உள்ளத்தோடு வாழ்ந்த உனக்கு இதுவரையிலும் நற்பேறு அளிக்கவில்லை. ஆகவே இந்த பிறவியில் பூமியில் பிறந்து சில நாட்களில் உன்னை எடுத்து உனக்கு புத்தி உபதேசங்களை எல்லாம் அருளி உன்னுடைய துயரம் யுக சோதனை எல்லாம் மாற்றி யுக துயரங்கள் எல்லாம் மாற்றி எந்தன் துயரம் ஈசர் துயரம் எல்லாம் மறுத்து கலிய அறுத்து கனாபாயங்கள் தான் அறுத்து சலிவில்லாத தர்ம தங்க நவரத்தினம் முடிசூடி எல்லோரும் ஒருமிக்க இருந்து ஆளும் தர்மயுக வாழ்வு அருளுவேன் என்றுக் கூறினார்.

32. "**எட்டுத் திசை போற்ற ஏற்றகுடை ஒன்று தந்து அரசாண்டு நீயும் அழியாத் திருவுளம் போல்**" இதில் அழியா திருவுளம் என்பது யாது?
முக்தி எனும் பேறு பெற்ற ஆன்ம நிலை ஆகும்.

33. முக்திப் பெற்ற ஆன்மாவுக்கு அளிக்கப்படுகின்ற சிங்காசனங்கள் எவை எவை ?
பூமுக சிங்காசனம், பொன்முக சிங்காசனம், கோமுக சிங்காசனம், குணமுக சிங்காசனம், மாமுக சிங்காசனம், மயில் முக சிங்காசனம் , அன்னமுக சிங்காசனம் , மேலும் பொன்னம்பலத்தில் காணப்படும் பெரிய சிங்காசனமாகிய முப்பத்திரண்டு அறத்தால் ஆன சிங்காசனம் அருளப்படுவதாகக் கூறினார்.

34. நாராயணரை பிள்ளையாக பெறுவதற்கு தசரத மன்னர் எத்தனை ஆண்டுகள் தவம் இருந்தார்?
பன்னீராயிரம் ஆண்டுகள்

35. உலகளந்தோர் வேசமதில் இராம அவதாரம் எத்தனை வாரங்கள் இருந்தது?
முந்நூறு வாரங்கள்.

36. .சம்பூர்ண தேவனுடைய பிறவி கலியுகத்தில் அமைய காரணம் என்ன?
கர்மகடன் கழிப்பதற்கு

37. சம்பூர்ண தேவனுடைய பிறவியின் மூலம் இறைவன் நமக்கு உணர்த்தும் செய்தி யாது?
ஓர் ஆன்மா பிறவி பிணியிலிருந்து விடுபடுவதற்கு மூவினை கர்மங்கள் அகற்றப்பட வேண்டும் என்பதாகும்.

38. ஓர் ஆன்மாவின் கர்ம வினை எப்பொழுது துவங்குகிறது?
தாயின் வயிற்றில் இருக்கும் போதா?பிறவி எடுத்த பிறகா?
பிறவி எடுத்த பிறகு.

39. தாயின் கருவில் இருக்கும் போது ஆன்மா எதனோடு தொடர்பு கொண்டு உள்ளது?

இறைவனோடு

39. தாயின் கருவில் இருக்கும் போது ஆன்மா இறைவனோடு தொடர்பு கொண்டு உள்ளது எனில் தாயின் எண்ண ஓட்டத்தின் பிரதிப்பலிப்பு குழந்தைக்கு எவ்வாறு அமைகிறது?
இறைவன் செயலால் தாயின் கர்மாவைப் பொறுத்து அமையும்.

40. "**சடம் பிறக்க லோகம் தட்டு மிகமாறி உடன் பிறக்க செய்தார் உலகளந்தோர் கற்பினையால்**" விளக்குக?

மூன்று கர்மவினை தன்மையை கொண்டு ஓர் ஆன்மா பிறவி எடுக்க தயாராக இருக்கும் போது தாயின் கருவில் வளரும். பின்னர் கருவில் வளரும் ஆன்மாவின் கர்ம வினை எப்படி துவங்க வேண்டும் என்ற நிலை குழந்தைப் பிறவி எடுக்கும் போது இறைவனால் நிர்ணயம் செய்யப்படுகிறது என்பது ஆகும்.

41. ஒவ்வொரு ஆன்மாவினுடைய பிறவி தரணியில் அமைய காரணம் என்ன?
ஒவ்வொரு ஆன்மாவினுடைய மூவினை கர்மங்களை சோதித்து பக்குவப் படுத்தி மீண்டும் பிறவாத நிலையை அடையச் செய்வதற்கு ஆகும்.

.

## அகில வாசகம்

திருமால் கலைமுனிக்கு அருளல்

எண்ணமில்லை யென்று ஈசுரரு மாயவரும்
கொண்டாடி ஈசுரரைக் கூறுவா ரச்சுதரும்
கெண்டையக்கண் ணீசுரரே கேட்டீரோ யென்றனெண்ணம்
பஞ்சவர்க்கு அஞ்சல்செய்து பார்மீதில் நானிருக்க
வஞ்சகநீ சக்கலியன் வந்ததுகண் டேபதறி
நடுநடுங்கி நானோட நல்லகலைக் கோட்டுமுனி
பொடுபொடென வந்தான் போற வழிதனிலே
ஏன்காணும் மாயவரே எய்த்திளைத் தோடுவதேன்
கண்காணாப் போறேனென கலைக்கோட்டு டனுரைத்தேன்
என்ன விதத்தாலே என்றே யவனிசைய
சொன்னதுறு கலியன் சூட்சியினா லென்றவுடன்
அப்போ முனியும் அவனேது சொல்லலுற்றான்

இப்போநீ ரோடுகிறீர் இவனை யழிப்பதற்கு
எப்போ வருவீர் இசையுமென்றான் மாமுனிவன்
அப்போ முனியோடு அருளினது நீர்கேளும்
மாமுனியே நீகேளு வஞ்சகநீ சக்கலியை
நாமுன்னின்று கொல்ல ஞாயமில்லை கேட்டிடுநீ
கலியனுட கண்ணு கண்டால் பவஞ்சூடும்
திலிய அவனுயிரைச் செயிக்கயெவ ரால்முடியும்
முன்னின்று கொல்ல மூவரா லுமரிது
பின்னின் றவனவனால் பேசாதே மாழவைப்பேன்
வல்லமையுங் காட்டேன் மாநீசன் கண்ணின்முன்னே
நில்லாமல் நின்று நீசன்தனை யழிப்பேன்
அற்புதமும் செய்யேன் அந்நீசன் தானறிய
உற்பனமுங் கொடேன் ஒன்றறியா நின்றிடுவேன்
வந்தெனச் சொல்வார் வரவில்லை யென்றிடுவார்
என்றன்பே ரோகாணும் யாரோஎனச் சொல்வார்
இதோவந்தா னென்பார் இவனில்லை யென்றிடுவார்
அதோவந்தா னென்பார் அவனில்லை யென்றிடுவார்
இப்படியே சூட்சமொன்று எடுப்போம்நாம் மாமுனியே
எப்படியு முள்ளறிவோர் எனையறிவார் மாமுனியே
அறிந்தோ ரறிவார் அறியாதார் நீறாவார்
செறிந்தோர்கள் வாழ்வார் சேராதார் போய்மாழ்வார்
சாத்திரத்தி லுந்தோன்றேன் சதுர்மறையைத் தாண்டிநிற்பேன்
சேத்திரத்தி லுமடங்கேன் செய்தவத்தி லுமடங்கேன்
அன்பிலு மடங்கேன் அறத்திலு மேயடங்கேன்
வம்பிலு மடங்கேன் வணங்கிடி லுமடங்கேன்
கும்பிடி லுமடங்கேன் குவித்திடி லுமடங்கேன்
நம்பிடி லுமடங்கேன் ஞானத்தி லுமடங்கேன்
யோகக் கிரியை உறுசரிதை யிலடங்கேன்
விற்பனத்தி லடங்கேன் வினோத மதிலடங்கேன்
சொற்பனத்தி லடங்கேன் தெரிசனத் திலடங்கேன்
கனாவி லடங்கேன் கைகாட்ட லிலடங்கேன்
அனாவி லடங்கேன் அச்சரத்திலு மடங்கேன்
புத்தியிலும் மடங்கேன் பொறியதிலுமடங்கேன்
இத்தனையிலு மடங்காது இருந்து பகைமுடிப்பேன்
என்றுநான் சொல்ல ஏற்றகலைக் கோட்டுமுனி
மன்றுதனில் வீழ்ந்து மறுகியழு தேபுலம்பி

விருத்தம்

மண்ணிலு மடங்கா மனத்திலு மடங்கா மறையிலு மடங்கா
பலவசத்திலு மடங்கா கண்ணிலு மடங்கா கருத்திலு மடங்கா
கவியிலு மடங்கா பலவிதசெபிப் பிலுமடங்கா
எண்ணிலு மடங்கா இகத்திலு மடங்கா இறையினி லடங்கா
இரங்கிலு மடங்கா ஒண்ணிலு மடங்காத உனைவந் தடைந்திட
உரைத்திட திடமருளென பதத்தடிமிசை விழுந்தான்

விருத்தம்

மறையினி லடங்கா இறையினி லடங்கா வணங்கிலு மடங்கா
பலவகையிலு மடங்கா துறையினி லடங்கா தொல்புவியி லடங்கா
சுருதியி லடங்காய சுகயினிலடங்கா உறவிலு மடங்கா
ஒளியிலு மடங்கா உகத்திலு மடங்கா ஒருவிதத்திலு மடங்கா
புறத்திலு மடங்கா அகத்திலு மடங்கா புகழ்ந்துனை யடைக்கிட
வகுத்துரையென பதத்தடி மிசைவிழுந்தான்

விருத்தம்

சரிகையி லடங்கா கிரியையி லடங்கா சயோகத்தி லடங்கா
ஞானத்தி லடங்கா கருத்தினி லடங்கா கலைக்கியானத் திலடங்கா
கனவிலு மடங்கா கருவிலு மடங்கா உருவிலு மடங்கா
உருதையிலடங்கா
ஒன்றிலு மடங்காத உனைவந் தடியாருன தருகினி லடங்கிட
அருளுரைத் திடுவென அருள்முனி பதத்தடிமிசை விழுந்தான்

விருத்தம்

உகத்திலு மடங்கா ஓதிலு மடங்கா உணர்விலு மடங்கா
உற்பனத் திலுமடங்கா தவத்திலு மடங்கா தழுவிலு மடங்கா
தனத்திலு மடங்கா தயவிலு மடங்கா அகத்திலு மடங்கா
புறத்திலு மடங்கா அசத்திலு மடங்கா புசத்திலு மடங்கா
மனத்தகத் தடக்கியுன் பதத்தடி பணிந்திட
வகுத்துரை யருளென பதத்தடிமிசை விழுந்தான்

நடை

ஓரெழுத்து மீரெழுத்தும் உற்றபர மூன்றெழுத்தும்
ஆறெழுத்து மஞ்செழுத்தும் ஆனா அரியெழுத்தும்
ஏதெழுத்திலு மடங்காது இருந்துபகை முடிப்பேனென
ஓதினீரே அய்யா உலகளந்த பெம்மானே
எட்டாப் பொருளே எங்கும் நிறைந்தோனே
கட்டாக் கலியைக் கருவறுக்க வந்தீரால்
நாங்களுமைக் கண்டு நலம்பெறுவ தெப்படித்தான்
தாங்கள் மனதிரங்கித் தான்சொல்ல வேணுமென்றான்
அப்போ முனிக்கு அருளினது நீர்கேளும்
இப்போது மாமுனியே இன்றுநீ கேட்டதுதான்
ஒருவ ரறியாத உபதேசங் கண்டாயே
கருதி வருந்தினதால் கட்டுரைப்பேன் கேட்டிடுநீ
எனக்கா கும்பேர்கள் இனங்கேளு மாமுனியே
புனக்கார மில்லை பூசை முறையுமில்லை
கோவில்கள் வைத்துக் குருபூசை செய்யார்கள்
பூவதுகள் போட்டுப் போற்றியே நில்லார்கள்
ஆடு கிடாய்கோழி அறுத்துபலி யிடார்கள்
மாடு மண்ணுருவை வணங்கித் திரியார்கள்
என்பேரு சொல்லி யாரொருவர் வந்தாலும்
அன்போ டவரை ஆதரிக்கும் பேராகும்
இரப்போர் முகம்பார்த்து ஈவதுவே நன்றாகும்
பரப்போரைக் கைசேர்த்துப் பணிவதுவே நன்றாகும்
என்பேரால் முத்திரிகள் இட்டோரே நன்றாகும்
அன்போராய் வாழ்ந்தாலும் அறிவுநினை வொன்றானால்
நாம்வந்தோ மென்ற நாமமது கேட்டவுடன்
தாம்வந்து வேடமிட்டோர் சாதியது நன்றாகும்
அல்லாமற் கேளு அரிய முனியேநீ
எல்லா அமைப்பும் ஏலமே விட்டகுறை
எச்சாதிக் காச்சோ அச்சாதி நன்றாகும்
அச்சாதிநன்றாகும் அவ்வினமும் நன்றாகும்
எவர்க்கு மிகாஈந்து இருப்போரே நன்றாகும்
அவர்க்குதவி செய்வோர் அவ்வினமும் நன்றாகும்
தாழ்மையாய் வாழ்ந்த சாதியது நன்றாகும்
ஏழ்மையாய் வருவோம் இரப்பன் பரப்பனென
இரப்பனைக் கைகொண்டோர் எனையேற்றார் மாமுனியே
பரப்பனைக் கைகொண்டோர் பரமேற்றார் மாமுனியே

சினமு மறந்து செடமுழிக்கும் பேர்மனுக்கள்
நினைவுக்குள்ளே நாம் நிற்போங்காண் மாமுனியே
இனத்தோடே வொத்து இருந்துமிக வாழ்ந்தாலும்
சொன்ன நினைவதுக்குள் துயிலாமல் வாழ்வோங்காண்
மாசுக் கலியை மனதூடா டாதேயறுத்து
வாசு நினைவில் வந்துநிற்போம் மாமுனியே
பின்னுமொன்று கேளு ஒருவர்க்கோர் வாரமுமாய்
முன்னுகத்தில் கேள் ஒருவர்க்கோர்வாரமுமாய்
நின்றோ முனியேயினி நீசக் கலியறுக்கச்
சென்றோமே யானால் செய்யுந் தொழில்கேளு
காலுக்குள் ளேதிரியாம் கையதுக்குள் ளேதிரியாம்
மேலுக்குள் ளேதிரியாம் விழியதுக்குள் ளேதிரியாம்
கண்டெடுத்தார் வாழ்வார் காணாதார் வீணாவார்
பண்டைப் பழமொழிபோல் பார்மீதி லாட்டுவிப்பேன்
கண்டெடுத்துக் கொண்டோர் கரையேறு வாரெனவும்
தொண்டனெனக் கண்டு சொன்னேனா னுன்னோடு
தாய்தமர்க ளென்றும் தனது கிளைகளென்றும்
வாயுரமாய்ச் சொல்லும் வம்பரென்றும் பார்ப்பதில்லை
அன்பாகி வந்தவரை அலைச்சல்செய் தேற்பதுண்டு
வம்பான மாற்றானை வளர்த்தே யறுப்பதுண்டு
எட்டியு மெட்டாத எழைக் குணம்போலும்
கட்டியுங் கட்டாத கடிய சொரூபமதும்
வேளைக்கு வேளை விதக்கோல முமணிந்து
நாளுக்கு நாளாய் நடக்கு மதிசயமாய்
இரப்ப வடிவாய் இருந்து கலிதனையும்
பரப்பிரியமாய் நின்று பக்திசோதித்தேநாம்
எங்குமிருந்து எரிப்போங் கலிதனையும்
சங்கி லிரந்து தான்வளர்ப்பே னன்போரை
என்றுரைக்க நாதன் எடுத்துமுனி யேதுரைப்பான்
மன்று தனையளந்த மாயத் திருமாலே
இந்த விதமாய் எழுந்தருளி வந்திருப்பது
எந்தச் சொரூபம் எடுத்தணிவீ ரெம்பொருமாள்
கேட்டான் முனியும் கீர்த்தியுள்ள ஈசுரரே
நாட்டான மாமுனிக்கு நானுரைத்தது கேளும்
இகாபரத்தை நானினைத்து ஏழுபிள்ளை ஈன்றெடுத்து
மகாபரனார் செயலால் மக்களுக்குச் சொத்தீய
நானுப தேசித்து நாட்டில் மிகவிருத்தி

மானுவஞ் சோதிக்க மகற்கு அருள்கொடுத்து
மாசுக் கலியறுத்து மக்களொரு மித்தவுடன்
பாசு பதங்கொடுத்துப் பாலன்கை யால்விளக்கிக்
கூப்பிடுத லொன்றில் குவலயத்தைத் தான்கிறக்கிச்
சாப்பிடுவே னஞ்சைத் தன்பாலை யாளவைப்பேன்
என்று கலைமுனிக்கு இயம்பிவந்தே னீசுரரே
அன்று மொழிந்ததுக்கு அமைத்ததுகா ணிம்மகவு
சந்தோச மாச்சுதுகாண் சங்கரரே நீருமிப்போ
வெந்தோசந் தீர்ந்துதென்று வெள்ளிக் கயிலையிலே
ஒருவிடத்தி லெக்கியத்தை ஊட்டிக் கனலெழுப்பித்
திருநடன மாடுமென்று செப்பினா ரொப்புடனே
அப்படியே நல்லதென்று அரனு முமையாளும்
முப்படியே மாலினிக்கு ஒன்பதாம் பேறெனவும்
வேதனுக்கோ ராயிரம் பிறவி யாச்சுதென்றும்
மாது உமைக்கு வளர்பிறவி ஏழெனவும்
திதுவுக்கோர் பத்தாம் செய்யப் பிறவியென்றும்
சதுர்மறைக் கேழெனவும் சாஸ்திரத்துக் கோர்நான்கும்
வானவர்கோன் றனக்கு வளர்பிறவி மூன்றெனவும்
தானவர்க் கேழெனவும் சரசுபதிக் காயிரமாம்
தொண்டர் தமக்கு சூல்பிறவி யொன்றெனவும்
அண்டர்கள் மெய்க்க அரனடன மாடலுற்றார்

## அகில வாசக விளக்கம்:

சம்பூர்ண தேவனை பிறவி செய்துவிட்டு சிவபெருமானோடு நாராயண மூர்த்தி பேசுகின்றார். எப்படி என்றால் “**கெண்டயக்கண் ஈஸ்சுரே கேட்டீரோ என்னுடைய எண்ணம்**” என்னுடைய மனதிலே இருக்கிற எண்ணத்தைக் கூறுகிறேன். எப்படி என்றால் நான் பஞ்சவருக்கு அஞ்சல் செய்து அதாவது உதவி செய்து பார் மீதில் இருக்கின்ற போது வஞ்சக நீசக்கலியன் இங்கே வருவதைக் கண்டு பதறி நடுநடுங்கி நான் கலியனின் கண்களில் பட்டு விடக்கூடாது என்று நான் ஓடினேன்.

அப்போது நல்ல கலைக்கோட்டு மாமுனியும் நான் போகின்ற வழியில் வந்தார். வந்தவர் என்னிடம் மாயவரே நீங்கள் எய்த்திளைத்து ஓடுவது ஏன் என்று கேட்டார். அப்போது நான் அந்த கலைக்கூட்டு மாமுனியிடம் கூறினேன். கண்காணாப்

போறேன் என்று கலைக்கோட்டு முனியிடம் கூறினேன். உடனே கலைக் கோட்டு மாமுனி ஏன் என்று காரணம் கேட்டார்.

அப்போது கலைக்கோட்டு மாமுனியிடம் கலியனுடைய சூட்சி பூலோகம் எல்லாம் பரவி விட்ட காரணத்தினால் இந்த கலியினுடைய கண் காணாமல் நான் மறைந்து போக போகிறேன் என்று அந்த கலைகோட்டு மாமுனிடம் கூறினேன். அப்போது அந்த கலைக்கோட்டு முனி நாராயணரிடம் கேட்டார் இப்போது ஓடுகிறீரோ அய்யா இவனை அழிப்பதற்கு எப்போது வருவீர்கள் என்று எனக்கு கூறுங்கள் என்று கேட்டார். உடனே அந்த மாமுனியிடம் நான் கூறியதை இப்போது உங்களிடம் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று சிவபெருமானிடம் கலியனை அழிக்கும் விதத்தைப் பற்றி எடுத்துக் கூறுகின்றார். எப்படி என்றால் மாமுனியே நீ கேளு இந்த வஞ்சக நீசக்கலியை நான் முன் நின்று கொல்ல ஞாயம் இல்லை .
ஏனென்றால் கலியனுடைய கண் கண்டால் பாவம் சூழ்ந்துவிடும். ஆகவே அவனுடைய உயிரை யாராலும் ஜெயிக்க முடியாது . அவனை நேருக்கு நேர் நின்று கொல்ல மூவராலும் அதாவது மும் மூர்த்திகளாலும்(சிவன், பிரம்மா, விஷ்ணு) முடியாது.

அவனைக் கொல்ல வேண்டுமென்றால் நேருக்கு நேர் எதிர்த்து அவனை அழிக்க முடியாது . ஆனால் அவனுடைய செய்கையினால் அவனை அழிக்க முடியும். ஆகையால் பின் நின்று அவனால் பேசாதே மாள வைப்பேன். அவன் என்ன செய்கின்றானோ அந்த செய்கையினால் அவனுக்கு அழிவு வரும்படி செய்வேன். அவனிடம் எந்த வல்லமையும் காட்டேன். கலிநீசன் கண்ணின் முன்னே நில்லாமல் நின்று இந்த நீசனை அழிப்பேன். அது மட்டுமல்ல கலிநீசனை அழிப்பதற்கு எந்த விதமான அற்புதமும் செய்ய மாட்டேன். கலியன் கண்முன்னே உற்பனமும் (என்னுடைய தோற்றத்தையும்) காட்ட மாட்டேன். ஒன்று மறியாதவன் போல் நின்று நீசன்தனை அறுப்பேன்.

நான் யார் எந்த உண்மையை கலிநீசர்கள் அறிய மாட்டார்கள். எந்தன் பெயரோ காணும் யாரோ எனச் சொல்வார்கள். இதோ வந்தான் என்று கூறுவார்கள். ஆனால் இவன் இல்லை என்றிடுவார். அதோ வந்தான் என்று கூறுவார்கள். ஆனால் அவன் இல்லை என்றிடுவார்கள். எப்படியும் என்னை உள்ளத்தில்

அறிந்தவர்கள் அறிந்து கொள்வார்கள் மாமுனியே!. கலிமாயை ஆகிய ஆசா பாசங்களில் இருந்தும், உடல் உணர்வுகளிலிருந்தும் விடுபட்டு ஞானம் பெற்றவர்கள் மட்டுமே என்னை அறிவார்கள். என்னை அறிந்தவர்கள் மரணம் இல்லாத பெருவாழ்வை பெறுவார்கள். என்னை ஞானக்கண்ணால் கண்டாலே கலி அழிந்து போகும். என்னை உண்மையாக கண்டு கொண்டவர்களுக்கு தோஷம் எல்லாம் அகலும். உண்மையான இறைதன்மையோடு எனை நினைத்து வாழ்பவர்கள் என்னை கண்டு கொள்வார்கள். ஆனால் கலிமாசு கொண்டவர்கள் என்னை கண்டு கொள்ள மாட்டார்கள். காணாதவர்கள் மீண்டும் மீண்டும் இந்த உலகில் பிறந்து பிறவி பிணியில் சிக்கி தவித்துக் கொண்டு இருப்பார்கள்.

சாஸ்திரங்களில் தோன்றேன். சதுரமறையையும் தாண்டி நிற்பேன். என்னை எந்த சேத்திரத்திலும் காண இயலாது. தவத்தினாலோ, அன்பினாலோ, அறத்தினாலோ, வம்பினாலோ, வணங்குவதாலோ, அறிய இயலாது. கும்பிடுவதாலோ, நம்பிடுவதாலோ, காண முடியாது. சரிகை, கிரியை, யோகம், ஞானம் எனும் மெய்ஞ்ஞான வழிகள் நான்கிலும் நான் அடங்கமாட்டேன். விற்பனங்களினாலும் அதாவது பிறரை கவர்ந்து இழுக்கும் கவர்ச்சியான பேச்சுகளில் அடங்க மாட்டேன். ஜபங்களினாலும் என்னை அடைய இயலாது.

கனாவிலோ கை காட்டலிலோ அநாவிலோ அட்சரத்திலோ (வேத மந்திரங்கள்) அடங்காது கலி என்னும் பகையை அழிப்பேன் என்று சொன்னேன். இங்கு அட்சரம் என்பது வேத மந்திரங்களை குறிக்கும். அதர்மிகள் அட்சரங்களை ஓதுவதினால் எந்த பயனும் இல்லை. அட்சரங்களின் முற்பொருளான முதல்வனை உணர்ந்து ஓதும் மெய்யடியார்களால் மட்டுமே என்னை காண இயலும் என்பதாகும்.

இதை கேட்ட கலைகோட்டு மாமுனி, மண்ணிலும், மரத்திலும் மறையிலும், கண்ணிலும், கருதிலும், கவியிலும், பல வித செப்பிலும் எண்ணிலும், இகத்திலும், இறையிலும், இரங்கிடிலும், ஒண்ணிலும் அடங்க மாட்டேன் என்றார். உடனே ஒண்ணிலும் அடங்காத உன்னை அடியார்களாகிய நாங்கள் கண்டுப்

பணிந்திட வழிவகைகளைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுப் பணிந்தார்.

அப்போது மறையிலும், இறையிலும், வணங்கிடிலும் , பல விதமான வழிப்பாட்டு முறைகளிலும், துறையினிலும், தொல்லியலிலும், சுகத்தினிலும், கருதினிலும், உறவிலும் ,ஒளியிலும் அகத்திலும் புறத்திலும் அடங்காத உன்னை அடியார்கள் ஆகிய நாங்கள் வந்தடைவதற்குரிய வழியை சொல்லி அருள வேண்டும் என்று பணிந்தார்.

அப்போது சரிகை கிரியை யோகம் ஞானத்தில் கலக்கியானத்திலும் கனவில் கருவிலும் உருவிலும் உருகினிலும் ஒன்றிலும் அடங்காத உனதருகினில் அடியார் வந்து அருளுரை தொட வேண்டும் என பணிந்தார். உகத்திலும் ஓதினும் உணர்வினும் உற்பணத்திலும் தவத்திலும் தழுவிலும் தனத்திலும் தயவிலும் அசத்திலும், புசத்திலும் அடங்காத உன்னை எங்கள் அகத்தில் அடக்கி உன் பதம் பணிந்திட வகுத்துரை அருள்வாய் என திருவடி தொழுந்து நின்றான்.

ஓரெழுத்தும் (உ) ஈரெழுத்து(ஓம்) மூன்றெழுத்து ( அ,உ,ம்) ஆறு எழுத்திலும் (ஓம் நமசிவாய) அஞ்செழுத்து (சிவாய நம) ஆனா அரியெழுத்து( ஓம் நமோ நாராயணா) என்னும் எட்டு எழுத்திலும் அடங்காத இருந்து பகை முடிப்பேன் என ஓதினீரே அய்யா உலகளந்த பெம்மானே, எட்டாப் பொருளே, எங்கும் நிறைந்தோனே கட்டா கலியை கருவறுக்க வந்தீரே! அய்யா நாங்கள் உம்மைக் கண்டு நலம் பெறும் வழியை தயவுகூர்ந்து மனமிறங்கி சொல்ல வேண்டும் என்று நாராயண மூர்த்தியின் திருவடி பணிந்து நின்றான் கலைக் கோட்டு மாமுனி.

கலைக்கோட்டு மாமுனியிடம் நான் கூறியதை நான் இப்போது உங்களிடம் கூறுகிறேன் என்று சிவபெருமானிடம் கூறுகின்றார். எனக்காகவும் பேர்கள் இனங்கேளு மாமுனியே “ **புனக்காரம் இல்லை பூஜை முறையும் இல்லை**” என்று சொல்லுகிறார். பூஜை புனஸ்காரங்கள் என்பது ஆன்மீகத்தில் முதல் படிநிலை. மனம் பக்குவப்பட அவற்றை சிறிது சிறிதாக விட்டு அக வழிபாட்டிற்கு உயர வேண்டும். அந்த அக வழிபாடு சமய பேதம் அற்றது. பேதம்

பாராட்டுகின்ற வரையிலும் பிறப்பு தொடர்ந்து கொண்டே இருக்கும் .

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் பேரறிவு பெற்று சமய பேதங்களை கடந்து நிற்பவனே உண்மையான விடுதலை பெற்றவனாக இருக்கிறான். அவனே முக்தி நிலை பெறுவதற்கு தகுதி உடையவனாகவும் இருக்கின்றான். ஆதாயம் கருதி ஜாதி மத பேதங்கள் இல்லாமல் இருப்பதே உண்மையான ஆன்ம ஞானம். மனதை அங்கும் இங்கும் ஓட விடாமல் உறுதியாக நிறுத்துவது ஞானத்தினுடைய திறவுகோலாகும். அதுவே நினைப்பு மறுப்புகள் இல்லாமல் மௌனமாய் இருப்பது ஜீவபிரம்மமாக இயக்கத்திற்கு வழிகாட்டும் . ஆனால் ஆதாயம் கருதி வழிபடும் புற வழிபாடுகள் நமக்குள் இருக்கின்ற இறைவனை காண வழி செய்யாது. நமக்குள் இருக்கும் இறைவனை உணர்ந்து கொள்ள புறவழிப் பாடுகள் தேவை இல்லை. புறவழிப்பாடுகளின் உண்மை நிலை அறிந்தவர்கள் செய்ய மாட்டார்கள். அவர்கள் எனக்கு உகந்த மக்கள் ஆகமாட்டார்கள்.

"**கோவில்கள் வைத்து குருபூசை செய்யார்கள்**" இங்கு குருபூசை என்பது சமாதி வழிபாட்டை குறிப்பிடுகின்றது. இறந்தவர்களின் சமாதியை கோவிலாக்கி வழிபாடு செய்வதால் வினை பெருகுமே அன்றி பிறவிப்பிணியிலிருந்து விடுபட முடியாது. ஏனெனில் மனித உடல் என்பது ஸ்தூலம்(பருவுடல்) சூட்சமம்(ஆன்மா), காரணம்(அறிவு) என்னும் மூன்று சரீரங்களால் ஆன முச்சடல கூடு ஆகும். ஒருவர் இறப்பதற்கு சற்று முன்னால் அறிவு பிரிந்து சென்றுவிடும். பிறகு ஆன்மா தெரிந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் மறதியில் ஆழ்ந்து விடும். இறந்தவர்களின் உற்றார் உறவினர்கள் அவரை எளிதில் மறப்பதில்லை. அவரை நினைத்து எந்நேரமும் புலம்புவதும் ஈமக்காரியங்களை செய்வதும், நினைவு நாள் கொண்டாடுவதும் அவருடைய உருவப்படத்திற்கு மாலை அணிவித்து பூஜை புனஸ்காரங்களை செய்வதும் நிகழ்கிறது. இப்படி எல்லாம் இவர்கள் செய்ய செய்ய இறந்தவருடைய ஆன்மா மறதியில் இருந்து சீக்கிரத்தில் விழிக்க வேண்டிய சூழ்நிலை உண்டாகிறது .
ஆன்மா விழித்தவுடன் அறிவு தானே வந்து அதனுடன் கூடிவிடும். ஆன்மாவும் அறிவும் ஒன்றுகூடிய பிறகு உடனே அடுத்த பிறவி

எடுத்தாக வேண்டும் அப்போது அது தன் குடும்பத்திலாவது உற்றார் உறவினரிடமோ பிறக்க முயற்சி செய்யும். அவ்வாறு பிறக்க சந்தர்ப்பம் இல்லை எனில் அதன் கர்மாவின் படி வேறு மனிதரிடத்திலோ அல்லது மிருகங்கள் பறவைகள் போன்ற வேறு ஜீவராசிகளிடமோ சென்று பிறவி எடுத்துவிடும். எனவே இறந்தவர்களுக்கு சடங்குகள் குருபூசை எதுவும் செய்யக்கூடாது என்று கூறுகின்றார்கள்.

இந்த உலகில் பிறந்து துன்ப சூழலில் பல வேதனைகளை அனுபவித்து இறந்துவிட்ட ஆன்மா பலகாலம் மறதியில் அமைதியாக இருக்க வேண்டும் அந்த அமைதியை குலைக்க கூடாது. ஆகவே இறந்தவர்களின் ஆன்மா பிறவி பிடியிலிருந்து விடுபட்டு முக்தி அடைய வேண்டும் என்றால் இறந்தவர்களை நினைத்து வழிபாடு செய்யும் குரு பூஜை செய்ய கூடாது. இதை என்னுடைய மக்கள் செய்ய மாட்டார்கள் என்றுக் கூறினார்.

"**பூவதுகள் போட்டு போற்றியே நில்லார்கள்**" பூக்களை போட்டு வழிப்படுவது என்பது புறவழிபாட்டை குறிக்கிறது. பூக்களை போட்டு போற்றுவதால் உலகியல் விருப்பங்கள் நிறைவேற செய்யுமேயன்றி ஆன்ம விடுதலை பெற முடியாது. ஆன்மா முத்திபெற வேண்டும் என்று விரும்புகிறவர்கள் புறவழிபாடுகளை தவிர்ப்பது நல்லது. இறைவன் ஆதார மலர்களில் அருளாட்சி செய்கின்றான். இதையே அய்யா ஐந்து பூ கொண்டு ஆசாரம் செய்வோற்க்கு வஞ்சகம் இல்லாத வாழ்வு கொடு என்மகனே என்றுக் கூறியிருக்கிறார்.

பஞ்சேந்திரியங்களை ஒடுக்கி மனதை ஒரு முகப்படுத்து வோருக்கு வஞ்சகம் இல்லாத பேரின்ப வாழ்வை இறைவன் அளிக்கிறார். சகஸ்தரதளத்தில் அமைந்துள்ள ஆயிரத்தெட்டு இதழுடைய மலரை மலர செய்வதே பயனுடைய வழிபாடு ஆகும் . அதுவே இறைவனை அடைய வழிவகுக்கும். ஆகையால் இறைவனை கண்டு கொள்ள புறவழிபாடுகள் தேவை இல்லை. இறைவனை நமக்குள் தேடவேண்டுமேயன்றி வெளியே தேடக்கூடாது. ஆகவே இந்த புறவழிபாடுகளை தவிர்க்கப்பட வேண்டும் என்றும் எனக்காகும் பேர்கள் இதை செய்ய கூடாது என்றுக் கூறுகின்றார்.

"**ஆடு கிடாய் கோழிப்பன்றி அறுத்து பலி இடார்கள்**". இறைவன் எல்லா உயிருள்ளும் உயிராக இருக்கின்றார். அப்படி இருக்கின்ற போது இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களை கொன்று இறைவனுடைய பெயரை சொல்லி பலியிடுவது என்பது ஒரு முறையற்ற செயலாகும். இது உயர் வதம் செய்வதற்குரிய தண்டனையை அனுபவிப்பதற்கு வழி வகுத்து விடும். மேலும் இத்தகைய வழிபாடு இறைவனுக்கு ஏற்புடையது அல்ல. இறைவன் எந்த உயிரையும் கொன்று தன்னை வழிப்பட சொல்லவில்லை. எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் பேணி பாதுகாப்பதே இறைவனுக்கு செய்யும் தொண்டு ஆகும். ஆனால் இப்படி உயிர் பல செய்பவர்கள் மிகவும் கீழான நிலைக்கு தள்ளப்பட்டு மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து துன்பங்களை அனுபவிக்க நேரிடும். ஆகவே இந்த கீழான வழிபாட்டு முறையை செய்வதால் கர்ம வினைகள் அதிகமாகுமே தவிர குறையாது. எனவே இவற்றை செய்ய கூடாது என்கின்றார் அய்யா.

"**மாடு மண்ணுருவை வணங்கி திரியார்கள்**" இதில் மாடு என்பது இருபேத புத்தியுடன் உடல் உணர்வுக்கு அதிகமாகி வாழுகின்ற வாழ்க்கையை குறிக்கின்றது .மேலும் மண்ணுரு என்பது சிலை வழிபாட்டைக் குறிக்கிறது. சிலை வழிபாடு செய்பவர்கள் ஜட உணர்வுக்கு அடிமையானவர்கள் என்பதை இங்கு குறிக்கிறது. நிலை அற்றவைகளை ஒதுக்கி நிலை பேருடையவற்றை நாடுவதற்கு வழி செய்வதே சிறந்த வழி ஆகும். இறைவனுடைய திருவடி தொழுவது அல்லாமல் மேற்படியான போலி உருவங்களை வழிபடுவது என்பது கூடாத காரியம். இந்த இறைவனுடைய பெயரால் இறைவனுடைய நாமங்களில் பலவிதமான உருவங்களை அமைத்து வைத்து அதில் இறைவனை வழிபாடு செய்வதால் இறைவனை கண்டுகொள்ள முடியாது. இத்தகைய வழிபாடு செய்வதால் ஏழேழு ஜென்மங்களுக்கும் பாவம் துலையாது. நமக்குள் இருக்கின்ற இறைவனை காண்பதற்கு நாம் புறத்தே உருவத்திற்குள் இறைவனை தேடக்கூடாது என்பதாகும்.

"**என் பேரு சொல்லி எவரொருவர் வந்தாலும் அன்போடு அவரை ஆதரிக்கும் பேராகும். இரைப்போர் முகம் பார்த்து ஈவதுவே நன்றாகும். பரப்போரை கை சேர்த்துப் பரிவதுவே நன்றாகும்**" அய்யாவின் பெயரை சொல்லி யார் வந்தாலும்

அவர்களை அன்புடன் ஆதரிக்க வேண்டும். அய்யாவின் அறக்கருத்துகளை எடுத்து சொல்லி நல்வழி காட்டும் அன்பர்களை அன்போடு ஆதரிக்க வேண்டும். திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என்னும் நிலையில் தவிக்கும் ஏழை எளியவர்களுக்கு அவர்களின் தேவையை அறிந்து உதவிகளை செய்து ஆதரிக்கக்கூடிய அன்பு உள்ளம் கொண்டவர்களே உண்மையான இறைத் தொண்டர்கள். இரப்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாது ஈவதும் பரந்து திரிகின்ற சந்நியாசிகளுக்கு பரிவு காட்டுவதுமே உண்மையான இறைத்தொண்டாகும். இருகரம் கூப்பி பிராததனை செய்வதை விட ஒரு கரம் நீட்டி ஏழை எளியவருக்கு உதவுவது மேன்மையானதும் நன்மை தருவதும் ஆகும் என்று அய்யா கூற இருக்கின்றார்.

என் பெயரை சொல்லி எவரெவர் வந்தாலும் அன்பாக அன்னமிட்ட ஆதரித்த பக்தருக்கு என்ன என்ன அபாயம் இடுக்குமது வந்தாலும் அந்நேரம் நாராயணன் ஆயனங்கு நான் வருவேன்" என்று அய்யா சிவகாண்ட அதிகாரத்தில் கூறியிருப்பதிலிருந்து உண்மையான இறைத்தொண்டு செய்யும் தொண்டர்களை பேணிப் பாதுகாத்தால் பரிபூரண அருள் கிடைக்கும். அதுமட்டுமல்ல இறையடியார்களை பேணிப் பாதுகாப்பது முப்பத்திரண்டு அறங்களில் ஒன்றாகும். இதுஒரு இல்லறத்தானுடைய இல்லறக்கடமையும் ஆகும். ஆகவே உண்மையான அய்யாவின் தொண்டர்களை பேணிப் பாதுகாத்து கொள்ள வேண்டும் என்பதாகும்.

"**என் பெயரால் முத்திரிகள் இட்டோரே நன்றாவார்**" முத்திரி என்றால் அடையாளம். இறைவனுடைய அடையாளங்களை மேற்கொண்டவர்கள் நன்றாவார்கள். உதாரணமாக இறைவனுடைய திருநாமத்தை நெற்றியில் தரித்துக் கொண்டு வாழும் போது அதற்குரிய நெறிகளை பின்பற்றி வாழ வேண்டும். நெற்றியில் திருமண்ணால் நாமம் தரிப்பது விளக்கின் ஒளி போல் வீரத்தனமாகவும் , வாழ்வில் நேர் வழியை பின்பற்றி வாழ்வேன் என்றும், என்னுடைய மனம், சொல், செயலால் தூய்மையான நிலையில் இருப்பேன் என்று உறுதி கூறும் வகையில் அணிவது திருநாமம். திருநாமம் அணிந்தவர்கள் பொய்,புரட்டு,வஞ்சகம், பொறாமை,பேராசை, ஆணவம் போன்ற தீய எண்ணங்களை ஒரு

போதும் மனதில் எண்ணக்கூடாது. திருநாமம் அணிந்தவர்கள் நேர் வழியை பின்பற்றி வாழ்பவர்கள் என்று பிறருக்கு உதாரணமாக வழிகாட்டும் வகையில் வாழ வேண்டும்.

மேலும் எந்த ஒரு செயல் செய்தாலும் பலனை எதிர்பாராது செய்ய வேண்டும். எந்த காரியத்தை செய்தாலும் நான் செய்கிறேன் என்று ஆணவம் கொள்ளாமல் செய்ய வேண்டும் . இது என்னால் வந்ததல்ல உன்னால் வந்தது இறைவனே தந்தது இது உனக்கு அர்ப்பணம் என்று இறைவனிடம் அர்ப்பணம் வேண்டும். செய்கின்ற காரியம் எதாக இருந்தாலும் அதனுடைய பலனை இறைவனுக்கு அற்பணித்து விட வேண்டும். என்னால் ஒன்றும் இல்லை எல்லாம் கிருபை என்பரனே நான் செய்யும் செயல்கள் நீ செய்வது, நீ இல்லாவிட்டால் என்னால் செய்ய முடியாது என்று ஆத்ம சமர்ப்பணம் செய்ய வேண்டும் . நாம் எதை செய்தாலும், எதை உண்டாலும், எதை தானமாக கொடுத்தாலும் எந்த தவம் செய்தாலும் அதை சதா இறைவனுக்கு செய்வதாக நாம் செய்ய வேண்டும். அப்படி செய்பவர்கள் இறைவனுக்கு உகந்த வர்கள். அவர்கள் சிறப்பாக வாழ்வார்கள் என்பதாகும்.

“**அன்போராய் வாழ்ந்தாலும் அறிவு நினைவு ஒன்றானால்
நாம் வந்தோம் எந்த நாமம்மது கேட்டவுடன் தாம் வந்து
வேடமிட்ட ஜாதியது நன்றாகும்**.”

உலகில் வாழும் ஜீவராசிகளுக்கு இறைவனால் அருளப்பட்ட ஒரு வரம் அன்பு. இந்த அன்பு பல வகைகளில் பார்க்கபடுகிறது. இல்லற வாழ்விற்கு இது ஒரு அஸ்திவாரம் ஆகும். அன்பு இல்லை என்றால் இல்லறம் இனிக்காது.

ஆனால் அப்படி இல்லற வாழ்வில் அன்பை ஆதாரமாக வைத்துக் கொண்டு தான்உலகியல் செல்வங்கள் சொந்தம் பந்தம் பாசம் என்ற எல்லாவற்றையும் அனுபவித்து கொண்டு இருக்கிறோம். ஆனால் இல்லற வாழ்வில் வாழ்கின்ற போது தாமரை இலை தண்ணீர் போல இருக்க வேண்டும்.இல்லற வாழ்வில் வாழ்ந்தாலும் அறிவு நினைவு எல்லாம் இறைவனை பற்றியதாக இருக்க வேண்டும். இந்த சொந்தம், பந்தம், பாசம், செல்வங்கள் எல்லாவற்றையும் நொடிப்பொழுதில் உதறித் தள்ளிவிட்டு

இறைவுணர்வில் ஒன்றி நிற்க வேண்டும். அப்படி இருப்பவர்கள் மரணமில்லா பேரின்ப வாழ்வை பெறுவார்கள்.

மேலும் தனக்கு மிகவும் விருப்பமான பொம்மைகளுடனும், எண்ணிறைந்த அழகான விளையாட்டுப் பொருட்களுடனும் தன்னை மறந்து விளையாடிக் கொண்டிருக்கும் ஒரு குழந்தை எப்படி தன் தாயை கண்டதும் தன் முன்னால் குவிந்து கிடக்கும் அனைத்து பொருட்களையும் உதறித் தள்ளிவிட்டு ஓடி சென்று தாயை கட்டி அணைத்து மகிழ்கிறதோ அதுபோல இறைவனுடைய நாமத்தை கேட்டவுடன் ஓடி வந்து அந்த இறைவனுடைய பாதாரத்தில் பணிகின்ற அந்த ஜாதியது நன்றாகும் என்று கூறுகின்றார். அதாவது இறைவன் பேரில் ஒரு தர்ம காரியங்களை செய்கின்ற போது எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் தம்மால் இயன்ற வரை உதவி செய்து தர்ம காரியங்களை சிறப்படைய செய்பவர்கள் சிறப்பாக வாழ்வார்கள்.

"**அல்லாமல் கேளு அரிய முனியே நீ**
**எல்லா அமைப்பும் ஏலமே விட்ட குறை**
**எச்சாதிக் காச்சோ அச்சாதி நன்றாகும்**."

இங்கு விட்ட குறை என்பது மிகவும் சிந்தனைக்குரியது. ஆன்மா அனாதியானது. ஆதி அந்தம் இல்லாதது. இறப்பு பிறப்பு இல்லாதது. ஈஸ்வரத் தன்மை உடையது. இது ஆன்மாவின் இயல்புநிலை . ஆனால் ஆன்மா மண்ணில் ஒரு உடலுடன் பிறப்பெடுக்கும் போது இந்த இயல்பு நிலையை உடல் உணர்வுக்கு ஆட்பட்டு மறந்து விடுகிறது. உடல் பிறப்பு இறப்பு, வளர்வு ,தேய்வு என்னும் சுழற்சிக்கு உட்பட்டது. எனவே உடல் உணர்வு உள்ள வரை பல பிறவிகளை எடுக்கிறது. இவ்விதம் பிறக்கும்போது முன் ஜென்மங்களில் அதனுடன் தொடர்ந்து வந்த ஆசா பாசங்களும் அறிவு வளர்ச்சியும் சூட்சும சரீரத்தோடு கூடவே தொடர்கின்றன. ஒரே தகப்பனுக்கு பிறந்த இரண்டு பிள்ளைகளில் ஒருவன் பிறந்தது முதலில் மகா புத்திசாலியாக விளங்குகின்றான்.

இன்னொருவன் சுத்த அறிவிலியாக இருக்கிறான். அதற்கு காரணம் முன் ஜென்மத்தில் அவர்கள் சேர்த்து வைத்த அறிவின்

அளவே அவர்களை தொடர்கிறது என்பதாகும். அதுபோல முக்திக்கு வழிகாட்டும் சரியை கிரியை, யோகம், ஞானம் என நான்கு படிகளில் பூர்வ ஜென்மத்தில் எந்த நிலைவரை பயிற்சி முடித்து இருந்தாலும் அதிலிருந்து மறு ஜென்மம் தொடரும். அதாவது முன் ஜென்னத்தில் விட்ட குறைவிலிருந்து மறு ஜென்மம் தொடர்கிறது. இதனாலேயே சில குழந்தைகள் பிறந்ததுமே ஞானம் பெற்றவர்களாக இருக்கின்றார்கள். ஒருவன் இந்த ஜென்மத்தில் சிறந்த பக்தனாகவும் அறிவாளியாகவும் இருக்கிறான் என்றால் அது அவன் பல ஜென்மங்களில் செய்த முயற்சி பலனாகும். இதை அய்யா தாடாண்மை தர்மம் தழைக்கவைத்து உங்களையும் நாடாள வைப்பேன் என்று அய்யா கூறி இருக்கிறார்.

"**எவர்க்கும் மிக ஈந்து இருப்போரை நன்றாகும்**
**அவர்க்கு உதவி செய்தோர் அவ்வினமும் நன்றாகும்**"

தர்ம காரியங்களில் ஈடுபடும்போது வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் அந்த தர்மத்தை பயன்பெறும்படி செய்ய வேண்டும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் பேருணர்வுடன் உதவி நாடி வருபவர்களுக்கு எந்த குலத்தை சார்ந்தவர்கள், எந்த சமயச் சார்புடையவர்கள் என்றெல்லாம் சிந்திக்காமல் நம்மை நாடி வருபவர்களின் தேவையறிந்து கொடுத்து உதவுவது ஆண்ம நேயத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும். அது மட்டுமல்ல ஒரு தர்ம காரியம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று ஒருவர் முன் எடுக்கின்ற போது யார் யாரெல்லாம் அதற்கு உறுதுணையாக இருந்து அந்த தர்ம காரியத்தை நிறைவேற்றுகின்றார்களோ அவரும் அவர்களை சார்ந்தவர்களும், அந்த தர்ம காரியம் செய்தவர் என்ன பலனை அடைகின்றாரோ அந்த பலனை அடைவார்கள். அது மட்டுமல்ல அவர்களுடைய இனம் என்று சொல்லக்கூடிய அவர்களை சார்ந்தவர்களும் சிறப்பாக வாழ்வார்கள் என்பதை அய்யா இங்கே எடுத்துக் கூறுகின்றார்.இதையே அய்யா "**தர்மம்தழைக்கும்தழைப்பீர்கள் நீங்கள்மக்கா**" என்று அருளியுள்ளார்.

"**தாழ்மையாய் வாழ்ந்த சாதியது நன்றாகும்**" தொண்டர்கள் எப்போதும் தங்களை உயர்வாக எண்ணுவதில்லை.

தொண்டனுக்கு தொண்டனாகவே நடந்து கொள்வார்கள். உலகில் தொண்டர்களாக வாழ்ந்தவர்களேயே மக்கள் தலைவர்களாக கொண்டாடினர். எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமல் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்னும் பேருணர்வுடன் தொண்டாற்றினர். மக்கள் அவர்களை மிகவும் போற்றினார்கள்.

தாழ்மை என்பது இறைவன் பால் அன்புடமையை குறிக்கும். என்னால் ஆவது ஒன்றுமில்லை எல்லாம் அவன் செயல் என்னும் பேரறிவுடன் தன்னை தாழ்த்திக் கொண்டு இறைவனிடம் பரிபூரண சரணாகதி அடையும் சாகாத தர்ம அன்புடையோர் நன்றாகவாழ்வார்கள் என்று அய்யா கூறி இருக்கின்றார்.

"**ஏழ்மையாய் வருவோம் இரப்பன்பரப்பனெ இரப்பனை கைக்கொண்டார் எனை ஏற்றார் மாமுனியே பரப்பனை கைக்கொண்டோர் பரமேற்றார் மாமுனியே**" வீடும் குடியும் இல்லாமல் பரந்து திரிகின்ற ஞானிகளையும் ஏழை எளியவர்களையும் ஆதரிப்பவர்களே உண்மையான இறைத் தொண்டர்கள். அவர்களிடம் இறைவன் பிட்சாடன மூர்த்தியாக இறங்கி வந்து ஏகாபரா குருபிச்சை என்று சொல்லி பிச்சை கேட்டு அவர்களின் பாவ புண்ணியங்களை பிச்சையாக ஏற்று அவர்களை பிறவிபிணியிலிருந்து விடுவித்து அருளுகிறார் என்பதாகும். இதையே அய்யா தாழக்கிடப்பாரை தற்காப்பதே தர்மம் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே ஏழைகளுக்கு உதவி செய்து வாழும் வாழ்க்கை இறைவனுக்கு அற்பணம் செய்யும் தர்மத்தை விட உயர்ந்தது என்பதை அய்யா கூறியிருக்கிறார்.

"**சினமும் மறந்து செடம் முழிக்கும் பேர் மனுக்கள் நினைவுக்குள்ளே நாம் நிற்போங்காண் மாமுனியே**" சினம் என்பது கோபம். மனிதர்களில் எழும் ஆறு வகையான அகப்பகைகளில் முக்கியமானது கோபம். கலியின் முக்கிய இருப்பிடங்களில் ஒன்றானது கோபம். கோபம் யாரையும் விட்டு வைப்பதில்லை. தவ யோகிகள் கூட சில வேளைகளில் கோபத்திற்கு அடிமையாகி விடுகின்றார்கள். கோபத்தால் தங்களுடைய தவ வலிமையை இழந்தவர்கள் பலர். மனிதன் மிகவும் வருந்தி சம்பாதித்த புகழையும் தவப் பயனையும் அவனது கோபம் அழித்துவிடும். ஆகவே எல்லா நன்மைகளும்

கோபப்படுகின்ற போது கெட்டுவிடும். ஆகவே கோபத்தால் குணம் கடும். மனம் கெடும். நரம்பு தளர்வுறும். ஆற்றல் கெடும். தீரா கோபம் போராய் முடியும். ஆகவே இந்த கோபத்தை நாம் குறைக்க வேண்டும் மனிதனை கொலை பாதகன்,நீசன்,பாவி என்ற இழிவான பெயர்களை எடுக்க வைப்பது கோபம் ஆகும். ஆகவே அய்யா "கோபமது உங்களுக்கு கொல்லும் வேலாய் இருக்குதப்பா" என்றுக் கூறியிருக்கிறார். சடம் என்பது தன்னை உடலாக எண்ணி மயங்கும் ஜீவன். லோக பந்தத்தில் உலவுபவன். சடம் முழித்தல் என்பது நான் உடல் அல்ல நான் ஆன்மா என பகுத்துணரும் விவேக ஞானம். இதுவே உண்மையான பகுத்தறிவு.

யார் ஒருவர் நான் உடல் அல்ல ஆன்மா என்று பகுத்தறிந்து இந்த உடல் ஆசையை விட்டு உடல் உணர்வுகளை விட்டு கோபம் என்ற கொடிய நோயிலிருந்து விடுபடுகின்றார்களோ அவர்கள் எனக்கு உகந்தவர்கள். யார் சட உணர்வு அல்லது தூல உணர்விலிருந்து விழிப்படைந்து சினத்திற்கு காரணமான காமக்குரோத லோபங்களை விட்டு அனைத்துயிர்களையும் தன்னுயிர் போல் எண்ணி ஆன்மநேயத்துடன் வாழ்கிறார்களோ அவர்களுடைய அருகில் இருந்து நாம் காத்துக் கொள்வோம் என்று அய்யா கூறுகின்றார்.

மேலும் "**இனத்தோடே ஒத்து இருந்து மிக வாழ்ந்தாலும் சொன்ன நினைவதுக்குள் துயிலாமல் வாழ்வோம் காண் மாமுனியே**" அய்யா சொன்ன கலிமாய எண்ணங்களை விடுவித்து யார் யார் வாழுகின்றார்களோ அவர்கள் இந்த கலியுகத்தில் கலி நீச எண்ணம் உடையவர்களோடு வாழ்ந்தாலும் அவர்களுடைய நினைவுகள் தூய்மையானதாக இருக்கும் போது எப்போதும் அவர்களை விட்டு விலகாமல் வாழ்வோம் என்று அய்யா கூறுகின்றார்.

"**மாசு கலியை மனதூ டாடாதே அறுத்து**
**வாசு நினைவில் வந்து நிற்போம் மாமுனியே**"

கலிமாசு என்னும் ஆணவ அழுக்கு மனதில் உள்ளவரை இறை உணர்வை பெறுவது இயலாத காரியம் ஆகும்.

யார் யாரெல்லாம் கலிமாய எண்ணங்கள் ஆகிய காமம், குரோதம் லோபம், மதம், மாச்சரியம், மோகம் என்று

சொல்லக்கூடிய ஆறு அகப்பகைகளை மனதில் இருந்து விடுவிக்கின்றார்களோ (அதாவது கோபம், வஞ்சகம், பழிவாங்கும் உணர்வு, பொறாமை ,பேராசை பிறருடைய பொருளுக்கு ஆசைப்படுவது, பெண்களை அவமதிப்பது இவற்றையெல்லாம் தன்னுடைய மனதிலிருந்து விடுவிக்கின்றார்களோ அவர்களுடைய நினைவில் எண்ணத்தில் இறைவன் குடிக் கொள்ளுவார். ஆகவே வாசு நினைவில் வந்து நிற்போம் மாமுனியே என்று சொல்லுகின்றார். யாருடைய மனம் தூய்மையானதாக இருக்கிறதோ அங்கு இறைவன் குடிக்கொள்வார்.

சிவ நினைவை எப்போதும் மனதில் நினைத்திருப்போர் கலிமாசிலிருந்து விடுபட்டு இறை உணர்வை பெறுவர். கலிமாசற்ற மனம் உடையவர்களாக வாழும் ஒவ்வொரு வருடைய மனதிலும் உயிர்மூச்சாக இருக்கின்ற அந்த இறைவனை நாம் காணலாம். மேலும் வாசி என்று சொல்லக்கூடிய சிவநினைவை மனதில் நினைத்து இருப்பவர்களும் கலி மாசிலிருந்து விடுப்பட்டு இறைவனை கண்டு கொள்ள முடியும் என்பதை இங்கே கூறியிருக்கிறார்.

"பின்னும் ஒன்று கேளு பூரண மாமுனியே மன்னுகத்திற்கு கேளு ஒருவருக்கோர் வாரமுமாய் நின்றேன் முனியே இனி நீச கலியறுக்க சென்றோமே ஆனால் செய்யும் தொழில் கேளு,

" **காலுக்குள்ளே திரியாம் கையதுக்குள்ளே திரியாம்**
**மேலுக்குள்ளே திரியாம் விழியதுக்குள்ளே திரியாம்**
**கண்டெடுத்தார் வாழ்வார் காணாதார் வீணாவார்**
**பண்டைப் பழமொழி போல் பார்மீதிலோட்டி வைத்தேன்**.
**கண்டெடுத்துக்கொண்டோர் கரை ஏறுவார் எனவும்**
**தொண்டரன கண்டு சொன்னேனா னுன்னோடு**"

முந்தைய யுகங்களில் அசுரர்கள் ஒரு உருவத்தோடு இருந்தார்கள். அப்போது அவர்களை அழிப்பதற்காக வேண்டி இறை அவதாரமும் ஒரு உருவத்தோடு இருந்தது. உதாரணமாக முருகனாக இராமராக கண்ணனாக பரசுராமராக என அசுரர்களை அவரவருடைய நிலையில் இருந்து அழிப்பதற்காக இறை அவதாரங்கள் நிகழ்ந்தது. ஆனால் கலியுகத்தில் இன்னான்

இனியன் என்று பாராமல் யார் எவர் என்று பேதம் இல்லாமல் எல்லோருக்கும் ஒருபோலே ஈசன் நான் இருக்கிறேன்.

காரணம் எல்லோருடைய மனதிலும் கலி நீசன் குடிகொண்டு விட்ட காரணத்தினால் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இருக்கின்ற கலியை ஒழிப்பதற்கு ஒவ்வொரு மனிதனுள்ளும் இறை சக்தியாக இருந்து அந்த கலியை அழிக்கின்றேன். கண்டெடுத்தார் வாழ்வார் காணாதார் வீணாவார் என்று பண்டைய பழமொழி போல் பார்மீதில் ஒட்டி வைப்பேன் என்கின்றார் . எப்படி என்றால் காலுக்குள்ளே திரியாம் கையதுக்குள்ளே திரியாம் ,மேலுக்குள்ளே திரியாம், விழியதுக்குள்ளே திரியாம் என்கிற நிலையில் மனிதருள் இருக்கிறேன்.ஒவ்வொரு மனிதருள்ளும் இருக்கும் இறைவனை கண்டெடுத்தவர்கள் வாழ்வார்கள். காணாதவர்கள் வீணாக வாழ்விழந்து போவார்கள் என்று அய்யா இங்கே எடுத்துக் கூறுகிறார்.

"தாய் தமர்கள் என்றும் தனது கிளைகள் என்றும் வாயுரமாய் பேசும் வம்பர் என்று பார்ப்பதில்லை" வேண்டிய வர்கள் வேண்டாதவர்கள் என அனைத்து பேதங்களுக்கும் அப்பாற்பட்டு அவரவர் செய்யும் வினைகளுக்கு ஏற்ப அவர் அவருக்கு அருள் புரியப்படும். இறைவன் முன்னிலையில் வேண்டியவர் வேண்டாதவர்கள் பணக்காரன், ஏழை, உயர் பதவியில் இருப்பவர்கள் என்று எந்த பேதமும் பார்க்காமல் அவரவர் செய்யும் நன்மை தீமைக்கு ஏற்ப நடுதீர்ப்பு செய்ய படும். சொந்த பந்தம் பாசங்களுக்கு அப்பாற்பட்ட உறவு முறைகளையும் தாண்டி இருந்து கலி அழிக்கப்படும் என்பதை அய்யா இங்கு உணர்த்துகின்றார்

" **அன்பாகி வந்தவரை அலச்சல் செய்து ஏற்பதுண்டு வம்பான மாத்தானை வளர்த்து அறுப்பதுண்டு**." நம்பினவர்களின் மன அழுக்குகளை மாற்றுவதற்கு பல விதமான சோதனைச் செய்து பின் அவர்களை ஏற்று ஆட்கொள்ள படும். இறைவன் அருளால் அவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து அவர்களுக்கு தர்மக வாழ்வு அருளப்படும் . ஆனால் கலி நீசர்கள் திருத்துவதற்கு பல பல வாய்ப்புகளை அருளி வளர்த்து அறுக்கப்படும் என்பதை இங்கே எடுத்துக் கூறுகிறார்.

மேலும் எட்டியும் எட்டாத ஏழை குணம் போல் இருந்து கட்டிங் கட்டாத கடிய சொரூபமதாய் வேளைக்கு வேளை விதகோலமும் அணிந்து இரப்ப வடிவாயிருந்து கலிதனையும் பரப்பரமாய் நின்று பக்தி சோதித்து எங்கு இருந்து எரிப்போம் கலிதனையும், சங்கிலிரந்து தான் வளர்ப்பேன் அன்போரை என்றுக் கூறுகின்றார். எந்த விதமான ஆயுதங்களோ அம்பு கணைகளோ தேவையில்லை. ஒரு ஏழையிடம் தான் நல்ல குணம் இருக்கும். ஆனால் ஏழையிடம் இருக்கும் நல்ல குணம் வசதிப் படைத்தவர்களிடம் இருக்காது. நாம் நம்மிடம் இருக்கின்ற மாய அழுக்குகளை எண்ணங்களை நீக்க வேண்டும் என்றால் நல்ல எண்ணங்கள் அதிகமாக நம் மனதில் விதைக்கப்பட வேண்டும். எப்படி ஒரு ஏழை எந்த ஒரு சூழ்நிலையிலும் எவ்வளவு ஏழ்மை நிலையிலும் தன்னுடைய நல்ல குணத்தில் இருந்து மாறுபடாமல் இருக்கிறானோ அதுபோல நாம் எந்த சூழ்நிலையிலும் கலி எண்ணங்களை மனதில் வரவிடாமல் தடுத்து நல்ல குணங்களை தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

மக்களை நல்வழிப்படுத்துவதற்காக அவரவர் மனதில் இருக்கின்ற கலிமாய எண்ணங்களை அவரவர்களுக்கு ஏற்ற வகையில் அழிக்கப்பட வேண்டும். அதற்கு பலவித கோலங்களை எடுக்க வேண்டும். ஒவ்வொரு வேளைக்கு வேளை வித கோலங்கள் எடுக்க வேண்டி வரும். அதுமட்டுமல்ல நாளுக்கு நாள் பல அதிசயங்களை காட்டி மக்களை மனதில் இருக்கின்ற கலிமாய எண்ணங்களை அழிக்கப்பட வேண்டும். மக்களுடைய மனதில் இருக்கும் பக்தி எப்படி உறுதியோடு இருக்கிறது என்பதைப் பார்த்து சான்றோர் மக்களை தான் வளர்த்துப் பாதுகாத்துக் கொள்வேன் என்றுக் கூறுகிறார்.

உடனே கலைக்கோட்டு மாமுனியானவர் என்னிடம் கேட்டான். எந்தவிதமாக தாங்கள் எழுந்தருளுவீர் மாயத்திருமாலே! அதை எனக்கு எடுத்துரையும் என்று கலைக் கோட்டு மாமுனிவன் கேட்டான். அப்போது நான் அந்த முனிக்கு உரைத்ததைக் கேளும் என்று சிவப் பெருமானிடம் கூறுகிறார். எப்படியென்றால், இகாபரத்தை நான் நினைத்து ஏழு பிள்ளைகளை ஈன்றெடுத்து மகாபாரனார் செயலால் மக்களுக்கு சொத்தீய நான் உபதேசித்து நாட்டில் சான்றோர் மக்களைப் பிறவிச் செய்து இருக்கிறேன். மேலும் எப்படி வாழ வேண்டும் என்ற பல ஞான உபதேசங்களை

கூறி முறைப்படி வாழ்ந்து வாருங்கள் என்று அனுப்பி இருக்கிறேன்
.

ஆனால் மக்கள் கலிக்குள் அகப்பட்டு துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். எப்பொழுது அவர்கள் தன்னிலை உணர்ந்து தன் மனதில் இருக்கின்ற கலி மாய எண்ணங்களை அழிக்கின்றார்களோ அப்போது பேறு பெறுவார்கள். மக்களுடைய மனதில் இருக்கின்ற மாசக்கலி அழிந்து மக்கள் ஒன்றுப் பட்டவுடன் பாசுபதம் கொடுத்து பாலன் கையால் இந்த உலகை ஒரு குடைக்குள் ஆள வருவேன். அதற்குள் இந்த உலகில் பல சோதனைகள் பார்த்து கலி நீசர்களால் வரும் என்ன என்ன தீமைகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் நான் ஏற்று இந்த மக்களை ஆள்வேன் என்று கலைக்கோட்டு முனிக்கு கூறி வந்தேன் . இப்போது அதை உங்களிடம் கூறுக்கிறேன் என்று சிவபெருமானிடம் சொல்லுகின்றார்.

மேலும் சிவபெருமானிடம் கூறுகின்றார் வெள்ளி கயிலாயத்தில் ஒரு இடத்தில் தீமைகள் எல்லாம் அழியப் போகின்றது என்பதை அறியும் படியாக ஒரு இடத்தில் லெக்கியத்தை ஊட்டி கனல் எழுப்பி திரு நடனம் ஆட வேண்டும் என்று நாராயண மூர்த்தி சிவபெருமானிடம் பணிந்தார். உடனே சிவப்பெருமானும், உமையாளும் திரு நடனம் ஆடுவதற்கு தயாரானார்கள். அப்படி திரு நடனம் ஆடுகின்ற போது இந்த உலகம் தோன்றியது முதல் இறைவனுடைய அவதாரங்கள் நிகழ்ந்த நிகழ்வுகளையும் கலி அழிந்து தர்மயுகம் தோன்றுகின்ற செய்திகளையும் திரு நடனத்தின் மூலம் எல்லோரும் அறியும்படி செய்தார்கள்.

எப்படி என்றால் முப்படியே நாராயண மூர்த்திக்கு இப்பொழுது ஒன்பதாம் பிறப்பினெவும், அடுத்து நிகழ உள்ள வைகுண்ட அவதாரம் பத்தாவது அவதாரம் என்றும், வேதனுக்கு (பிரம்மாவிற்கு)ஆயிரம் பிறவி ஆச்சு தென்றும், அம்மை உமையவளுக்கு ஏழு பிறவி எனவும், சீதைக்கு பத்து பிறவி என்றும் சதுர்மறைக்கு ஏழு எனவும், சாஸ்திரத்திற்கு நான்கு எனவும், வானவர் கோனாகிய இந்திரனுக்கு வனப்பிறவி மூன்றெனவும், தானாவராகிய சிவபெருமானுக்கு ஏழு பிறவி என்றும், சரஸ்வதிக்கு ஆயிரம் பிறவி என்றும், தொண்டர் தனக்கு சூல்

பிறவி ஒன்றெனவும், அண்டர்கள் மெய்க்க அரண் நடனம் ஆடினார்.

## வினா விடை:-

கலிநீசன் வையகத்தில் வரும் போது கலி நீசனைக்கண்டு பதறி நாராயணமூர்த்தியிடம் தஞ்சம் புகுந்த முனிவர் யார்?
கலைக்கோட்டு மாமுனி

1. கலியனை நேருக்கு நேராக நின்று கொல்ல முடியுமா?
முடியாது

2. கலிநீசனை முன்னின்று கொல்ல யார் யாரால்முடியாது?
மும்மூர்த்திகளாலும்

3. கலிநீசனை எவ்வாறு அழிப்பதாக கூறினார்?
பின்னின்றவனால் பேசாதே மாளவைப்பேன் என்றார்.

4. பின்னின்றவனால் பேசாதே மாள வைப்பேன் என்பது எதைக் குறிக்கிறது?
ஒவ்வொரு மனிதனுடைய அகத்தில் எழுகின்ற வெளியே தெரியாமல் சூட்சி செய்து துன்புறுத்தும் அகப்பகையை அவனவன் செய்யும் செய்கைகளால் பேசாமல் இருந்து அழிப்பேன் என்பதாகும்.

5. அய்யா கலிநீசனை எவ்வாறு என்று அழிப்பதாக கூறுகின்றார்?
எந்த விதமான வல்லமையும் காட்டாமலும், அற்புதங்கள் செய்யாமலும், உற்பனமும் கொடுக்காமல் ஒன்றும் அறியாதவர் போல் இருந்து கலியை வென்றிடுவேன்.

6. உற்பனம்என்பது என்ன?
பிறப்பின் உண்மையான தன்மை ( தோற்றம்)

7. கலியனை ஏன் முன் நின்று கொல்ல முடியாது என்று நாராயண மூர்த்தி கூறுகிறார்?

கலிதன்மைக் கொண்டவர்களோடு நேருக்கு நேர் எதிர்க்கும் போது கலிதன்மை எதிரில் இருப்பவரையும் பற்றிக் கொள்வதால் ஆகும்.

8. கலிதன்மைக் கொண்டவர்களின் மனதில் அய்யா எப்படி இருந்து சூட்சுமம் செய்வதாகக் கூறுகிறார்?
இறைவனுடைய உண்மையான தன்மையை அறிந்து கொள்ள இயலாதவர்கள் இதோ இறைவன் வந்துவிட்டார் அதாவது பல அற்புதங்களை நிகழ்த்திக்காட்டியும், இறைவன் பெயரை வைத்து குறிச்சொல்லி நானே கடவுள் என்று மக்களை கூட்டும் இடங்கள், சாமியாட்டம் என்ற பெயரில் மக்களை கூட்டும்இடங்களில் கலந்து கொள்ளும் அன்பர்கள் சில காலங்களில் உண்மைத் தன்மையை உணர்ந்து விலகி விடுவார்கள். மேலும்சிலர் விடவும் முடியாமல் தொடரவும் முடியாது இறை பற்றற்ற நிலையில் நம்பிக்கையற்று வாழ்ந்து வருவார்கள். அப்படி இருக்கும் மக்கள் தாங்கள் வழிபடும் இறைவன் தான் உண்மை என்றும் மற்ற இறை நாமங்களை தூற்றும் விதமாகவும் செயல்படுவர். இறுதியில் இறைவனை மனதில் உணர்ந்து கொள்ளமுடியாமல் அழிந்து போவார்கள்.

9. இறைவனைத் தன் உள்ளத்தில் கண்டவர்களின் நிலை என்ன?
தன்னுடைய இறைவழிபாடு மட்டுமே உயர்ந்தது என்று கூறமாட்டார்கள்.

இறைவன் எங்கும் நிறைந்து ஏகமயமாய் இருக்கின்றார் என்பதை உணர்ந்து கொள்வார்கள்.

இறைவனுடைய பெயரை பலவாக கூறினாலும் இறைச்சக்தி என்பது ஒன்றே என்று உணர்ந்து கொள்வார்கள்.
ஒரு புத்தியாக இறைவனை அகத்தில்கண்டவர்களுக்கு புறவழிபாட்டையோ, ஆடம்பரமாக செலவு செய்து நடத்தும் திருவிழா மற்றும் வழிபாடுகளில் நாட்டம் கொள்ளமாட்டார்கள்.

10. இறைவனை உள்ளத்தில் கண்டு கொண்டவர்களுக்கு கிடைக்கும் பேறு யாது?
முக்தி என்ற மேலும் பிறவாத நிலை.

11. “**செறிந்தோர்கள் வாழ்வார் சேராதார் போய் மாழ்வார்**”இதில் செறிந்தோர் என்பவர்யார்?
இறைவனை அடைய வேண்டும் என்று இறைவன் வகுத்த பாதையில் சேர்ந்து கொண்டவர்கள் வாழ்வார்கள் என்பதாகும்.

12. “**சாத்திரத்திலும் தோன்றேன் சதுர்மறையை தாண்டி நிற்பேன்**” இதில் அய்யா கூறி இருக்கும் செய்தி என்ன?
சாஸ்திரவேதங்களை கற்றுணர்ந்து அதன் படி வாழுகின்ற பேர்களாலும் இந்த கலியுகத்தில் இறைவனைக் கண்டு கொள்ள முடியாது. காரணம் சாஸ்திர வேதங்களை கற்றுணர்ந்து ஆச்சார முறைகளை பின்பற்றி வாழ்வார்கள். ஆனால் எப்போதும் பிறர் குற்றம் மட்டுமே பார்த்து கொண்டே இருப்பார்கள். தன்னுடைய குற்றத்தை கண்டு கொள்ள மாட்டார்கள். இப்படி பட்டவர்களால் இறைவனை கண்டு கொள்ள முடியாது. சாஸ்திர வேத நூல் முறைப்படி வாழ்ந்து தன்னுடைய அகநிலையை தூய்மையான நிலையில் வைத்து கொண்டவர்களால் மட்டுமே இறைவனை உணர்ந்து கொள்ள முடியும் என்பதுஆகும்.

13. கலியழிக்க வரும் இறைவனை கண்டு கொள்ள வழியாது?
தூய்மையான மனத்தோடு வாழ வேண்டும்.
14. 228. கலியுகத்தில் தவம் செய்து இறைவனை கண்டு கொள்ள முடியுமா?
முடியாது

15. சரியை,கிரிகை, யோகம், ஞானம் விளக்குக?

**சரியை**:
சரியை என்பது அன்பின் துணையோடு உடம்பினால் செய்யும் இறைபணிகள் அனைத்தும் சரியை நெறியாகும். இலகுவில் செய்யக்கூடிய ஆரம்ப முயற்சியான இதற்குத் தூய தெய்வ பக்தியில் இறையம்சமும் துணை நிற்கவேண்டும்.

ஆலயங்களில் இறைவனை வழிபடல், வழிபாட்டின் பொருட்டுத் திருக்கோயிலைக் கூட்டுதல், மெழுகுதல், கழுவுதல், திருவிளக்கு ஏற்றல், திருநந்தவனம் அமைத்தல், பூ எடுத்தல், பூமாலை தொடுத்தல், இறைவன் புகழ் பாடுதல், சிவனடியார்களைக் கண்டால் அவர்களை வணங்கி அவர்களுக்குச் சேவை செய்தல்,

உழவாரப்பணி செய்தல், பழங்கோயில்களை வேண்டும் அளவில் புதுப்பித்தல், புராணபடனம் செய்தல், கேட்டல், புராணக்கதை படித்தல், யாத்திரை செய்தல் ஆகியவை ஆகும்.

**கிரியை**: மந்திர தந்திரங்களைக் குரு மூலமாக அறிந்து சமய, விஷேட, வழிபாட்டு முறை கிரியை நெறியாகும். தம்பொருட்டு தம்மளவில் செய்யும் ஆன்மார்த்த பூசையும், பிறர் பொருட்டு ஆலயங்களில் செய்யப்படும் பரார்த்த பூசையும் இந்நெறியுள் அடங்கும்.

**யோகம்**: சரியை, கிரியை ஆகிய நெறிகளை விட மேலானதாக இந்நெறி சாத்திர நூல்களில் கூறப்படுகின்றது. இதற்கு இமயம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய அட்டாங்க யோக உறுப்புக்கள் உள்ளன. இவ்வட்டாங்க யோகங்களிலும் பயிற்சி பெற்று படிப்படியாகத் தேறியவரே யோக நெறியை அனுசரிக்க முடியும்.

**ஞானம்**: ஞானமானது ஆன்மாவாகிய தன்னை இறைவனிடம் அற்பணம் செய்தல். அதாவது இறைவனை உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூன்று திருமேனிகளையும் கடந்து சச்சிதானந்தப் பிழம்பாய் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை அறிவால் வழிபடுதலாகும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்ட்டை என்னும் நான்கு அங்கங்கள் இந்நெறிக்கு உண்டு. முன்னைய மூன்று நெறிகளிலும் நின்று பக்குவம் பெற்ற சாதகனை இறைவன் குரு வடிவிலே வந்து தீட்சை உபதேசம் செய்து ஞானத்தை அளித்து முத்தியை வழங்குவார்.

16. யார் உண்மையான அய்யா வழிகாரர்கள் ?
அய்யா வழியை பின்பற்றுபவர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை தகுதி நிலைகள் என்ன?

- கோயில்கள் வைத்து குருபூஜை செய்யமாட்டார்கள். அதாவது கோயில்களிலோ அல்லது வீடுகளிலோ இறைவழிபாடு என்ற பெயரில் இறந்தவர்களுக்கு வழிபாடு செய்கின்ற முறையை பின் பற்றமாட்டார்கள்.

- பூக்களை போட்டு வழிபட்டு நிற்கக்கூடிய அந்த வழி முறைகளை செய்யமாட்டார்கள். ஒரு உருவத்தை வைத்து அதில் இறைவன் இருக்கின்றார் என்று நினைப்போடு அந்த உருவத்தில் பூக்களை எடுத்துப்போட்டுப் பூசை செய்கின்ற முறையை செய்யமாட்டார்கள்.

- பூஜை புனகாரங்கள் போன்றவை எல்லாம் செய்யமாட்டார்கள். பூஜை, புனகாரங்கள் மூலம் வழிபாடு நடத்துகின்ற இடங்களிலும் கலந்துக் கொள்ளமாட்டார்கள். ஏனெனில் இந்த கலியுகத்தில் இந்த வழிப்பாட்டு முறைமைகள் வேண்டாம் என்று இறைவனால் தடுக்கப்பட்ட வழிப்பாட்டு முறைகள் ஆகும். ஆகவே அய்யா வழிகாரர்களுக்கு இது உகந்தது அல்ல.

- "**மாடு மண்ணுருவை வணங்கி திரியமாட்டார்கள்**."
- அதாவது உருவ வழிபாடு செய்யமாட்டார்கள். எங்கள் நிறைந்து ஏகமயமாக இருக்கின்ற இறைவனை ஒரு உருவத்திற்குள் பார்க்கின்ற நிலையை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

- மேலும்ஆடுகிடாய், கோழி, பன்றிகளை அறுத்துப் பலியிட்டு இறை வழிபாடு செய்யமாட்டார்கள். செய்யும் இடங்களில் கலந்து கொள்ளமாட்டார்கள். இறைவனுக்கு பலி கொடுகின்றோம் என்ற பெயரில் இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்களை அழித்து அதை இறைவனுக்கு படையல் செய்கின்ற அந்த வழிபாட்டு முறையை பின் பற்றமாட்டார்கள்.

- இறைவனுடைய பெயரை சொல்லி யார் கண்டாலும் அவர்களை அன்போடு ஆதரித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து வாழ்பவர்கள் சிறந்த பேறினைப் பெறுவார்கள். ஆனால் இரப்போர் முகம் பார்த்து ஈவதுவே நன்றாகும். இறைவன் பெயரால் தர்மம் கேட்டு வந்தாலும் சரி வேறு வாழ்வியல் காரணமாக உதவி நாடி

வந்தவர்களுக்கும் உண்மையான காரணம் அறிந்து தர்மம் உவந்து அளிக்கவேண்டும்.

- அய்யா வழிகாரரர்கள் எளிமையான நிலையில் வாழ்ந்து தன்னை விட தாழ்ந்த நிலையில் இருப்பவர்களுக்கு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து அவர்களை மேன்மைப்படுத்த வேண்டும் என்று நினைத்து தாழ்ந்த நிலையில் இருப்பவர்களை உயர்ந்த நிலையில் உயர்த்த பாடுபட வேண்டும்.

- "**நாம் வந்தோம் என்ற நாமம் கேட்டவுடன் தாம் வந்து வேடமிட்ட சாதியது நன்றாகும்**"

- ஓரிடத்தில் அய்யாவினுடைய வழிபாட்டு முறைப்படி மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள் என்றால் அந்த இடத்தில் நாமும் சென்று சேர்ந்து அந்த முறைப்படி வாழ்வதற்குரிய வழி வகைகளை பின்பற்ற வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்ய வேண்டும். நாமும் அந்த நிலைக்கு மாறுவதற்கு பாடுபட வேண்டும். அப்படி வாழுகின்ற போது நாம் பிறவிப்பினையிலிருந்து விடுபடுவதற்குரிய வழிகள் நமக்கு தோன்றும்.

- "**எவருக்கும் மிக ஈந்து இருப்போரே நன்றாவார்**
- **அவருக்கு உதவி செய்த அவ்வினமும் நன்றாகும்**."

- ஒரு தர்ம காரியம் செய்கின்ற போது அந்ததர்ம காரியங்களுக்கு எந்த இடையூறும் செய்யாமல் அந்த தர்ம காரியங்களை நம்மால் இயன்ற உதவிகளை எவர் ஒருவர் செய்து வருகின்றாரோ அவருடைய குலமும் அவருடைய இனவழியும் சிறக்கும் அந்த வழியை யார் பின்பற்றுகின்றார்களோ அவர்கள் அய்யா வழிக்காரரர்கள்.

யார் யார் அய்யாவழிக்கு உகந்தவர்கள் அல்லர்

- காரணம் இல்லாமல் கோபம் கொள்கிறவன்.

- பொய் பேசுகிறவன்.
- கோள் மூட்டி குடும்பத்தில் பிரச்சினை உருவாக்கும் செயல்களைச் செய்பவர்கள் ஒற்றுமையை சீர்குலைக்க கோள் மூட்டி துரோகம் செய்பவர்கள் அய்யாவின் பிள்ளைகளாக இருக்க தகுதியற்றவர்கள்.
- ஒருவரின் வளர்ச்சியை அவர்களின் வாழ்க்கை அழிக்க துடிக்கும் பொறாமை குணம் கொண்ட நபர்கள்.
- ஒருவரைப் பழிவாங்க வேண்டும் என்று எண்ணி வஞ்சகம் கொண்டு வாழ்பவர்கள்.
- ஆணவக்காரர்கள் மற்றும் தான் சொல்வதுமட்டுமே சரி என்று சொல்லி விட்டு ஆணவத்தோடு பிறரை துன்புறுத்தும் அறிவிலிகள்.
- பேராசைக்காரன்
- மதுஅருந்துபவன்
- பெண்களுக்கு துரோகம் செய்பவர்கள்
- பிறருடைய உழைப்பில் தனக்கு பெருமை வரவேண்டும் என்றுஎண்ணுபவன் , பிறருடைய பொருளுக்கு ஆசைபடுபவர்கள்.
- உயிர்களை கொன்று உண்பவர்கள்- உயிர்களை கொன்று பணம் சம்பாதிக்க நினைப்பவர்கள் மற்றும் பணம் சம்பாதிப்பவர்கள் – உயிர்களை கொல்பவர்கள் ( உயிர்களைகொல்பவன்-விற்பவன்- தின்பவன் மூவரும் கொலையாளிகளே)
- தன்னுடைய பெயரை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணி பிறருக்கு அவப்பெயர் ஏற்படுத்தி உண்மையான வழியில் வாழ்பவர்களுக்கு துரோகம் செய்பவர்கள்.
- இங்கொன்று அங்கொன்றும் பேசும் நயவஞ்சகர்கள்
- தவறுகள் நடைபெறும் போது அதைதட்டிக் கேட்காமல் வேடிக்கைப் பார்பவர்கள்.
- பிறரை ஏவி விட்டு பிறருக்கு துன்பங்களை உருவாக்குபவர்கள்.
- மனதில் நயவஞ்சக எண்ணங்களை வைத்து வெளியே நல்லவர்களைப் போல் வாழ்பவர்கள்

- பிறருடைய துன்பங்களையும் அழிவையும் பார்த்து சந்தோஷம் கொள்ளும் ஈனப்பிறவிகள்

**முக்கியகுறிப்பு**:

----------------------

"**மாபாவி போடுகின்ற திரு முத்திரியவனுக்கு வாச்சியாய் இருக்கக்கண்டேன் சிவனே அய்யா**"
அய்யாவின் முத்திரியாகிய நாமத்தை அணிந்து கொண்டும், காவியுடைத்தரித்துக் கொண்டு மேற்கூறிய இறைவனுக்கு தகாத செயல்களை செய்பவர்கள் இறைதண்டனைக்கு ஆளாவார்கள்.

17. புனக்காரம் என்பது எதைக் குறிக்கிறது?
பல வகையான இசைகளை இசைத்து வழிப்படும் வழிபாடு.

18. அய்யா வைகுண்டர் மக்களிடம் ஏன் பூஜைகள் செய்து இறைவனை வழிப்பட வேண்டாம் என்றார்?

இறைவன் ஒவ்வொரு ஜீவராசிகளிலும் உயிருக்கு உயிராக இருக்கிறார்.இவ்வாறு நமக்குள் இருக்கும் இறைவனை கண்டு கொள்ள பூஜைகள் தேவை இல்லை. ஒரு உருவத்தை வைத்து செய்யும் பூஜையினால் இறைவனை கண்டு கொள்ள முடியாது. ஆகவே அய்யா புறவழிப்பாட்டு முறை தேவை இல்லை என்றுக் கூறினார்.

19. நாம் இறந்த நம்முடைய முன்னோர்களுக்கு ஏன் வழிப்பாடுகள் செய்யக் கூடாது என்றுக் கூறி இருக்கிறார்?

ஆன்மாவிற்கு அழிவு என்பது கிடையாது.முக்தி நிலையை அடைந்த ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியம் ஆகிவிடும். ஒரு ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியமாக வேண்டும் என்றால் ஒவ்வொரு மனிதனும் உயிரோடு இருக்கும் போதே கர்ம வினைகளில் இருந்து விடுபட பாடுபட வேண்டும். அதை விடுத்து இறந்த பிறகு செய்கின்ற எந்த பூஜையும் ஆன்மா இறைவனோடு ஐக்கியமாக துணைப் புரியாது. மேலும் முக்தி நிலையை அடையாத ஆன்மாகர்ம வினையை கழிப்பதற்காக பிறவி எடுத்துக் கொண்டே இருக்கும்.ஆகவே வாழ்நாளில் ஆன்மாவின் முக்திக்குரிய வழி முறைகளைத் தேட வேண்டும்.

20. பூக்களை போட்டு வழிபாடு செய்யும் பூஜை, திருவிளக்கு பூஜை போன்ற பூஜை முறைகள் ஏன் தவிர்க்கப் படவேண்டும். இந்த முறை இந்து சமயத்தில் காலக்காலமாகப் பின்பற்றி வரும் முறைதானே? இந்து சமயமும் சானாதன தர்மத்தை மக்களுக்கு போதிக்கிறது?அய்யா வைகுண்டரின் அவதாரமும் சனாதானத் தர்மத்தை தானேப் போதிக்கிறது. அப்படி இருக்க, அய்யா வைகுண்டரின் அவதாரத்திற்குப் பிறகு அய்யா வழிபாட்டு முறையில் இது தவிர்க்கபட வேண்டும் என்பதன் காரணம் என்ன?
சிலை வழிபாடு செய்வது, சிலையை அலங்கரிப்பது, சிலையின் மீது மந்திரங்களை ஒதி பூக்களை போட்டு வழிப்படுவது இவை எல்லாம் இறை வழிபாட்டின் ஆரம்ப நிலை. ஆனால் அய்யாவழி நமக்கு போதித்து அருளி இருப்பது ஞானநிலை. (அதாவது ஒன்றாம் வகுப்பிற்கும் ஆராய்ச்சி படிப்பிற்கு உள்ள வேறுபாடு. ஒன்றாம் வகுப்பில் யானை எப்படி இருக்கும் என்பதை படத்தை காட்டி புரிய வைப்பார்கள். ஆனால் ஆராய்ச்சிபடிப்பிற்கு பிறகு யானை பற்றிய தகவல்களை பல வகைகளில் அறிந்து இருப்போம். இப்போது யானை இப்படி தான் இருக்கும் என்றுக் கூறிப் படத்தைக் காட்டினால் ஏற்றுக் கொள்ளமுடியுமா? முடியாது. சொல்பவரை கேலியாகப் பார்ப்போம்.)
அது போலவே அய்யா வைகுண்டரின் வழிப்பாட்டு முறையில் இறைவனுடைய அவதாரம் பல நாமங்களில் ஏன் நிகழ்ந்தது. இப்போது கலியுகத்தில் வைகுண்ட அவதாரத்தின் நோக்கம் என்ன என்று தெரிந்து கொண்ட பிறகு அடிப்படை நிலை வழிபாடுகள் செய்வது தேவை இல்லை. நாம் ஞானத்தின் பாதையில் சென்று ஆன்ம முக்திக்கு வழி தேட வேண்டும் என்பதால் இந்த அடிப்படை நிலை வழிபாடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதாகும். அடிப்படை நிலையில் வாழ்ந்து வாழ்வை நிறைவு செய்து விட்டால், ஆன்மா முக்தி நிலையை பெறுவது எப்போது? ஆகவே இந்த அடிப்படை நிலை வழிபாட்டு முறைகள் தவிர்க்கபட வேண்டும் என்பதாகும்.

21. சிலை வழிபாடு செய்வது கூடாது என்று அய்யா வைகுண்டர் மக்களிடம் கூறியதன் நோக்கம் என்ன?
இறைவன் எங்கும் நிறைந்து ஏகமயமாய் இருக்கின்றார் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதாகும். மேலும் எல்லா உயிர்களுக்கும் இறைவன் உயிராக இருக்கிறார். அப்படி இருக்க

இறைவனை உயிரற்ற நிலையில் சிலையாக வடிவமைப்பு செய்து வழிபாடு செய்வது கூடாது.

22. அய்யாவழிபாட்டு முறையில் ஆசனத்தை வைத்து வழிபாடுச் செய்வது சரியா?
சரியான முறை அல்ல.

23. அய்யா வழிபாட்டு முறையில்கண்ணாடியை வைத்து வழிபடுவதன் நோக்கம் என்ன?
ஒவ்வொரு மனிதனுடைய உயிராக இறைவன் இருக்கிறார். மனிதன் கண்ணாடியில் தன்னுடைய உருவத்தைப் பார்க்கும் போது அந்த உருவத்திற்குள் உயிராக இருக்கும் இறைவனை அறிந்து கொள்ள முடியும் என்பதால் ஆகும்.

24. இறைவனுடைய பெயரை சொல்லி உயிர்களை பலியிடும் செயல் முறை சரியா? அய்யா வைகுண்டர் ஏன் மக்களிடம் தவிர்க்கப் பட வேண்டும் என்றுக் கூறினார்?

இல்லை. எல்லா உயிர்களுக்கும் உயிராக இருப்பவர் இறைவன். அப்படி இருக்க இறைவன் பெயரால் உயிர்களைப் பலியிடுவதை இறைவன் எப்படி ஏற்றுக் கொள்வார்.ஆகவே உயிர் பலி வேண்டாம் என்றுக் கூறினார்.

25. "இரப்பனை கைக்கொண்டோர் எனை ஏற்றார் மாமுனியே பரப்பனை கைக்கொண்டோர் பரனேற்றார் மாமுனியே" என்று அய்யா கூறி இருப்பதனுடைய நோக்கம் என்ன?
ஏழ்மை நிலையில் இருப்பவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு வருவதற்குப் பாடுபட வேண்டும். அதாவது இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் கொடுத்து ஒரு சமநிலையை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்குகின்ற போது எல்லோரும் ஒன்றாக இருகின்ற சமத்துவ சமுதாயம் உருவாகும். தர்மயுகம் விரைவில் மலரும். ஆகவே தர்மயுகம் விரைவில் மலர்வதற்கு இந்த நிலை உருவாக்க வேண்டும் என்பதால் அய்யா இவ்வாறுக் கூறி இருக்கின்றார்.

26. இன்றைய சூழ்நிலையில் பண்டார கோலத்தோடு இருப்பவர்கள் எல்லாம் நல்லவர்களாக இருப்பதில்லை. அப்படி இருக்க அய்யா

இரப்பனை கைக்கொண்டார் எனை ஏற்றார் மாமுனியே என்று கூறியிருப்பது எப்படி சரியாகும்?

கலியுகத்தில் போலிகள் அதிகமாக இருக்கும் என்பது காலத்தினுடைய கட்டாயம். ஆனால் போலிகளை கண்டு மக்கள் ஏமாந்து விடக்கூடாது என்பதற்காவே "**இரப்போர் முகம் பார்த்து ஈவதுவே நன்றாகும்**" என்று அய்யா கூறியிருக்கின்றார். இதிலிருந்து நாம் போலியான வேசதாரிகளுக்கு உதவி செய்ய அய்யா கூறவில்லை என்று உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் அய்யா கூறி இருக்கிறார் "**கள்ளனோடு இருப்பேன் பின் காட்டிக் கொடுத்திடுவேன்**" என்று கூறி இருப்பதிலிருந்து போலியான வேடதாரிகளை அய்யா பார்த்துக் கொள்வார் என்பது புலனாகிறது.

27. "**சினமும் மறந்து செட முழிக்கும் பேர் மனுக்கள் நினைவுக்குள்ளே நிற்போம் காண் மாமுனியே**" விளக்குக?
எவர் ஒருவர் கோபதாபங்களை எல்லாம் விட்டு இந்த கலியுகத்தில் தன்னை உணர்ந்து கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்ந்து ஆன்ம விளிப்பு பெறுகின்றார்களோ அவர்களுடைய நினைவுக்குள் வந்து இருப்பேன் என்று அய்யா கூறுகின்றார்.

28. "**மாசுக்கலியை மனதூடாதே அறுத்து வாசு நினைவில் வந்து நிற்போம் மாமுனியே**" என்பது எதை குறிக்கிறது?
கலிமாய எண்ணங்களை மனதில் இருந்து விலக்கி மனதை யார் தூய்மையானதாக வைத்து இருக்கிறார்களோ அவர்களுடைய நினைவுக்குள் வந்து இருப்பேன் என்று அய்யா கூறுகின்றார்.

29. "**முன் யுகத்தில் கேளு ஒருவர்க்கோர் வாரமுமாய்**" ஒருவர்க்கோர் வாரமுமாய் என்பது எதைக் குறிக்கிறது?
முந்தைய யுகத்தில் அசுரர்களை அழிப்பதற்காக எடுத்துக் கொண்ட அவதாரம் அந்த யுகம் நிறைவு பெறும் வரையில் எந்த விதமான மாற்றமும் இல்லாமல் இருந்தது என்பதாகும்.

30. கலி அழிப்பதற்காக செய்யும் தொழில்களாக நாராயணமூர்த்தி கலைக்கோட்டு மாமுனியிடம் கூறியது யாது?

காலுக்குள்ளே திரியாம் கையதுக்குள்ளே திரியாம் மேலுக்குள்ளே திரியாம் விழியதுக்குள்ளே திரியாம் கண்டெடுத்தோர் வாழ்வார் காணாதார் வீணாவார் என்று கூறினார். [இறைவன் ஒவ்வொருவருக்குள்ளும் இருந்து பல சூட்சமங்களைச் செய்து வாரார். இதை உணர்ந்து கொண்டவர்கள் வாழ்வார் காணாதார் வீணாவார் என்று கூறினார்.]

31. திரி என்பது இங்கு எதைக் குறிக்கிறது?
மும்மூர்த்திகளும் இணைந்து ஒன்றாகிய நிலையில் வைகுண்டமாக் இருந்து கலியழிக்கும் நிலையை குறிப்பதாகும்.

32. "**காலுக்குள்ளே திரியாம் கையதுக்குள்ளே திரியாம் மேலுக்குள்ளே திரியாம் விழியதுக்குள்ளே திரியாம் கண்டெடுத்தோர் வாழ்வார் காணதார் வீணாவார்**"இந்த வரிகள் எதை உணர்த்துகிறது?
இறைவன் எங்கும் நிறைந்து ஏகமயமாய் இருக்கின்றார். இறைவனை நாம் நம்முள் எப்படி நினைக்கின்றமோ அப்படியே நமக்கு அருள் புரிவார் என்பதைக் குறிக்கிறது.

33. அய்யா உண்மையான தொண்டன் என்று ஏற்றுக் கொண்ட முனிவர் யார்?
கலைக் கோட்டுமாமுனி

34. அய்யா வைகுண்டர் எவ்வாறு இருந்து கலியழிப்பதாக கூறுகிறார்?
கலி என்ற தீமை அழிக்கபடும் போது சொந்த பந்தங்கள் என்றோ, உறவு முறைகள் என்றோ,வேண்டியவர் வேண்டாதவர்கள் என்றோ பார்ப்பது இல்லை. அவரவர் செய்யும் குற்றத்திற்கான தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும்.

35. "**அன்பாகி வந்தவரை அலைச்சல்செய்துஏற்பதுண்டு**
**வம்பான மாத்தானை வளர்த்தே அறுப்பதுண்டு**" விளக்குக?
ஒருவர் இந்த பிறவியிலேயே முக்தி நிலையை அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டு இறைவனை நாடி பக்தி செலுத்துகின்றார் என்றால் அவனுடைய கர்மவினைகள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும். இவ்வாறு கர்ம வினைகள் நீக்கபடுகின்றப் போது பல துன்பங்களை அனுபவித்து

அதிலிருந்து விடுபட வழிவகுக்கும். இதையே அய்யா அன்பாகி வந்தவரை அலைச்சல் செய்து ஏற்பதுண்டு என்று கூறி இருக்கிறார்.

ஒருவன் தவறு செய்கிறான் என்றால் அதன் நோக்கம் என்ன என்று தெரிந்து கொண்ட பிறகு அதற்குரிய நல்ல பலனை பெறுவதற்கு வழிகாட்டப்படும் தவறுகள் குறைக்கபட வேண்டும். ஆனால் பேராசையின் காரணமாக பல தவறுகள் செய்தால் எவ்வளவு உயர்ந்த நிலையில் வாழ்ந்தாலும் அழிவு நிச்சயம் என்பதை வம்பான மாத்தானை வளர்த்தே அறுப்பதுண்டு என்று கூறி இருக்கிறார்.

36. அய்யா கலியழிப்பதற்காக எந்தெந்த கோலங்களை எடுப்பதாகக் கூறி இருக்கிறார்?
இரப்பவடிவு, ஏழைகுணம் போல்வடிவு, கடிய சொரூபம், வேளைக்கு வேளை விதக்கோலங்கள் எடுப்பதாகக் கூறி இருக்கிறார்.

37. கலி அழிக்கும் போது சான்றோர் மக்களை எவ்வாறு பாதுகாப்பதற்காக கூறுகின்றார்?
சங்கிலிரந்து சான்றோர் மக்களைப் பாதுகாப்பதாகக் கூறுகின்றார்.

38. தான் கலியழிக்க வரும் போது எந்த சொரூபத்தோடு வருவீர்கள் என்று கேட்ட கலைக்கோட்டு மாமுனியிடம் கூறியது என்ன என்று நாராயண மூர்த்தி சிவபெருமானிடம் கூறினார்?
"**மாசு கலியறுத்து மக்கள் ஒரு மித்தவுடன்**
**பாசுபதம் கொடுத்து பாலன் கையால்விளக்கி**
**கூப்பிடுத லொன்றில் குவலையத்தைத் தான் கிறங்கி**
**சாப்பிடுவேன் நஞ்சைத் தன்பாலே யாளவைப்பேன்**" என்று கூறினார். இதிலிருந்து சான்றோர் மக்களின் மூலம் அய்யா கலியழிப்பார் என்பது புலனாகிறது.

## அகில வாசகம்
### திருநடன உலா

நாதன் முறையார்க்கு நற்பிறவி யொன்றுபத்தாம்

வேதன் றனக்குப்பிறவி ஆயிரமாம் - வெண்டரள
மாதுக்கு மாயிரமாம் மாதுமைக் கோரேழாம்
சீதுக்குப் பத்தெனவே செப்பு

இந்திரற்கு மூன்றெனவும் இறையவருக் கேழெனவும்
சந்திரற் கோரேழாம் சாற்று - நன்றியுள்ள
மறையதுக்கு மோரேழாம் மானமுள்ள தொண்டருக்கு
இறப்பிறப்பில் லாப்பேறென் றியம்பு

என்றிவகை ளெல்லா மிப்படியே வந்துதென்று
ஒன்றியுள்ள சித்தாதி ஓதினான் - பண்டையுள்ள
தாவடத்தை மேவிடத்திக் கோவிடத்தி லோமிடத்தி
நாவிடத்திப் பூண்னதோ

தன்னாலே முளைத்த சற்கணையின் றண்வாங்கிப்
பின்னாலே யோர்கணைப் பீறி - பின்னாளே
பீறுங் கணையதினால் பெரும்புவியெல் லாந்தோன்றிச்
சீறுங் கலிவயதால் சென்றுதோ

வானத்தளவில் வளர்ந்த கம்பத் தண்ணருளால் சேனைச்
செகம்படைத்த செல்வமோ - மானத்த
மாகலிய னேதுவினால் வாழ்விழந் திவ்வுகமும்
போகத்தருணம் வந்து பூட்டினதோ

நல்லாறு சாஸ்திரமும் நாலுமறை வேதமதும்
பொல்லாக் கலியினால் பொய்ச்சூடி - பொல்லாப்
பொடியக் கலியோடு பொன்றியடி வேரறவே
இடியத்தான் வந்தொத்த தின்று

பக்கம் பதினைந்தும் பார்மேடம் பன்னிரண்டும்
வக்கணைக் கோளொன்பதுவு மங்கி - அக்கிகொண்)டு(
அழிந்த கலியோ டலமாந் தழிந்திடவே
சுழிந்தகன லாறுவந்து சுற்றிச்சோ

மாந்திர தந்திரத்தை வைத்திய வாகடத்தைச்
சூழ்ந்திருந்த அட்சரத்தைச் சோதித்து - ஏய்ந்திருந்த
இழகு கலியோ டிம்முறையெல் லாமொடுக்கிக்

களவறுக்கச் சோதியொன்று காணுதோ

அய்யமிட் டுண்ணாத அரும்பாவி யாவரையும்
பொய்யரையும் வெட்டிப் பெலியாக்கி - மெய்யிழந்து
நையுங் கலியோடு அனலாவிக் கொண்டெரிக்க
வெய்யவன்போல் சோதியொன்று மேவுதோ

பத்திசோ தித்தே பலநாளுங் காத்திருந்த
வித்தகனை வந்து வேண்டார்மேல் - வீடிழந்து
செத்திறந்து தீநரகச் சீக்கூட்டி லேயடையக்
கொத்தியருந் தப்புழுக்கள் கொஞ்சுதோ

பாங்கலிய னேதுவினால் பண்டுண்டு செய்ததெல்லாம்
மூங்கிக் கலியதனுள் மூடி - மூச்சுவிட்டு
ஓங்குவ தோங்கி உறங்குவது தானுறங்கி
மூங்கிக் குளிப்பதுநாள் முற்றுதோ

இலச்சைகெட்ட பாவி யென்றுவந்தா னன்றுமுதல்
நற்சடலங்கள் நல்வகைகள் நாடிழந்து - நாணமுற்றுப்
பட்சிமுதல் மாமிருகம் பால்நரிகள் கற்றாவும்
அச்சமற்று வாழ்புவியொன் றாகுதோ

பொல்லாத் துரங்கள்கொண்ட பேய்ச்செடிகள் தானொழிந்து
கல்லாத புல்லர் கருவொழிந்து - எல்லாம்
நல்லோராய்ச் சாகாமல்நாளும் நகரொன் றானதுக்குள்
சொல்லொன்றாலாள சோதியொன்று தோணுதோ

தாணுமால் வேதன் தற்பொருளாய் முப்பொருளும்
ஆணுவமா யொன்றி லடங்குதோ - அஞ்செழுத்தும்
ஆனா அரியெழுத்தும் ஆங்கார மூன்றெழுத்தும்
ஓநமோ வென்றதுக்குள் ளொடுங்குதோ

ஆகாத்த வஸ்துவெல்லாம் அழித்துநர கத்திலிட்டு
வாகாய்க் குழிமூட வந்துதோ - சாகாத
சனங்கள்பல வஸ்துவையும் தர்மபதி ராச்சியத்தில்
இனங்களொன்றாயாள ராசாவொன் றாகுதோ

பொன்னூற்றுத் தன்னூற்றுப் புரவுதன்னால் விளையூற்று
முன்னூற்று யோசனை யுலாவுசுழி - பன்னூற்றுப்
பாலூற்று மேலூற்றுச் சேலூற்று வாலூற்று
மாலூற்று மாபதியு மாகுதோ

செப்பொத்த பொன்னும் சிவமேடைசிங் காசனமும்
முப்பத்தி ரண்டறமு மோங்குதோ - ஒப்பற்ற
ஊர்தெருவு மொன்றதுக்குள் ஓர்யோசனைத் தெருக்கள்
சீர்பதினா யிரத்தெண் சேருதோ

தெருக்கள்பதி னாயிரத்தெண் செந்திருமால் வாழ்பதிக்குக்
குருக்களொன்று விஞ்சையொன்று கூறுதலோ - மருக்கள்
மாறாமல் வாழ்பதிக்கு மணங்கொடுத்து நிற்பதல்லால்
வேறார்க ளும்பறிக்க வேண்டுமோ

பொற்மைப் பதியில் பொன்வாச லொன்றதிலே
தர்மமணி யொன்று தாங்குதோ - தருமமனு
மணியினது கூறறிய மணிகணீரென் றதல்லால்
இனியிரு ளில்லா தேகுதோ

அலைந்தலைந்த சூரியனும் அவனலையச் சாயாமல்
நிலந்தெரிய எப்போதும் நேரே - குலைந்தலைந்த
கார்மேகத் தட்டதெல்லாம் கூண்டுடைந்து வானமதில்
ஊர்மேகமெல்லம் ஒருமேக மாகுதோ

தோணிக்கச் சிந்தை துலங்கிவெளி காட்டுமல்லால்
காணிக்கை யென்றயிறை காணாதோ - மாணிக்கக்
கல்லால் வளர்ந்தபதி காணுமொளி யல்லாது
பொல்லாரெனப் பேச்சுப் போச்சுதோ

ஈசர் நடன மிருபத்து ஒன்றதுக்குள்
தேசமது தீதுநலஞ் செப்பினார் - வாசமுடன்
வன்னி யமர்த்தி மாதுமையைத் தானோக்கி
உன்னிச் சிவமுரைப் பார்

## அகில வாசக விளக்கம்:

### திருநடன உலா வெண்பா

நாராயணருக்கு பத்து பிறவி எனவும் வைகுண்ட அவதாரம் பத்தாவது பிறவி என்றும், பிரம்மாவிற்கு ஆயிரம் பிறவி என்றும், சரஸ்வதிக்கு ஆயிரம் பிறவி வேண்டும், சீதையாகிய லெட்சுமி தேவிக்கு பத்தாவது பிறவி என்றும் இந்த வெண்பா மூலம் தெரியப்படுத்துகின்றார்.

இந்திரனுக்கு பிறவி மூன்று எனவும், இறைவனாகிய சிவபெருமானுக்கு ஏழு பிறவி எனவும், சந்திரனுக்கு ஏழாம் பிறவி என்றும், மறையதுக்கு ஏழு பிறவி என்றும், மானமுள்ள தொண்டருக்கு இறப்பு பிறப்பு இல்லாத பேறு , அதாவது உண்மையான இறைத்தொண்டர்களுக்குள் இறைவன் ஐக்கியம் ஆவார் என்பதை இந்த வெண்பா உணர்த்துகிறது.

என்று இவைகள் எல்லாம் காலச் சூழலுக்கு ஏற்ற வகையில் இப்படியே நடைமுறைக்கு வந்தது என்று ஒன்றியுள்ள சித்தாதி ஓதினான். அது அறிவு ஞானத்தின் மூலம் இவை வேறு என்று இல்லாமல் அத்தனையும் தானாக பரிணமித்துள்ளது என்பதை உத்திராட்ச மாலைகளைக் கழுத்திலே தரித்திருந்த சிவபெருமான் தன் திருநடனம் மூலம் தெரியப்படுத்துகின்றார்.

பிரபஞ்சம் எவ்வாறு உருவானது அதிலிருந்து பூமி எவ்வாறு தோன்றியது என்பதையும் இங்கே எடுத்துரைக்கிறார். எப்படி என்றால் சூரியனிடமிருந்து ஒரு நெருப்பு கோளமானது தானாகவே விழுந்து பின் குளிர்ச்சியடைந்து, அதிலிருந்து இந்த உலகம் எல்லாம் தோன்றியது என்றும் இப்போது கலியினால் அழியும் நிலையில் இருக்கின்றது என்பதை இங்கே திருவெண்பாவின் மூலம் எடுத்துரைக்கிறார்.

ஆதி அந்தம் இல்லாத ஜோதி சொரூபனாக அனைத்து தெய்வீக சக்திகளையும் தன்னுள் கொண்ட பரபிரம்மத்தால் உருவான பிரபஞ்சம் மற்றும் இந்த உலகம் எல்லாம் தோன்றியது. ஆனால் இப்போது கலியினால் வாழ்விழந்து ஆணவம் கன்மம்,மாயைக்கு உட்பட்டு நல்ல தன்மை எல்லாம் இழந்து நிற்கிறது. வீணான இந்த கலியினால் இப்போது அழியும் தருணத்தில் இருக்கின்றது என்பதை இங்கு எடுத்துரைக்கிறார்.

ஆறு சாஸ்திரங்களும் நான்கு வேதங்களும், உடல் சுகம் மற்றும் உலகியல் வாழ்வை பெரிதாக எண்ணி பேசி திரியும் பொய் சேத்திர குழுக்களின் பொய்யான விளக்கத்தால் பொய்யாக்கப்பட்டுள்ளது . இந்த பொய்யானது பொல்லாதக் கலியோடு முடியடி வேரில்லாமல் அழிவதற்கான நாள் இப்போது அடுத்து வந்திருக்கிறது என்று இந்த வெண்பாவின் மூலம் உணர்த்துகின்றார்

திதிகள் பதினைந்தும், ராசிகள் பன்னிரெண்டும், கோள் ஒன்பதும் அடிப்படையாகக் கொண்ட ஜோதிட சாஸ்திரம் ஞான அக்கினியால் கலியோடு அழிந்து போகும் காலம் நெருங்குகிறது. காரணம் தர்ம புவியை காண்பாருக்கு இவை தேவை இல்லை. ஆகவே சுத்த கனல் ஆறு வந்து அழித்து விடும் என்றுக் கூறி இருக்கிறார்.

மந்திர தந்திர வைத்திய வாகனங்கள் அவற்றின் மூலங்களான அட்சரங்கள் ஆகியவை அனைத்தும் இந்த இலகு கலியினால் ஒடுங்கி அவற்றை அழித்து, அவற்றினுடைய கருவை அறுப்பதற்காக ஜோதி வைகுண்டம் வந்து தோன்றுகின்றது என்பதை திருநடனதின் மூலம் கூறுகின்றார்.

ஐயம் இட்டு உண்ணாத அதாவது பிறருக்கு கொடுத்து உண்ணாத அதாவது ஈகை குணம் இல்லாத நன்றி கெட்ட அறச்சிந்தனையில்லாத பாவிகளையும் பொய்யர்களையும் அஞ்ஞானிகளாக இருக்கின்றபேர்களையும் சுயநலத்தோடு வாழுகின்ற பொய்யர்களையும் வெட்டி பெலியாக்கி உண்மை சற்றுமில்லாத நலிந்த கலியோடு அனலாவிக் கொண்டு எரிக்க அனந்தகோடி சூரிய பிரகாச வைகுண்டராசர் வெகு விரைவில் உதயமாகிறார் என்று இந்த வாசகத்தின் மூலம் கூறுகின்றார்.

பக்தியை சோதித்து தெளிந்தெடுத்து வீடு பேறு அருள்வதற்காக கருணையோடு வந்து காத்திருக்கும் வித்தகனான ஞான முதல்வனாகிய பிரம்ம வைகுண்டரை சரணடையாதோர் மேல் வீட்டை சென்றடைய கூடிய பேறினை இழந்து தீ நரகத்தில் செல்வார்கள். அங்கு அவர்களைக் கொத்தி அருந்த புழுக்கள் காத்துக் கொண்டு இருக்கின்றன என்பதை இங்கே எடுத்துக் கூறுகிறார்.

கலியினுடைய மாய்கையினால் தன் ஆசைகளை நிறைவேற்றுதல் பொருட்டு பாவச் செயல்களைச் செய்து மகிழ்ந்த கொடியவர்கள் அந்த பாவச் செயல்களாலே அழுந்தப்பட்டு பாழ் நரகில் மூழ்கி அழிந்து போகவும், நல்லவைகள் எல்லாம் விழித்து எழக்கூடியக் காலம் அடுத்து உள்ளது என்று எடுத்துக் கூறுகிறார்.

இலச்சைக் கெட்டப் பாவி ஆகிய வெட்கம், நாணம், கூச்சம் சற்றுமில்லாத கலிநீசன் என்று வந்தானோ அன்று முதல் நல்லவர்களும் நல்ல வகைகளானக் கள்ளம் கபடம் அறியாத பட்சி பறவைகளும், நல்ல தன்மைக் கொண்ட மிருகங்களும் பால் நரிகள் மற்றும் கற்றாவாகிய பசுவும் அச்சமற்று வாழ்வதற்குரிய தர்மபுவித் தோன்றுகின்ற நாள் வந்தது என்றுப் பாடல் மூலம் கூறுகின்றார்.

பிறரைக் கொடுமைப்படுத்துவதையே இன்பமாகக் கருதும் நீசர்களும் கல்லாத புல்லர்கள் ஆகிய அறிவில்லாதவர்களும் மத துவேசத்தினால் இறைச்சிந்தனை எள்ளளவும் இல்லாமல் மதத்தை துஸ்பிரயோகம் செய்பவர்களும் பிறரை கொடுமைப்படுத்தும் கயவர்களும் கரு ஒழிந்து அழிந்து போகவும் நல்லவர்களுக்கு எல்லாம் என்றும் சாகாதப் பேரின்ப வாழ்வு அருளி நன்நகர் எனும் தர்மபுவியில் ஒரு குடைக்குள் ஆள்வதற்கு சூரிய பிரகாச சுத்த வைகுண்டராசர் உதித்தெழுகின்ற நாள் வந்தது என்று எடுத்துக் கூறுகின்றார்.

சிவன் பிரம்மா விஷ்ணு என்ற மும்மூர்த்தியும் ஒன்றாகி ஒரு மூர்த்தியாக வைகுண்டமாக அய்யா அவதாரம் நிகழயிருக்கின்றது. இதில் சிவாய நம என ஐந்து எழுத்து மந்திரம் ஓம் நமோ நாராயணா என்னும் எட்டெடுத்து மந்திரம் மற்றும் அரி எழுத்து என்று சொல்லக்கூடிய அ, உ,ம் என்ற ஓங்கார ஒலிக்கூறுகள் மூன்றும் ஒன்றான நிலையில் ஓம் என்னும் பிரணவ சொரூபமாய் முச்சுடரும் ஒன்றாக இருக்கின்ற வைகுண்டருக்குள் ஒடுங்குகின்றது. மேலும் ஒன்றே பரம்பொருள் என்றும் சாம்ப சாதசிவ சாமி மூவரும் வைகுண்டமாக ஒன்றாக இணைந்து வந்திருக்கின்றார் அவருக்குள் எல்லாம் ஒடுங்கி இருக்கின்றது என்பதை இங்கே எடுத்துக்காட்டுகின்றார்.

அகப்பகைகளை மனதிலே கொண்டு வாழுகின்ற தீயவர்களை எல்லாம் அழித்து நரகத்தில் இட்டு நரக குழியை மூடுவதற்குரிய நாள் அடுத்து வந்திருக்கின்றது. மேலும் சாகாதச் சனங்கள் பல வஸ்துவையும் என்றும் சாகா நிலை எய்தியவர்களுக்குச் சாய்யூச்ச நிலையை அருளி ஒரே இனமாக தர்மபதி இராட்சியத்தில் வைத்து ஒரு குடைக்குள் ஆளும் மாமன்னர் வைகுண்டராசர் உதயமாகின்றார் என்பதை இங்கு எடுத்துக் கூறுகின்றார்.

ஞான ஒளி பெற்று பொன்னூற்றாக இருக்கின்ற ஆன்மாவும் தன்னை அறிந்து ஞானநிலையாகிய பேரருளை அறிகின்ற ஆன்மாவையும் பல வினைகளை எல்லாம் அறுத்து ஞானத்தை பெற்று இறைவனுக்குள் ஐக்கியமாகக் கொண்ட ஆன்மாக்களையும் பன்னூற்று என்று சொல்லக்கூடிய ஆகாய கங்கை பெறும் தகுதி யுடைய நல்லவர்களை தன் கடைக்கண் பார்வையால் கடந்தேற்றி என்றும் இளமை மாறாமல் மரணம் இல்லாத பெருவாழ்வு ஆகிய வாலூற்று என்ற என்றும் இளமை மாறாமல் இருக்கின்ற மாலுற்றாகிய இறை சிந்தனையோடு வாழுகின்ற தர்ம பதி இராச்சியத்தில் வைகுண்டராசர் ஒரு குடையின் கீழ் ஆளுகின்ற நாள் வருகிறது என்று எடுத்துரைக்கின்றார்.

தர்மபுரி ராஜ்ஜியத்தில் செப்பொத்த பொன்னும், சிவ மேடை சிங்காசனமும் முப்பத்திரண்டு அறத்தால் ஆன சிங்காசனமும் ஓங்குகின்றது. மேலும் ஒப்பற்ற ஊர் தெருவும் ஒவ்வொருத்தெருவாக இல்லாமல் ஒன்றாக இருக்கிறது. ஓர் யோசனை பல பல யோசனைகளோடு இன்று ஆளுகின்ற ஆட்சி நிலமை போன்று அல்லாமல் ஒரு குடைக்குள் இறைவன் இந்த உலக ஆளுகின்ற ஒரு யோசனை தெருக்கள் தர்ம பதி இராச்சியத்தில் இருக்கும். சீர்பதியின் ஆயிரத்தெட்டு தெருவும் ஒன்றாக தர்மபுரி ராஜ்யத்தில் சேருகின்றது. என்பதைக் கூறுகிறார்.

பரிபூரண வஸ்துவான செந்திருமாலாகிய பரம்பொருளை சென்றடைவதற்கு தர்ம மார்க்கங்கள் எண்ணிறைந்த கோடி உள்ளன. அத்தனை மார்க்கங்களிலும் ஞான குருவாக இருந்து

அருள்பவன் காரண குருவான பரம்பொருள் ஒருவனே! .ஞானம் என்பது ஞானவான்களுக்கு தானாகவே அல்லது இயல்பாகவே விளங்கி மேலும் மேலும் சிறப்பை கொடுத்து நிற்கும். அது வலிந்து பறித்து பெறக் கூடியது அல்ல என்பதை இங்கே கூறுகின்றார். ஞானவான்கள் பெற்ற சிறப்பை யாரும் பறிக்க முடியாது என்றுக் கூறுகிறார்.

தர்மயுகத்தில் அமைந்திருக்கின்றப் பொறுமைப் பதியாகிய பொன்னம் பதியில் பொன்வாசல் ஒன்றாகவும், அந்த தர்ம பதியில் தர்ம மணி கணீர் என்றுச் சிறப்பாக ஒலிக்கிறது. தர்ம மக்களினுடைய மணியினது கூறறிய மணி கணீர் என்றதல்லா அங்கு இருள் என்பது இருக்காது. ஏனென்றால் இருள் நிரந்தரமாக நீங்கிவிடும். எங்கும் பேரொளி நிறைந்து காணப்படும்.

தர்ம யுக வாழ்வு என்பது ஆன்ம விளிப்பு பெற்று என்றும் உயிர் அழியா வண்ணம் வைகுண்டரால் ஆளப்படுவது ஆகும். ஆகவே இங்கு மறலி வினை என்பது இருக்காது. அதாவது எமன், காலன், தூதன் போன்றவர்களுக்கு தர்ம யுகத்தில் வேலை இல்லை. மேலும் நாள் கோள், நட்சத்திரம் ஆகியவற்றால் உருவாகும் பாதிப்புகள் எதுவும் இல்லாமல் அதற்கு அப்பாற்பட்ட நிலையில் இருக்கும். மரபுகள் எல்லாம் நீக்கப்பட்டு ஞான நிலையில் இருக்கும். ஆகவே சூரியனால் இரவு பகல் என்ற நிலை வராமல் எப்பொழுதும் ஒளி வீசிக் கொண்டே இருக்கும். சந்திரனுக்கு வளர்வது தேய்வு என்பது இல்லாமல் ஒரே சீராக ஒளி வீசிக் கொண்டே இருக்கும். மேலும் குலைந்து ஆங்காங்கே அலைந்து கொண்டு இருக்கும் மேகங்களின் தட்டுகள் எல்லாம் கண்டுடைத்து வானமதில் ஊர் மேகமெல்லாம் ஒரு மேகமாக இருக்கும் என்றுக் கூறினார்.

தோனிக்க சிந்தை துலங்கிவெளி காட்டாமல் என்பது தன்னிறைவு பெற்ற நிலை. எதையும் கேட்டு பெற தேவையற்ற நிலை. பரிபூரண ஞான நிலை. எந்தவித மறைப்பும் இன்றி அறிய வேண்டியது ஒன்றுமில்லாமல் பூரணமாய் நிறைந்து நிற்கும் நிலை. இங்கு காணிக்கை கைக்கூலி போன்றவை எல்லாம் அழிந்து போகும். காரணம் ஞானம் பெற்றவர்களால் தன்னுள் இறைவனை கண்டு மகிழ்ச்சி அடைவார்.

தர்ம பதி இராச்சியத்தில் ஆன்ம விளிப்பு பெற்ற ஜோதி தரிசனம் இருக்கும். ஆகையால் பொல்லாதவர்கள் என்ற பேச்சுக்கோ எந்த இடமில்லை. ஞான நிலையில் இருப்பவர்களுக்கு காணிக்கை என்ற இறை அவசியமில்லை. இவ்வாறு தன்னுள் இறைவனை கண்டுக் கொண்டவர்களுக்கு அல்லது பரபிம்மத்தோடு ஐக்கிய ஆனவர்களுக்கு புற வழிபாடுகள் தேவை இல்லை என்பதை இந்த வெண்பா மூலம் கூறுகின்றார்.

சிவபெருமான் ஆடிய திருநடனத்தின் மூலம் இருபத்து ஒன்று வெண்பாக்களுக்குள் இந்த உலகத்தில் உள்ள நன்மை தீமை ஆகிய அனைத்து விபரங்களையும் கூறி ஞானத்தை வெளிப்படுத்தி, தான் திருநடனம் ஆடும் போது ஏற்படுத்தியிருந்த வன்னியை அமர்த்தி அதாவது ருத்ர சக்தியை ஒடுக்கி இப்போது சிவமயமாக நின்று அம்மையிடம் எடுத்துக் கூறினார் என்பதாகும்.

## வினா விடை:-

1. சிவபெருமானிடம் திருநடனம் ஆட பணிந்தவர் யார்?
   நாராயண மூர்த்தி

2. நாராயணமூர்த்திக்கு பிறவி எத்தனை?
   பத்து

3. லெட்சுமிதேவிக்கு பிறவிஎத்தனை?
   பத்து

4. சரஸ்வதிதேவிக்கு பிறவிஎத்தனை?
   ஆயிரம்

5. அம்மை உமையவளுக்கு பிறவி எத்தனை?
   ஏழு

6. பிரம்ம தேவருக்கு பிறவி எத்தனை?
   ஆயிரம்

7. சிவப்பெருமானுக்கு பிறவி எத்தனை?

ஏழு

8. இந்திரனுக்கு பிறவி எத்தனை?
மூன்று

9. சந்திரனுக்கு பிறவி எத்தனை?
ஏழு

10. மறையதற்க்கு பிறவி எத்தனை?
ஏழு

11. மானமுள்ள தொண்டனுக்கு பிறவி எத்தனை?
ஒரு பிறவி

12. நாம் பிறவி பிணியிலிருந்து விடுபடுவதற்கு என்ன செய்ய வேண்டும்?
உண்மையான இறை தொண்டனாக வாழ வேண்டும்.

13. .கலியோடு சேர்ந்து அழிந்து போவன எவை எவை?
சாஸ்திரமும், மறையும், பக்கம் பதினைந்தும் (வளர்பிறை தேய்பிறைநிதி),பார்மேடம் பன்னிரெண்டு (12ராசிகள்), கோள் ஒன்பது, மந்திர தந்திரம்,வைத்திய வாகடனம்,பொய்,புரட்டு,வஞ்சகம் மற்றும் பல தீய செயல்கள் எல்லாம் கலியோடு அழிந்து போகும்.

14. தர்மபதி இராச்சியத்தில் இருக்கும் சிறப்புகள் யாவை?
பொன்னூற்று, தன்னூற்று, புரவுதன்னால் வினையூற்று,எண்ணமில்லா சுழியூற்று, பன்னூற்று, பாலூற்று,மேலூற்று,சேலூற்று,வாலூற்று, மாலூற்று போன்ற சிறப்புகளைப் பெற்றது தர்மயுக இராச்சியம்.

15. தர்ம பதி இராச்சியத்தில் இருக்கும் தெருக்களின் எண்ணிக்கை எத்தனை?
பதினாயிரத்தெண் தெருக்கள் உள்ளன.

16. தர்ம பதி இராச்சியத்தில் உள்ள பொறுமை பதியில் உள்ள வாசல்களின் எண்ணிக்கை எத்தனை?
ஒன்று

அகில வாசகம்
நடை

ஈசர் மகிழ்ந்து ஏந்திழையைத் தானோக்கி
வாச முடனீசர் வகுப்பா ரம்மாதோடு
முன்னே மொழிந்த முற்றாண்ட வமதுக்குப்
பொன்னே யிந்நேரம் புரிந்ததுநீ கண்டாயே
அப்பொழுது ஈஸ்வரியும் அரனை மிகப்போற்றி
இப்பொழுது என்னுடைய இராச மகாபரனே
செப்போடு வொத்தச் சிவனே சிவபரனே
ஆடினீரே தாண்டவந்தான் அநேக வளங்கள்சொல்லிப்
பாடினீரே அய்யா பாட்டு வழுகாதே
தாண்டவ மாடிப்புரிந்தால் சத்திசிவம் வரைக்கும்
மாண்டாரைப் போற்கிடந்து மறுத்தெழும்ப வேணுமல்லோ
அல்லாம லென்னுடைய அண்ணர் நினைப்பதிலே
நல்லவரே கொஞ்சம் நானறிந்தது கேளும்
காரணமா யண்ணர் கலியுகத் தைமுடிக்க
நாரணர்தான் பூமியிலே நடப்பது நிசமானால்
நம்மையு மிங்கிருக்க ஒட்டார்காண் நாரணரும்
எம்மழையி லானாலும் எவ்வெயிலி லானாலும்
கொந்தலி லானாலும் கூர்பனியி லானாலும்
கந்தத் துணிகள்தந்து கையில்திரு வோடுதந்து
என்றனக்கு நல்ல இளங்குறத்தி வட்டிதந்து
மைந்தன் சரவணற்கு மறிப்பு மிகக்கொடுத்துப்
பிரமனுக்குக் கோலமிட்டுப் பிசாசுத னைவிரட்டி
வரமுள்ள தேவதைக்கு மாற்றி யுருக்கொடுத்து
லோகமதில் நம்மையும் உகக்கோலங் களிட்டி
வேகத்துடனே மேதினியெல் லாந்திரிந்து
கலிக ளகலக் காண்டங் கழிக்கவென்று
பலிகாண வைப்பார் பரசோ தனைக்கனுப்பி
உலகதிலே நாமள் உவரியிலே தவமிருந்து
செகமதிலே ஓர்பாலன் சிறப்பாய் மிகவெடுத்து
கலிமுடிக்க போவார்காண் கர்த்தனரி வைகுண்டரும்
பெலிகொடுத்து கலிதனையும் பெரும்புவி ஆள்வார்காண்
இப்படியே தோணுதுகாண் என்னுடைய சிந்தையிலே

எப்படியும் வந்து இதுசமையு மீசுரரே
என்று உமையாள் ஈசர்தனை வணங்கி
அன்று மொழிந்து அவள்நிற்கும் வேளையிலே
நாரா யணரும் நல்ல சிவனிடத்தில்
சீராக வந்து தெண்டனிட்டுத் தானிருந்தார்
இருந்து மாலோனும் இருதயத்தி னுள்மகிழ்ந்து
பொருந்துவிழி தங்கையோடு புகலுவா ரம்மானை
என்னுடைய தங்கையரே எனைமேனி யாக்குவளே
உன்னுடைய தன்பொருட்டால் உலகளந்தோ னானாகி
நாட்டி லென்பேரு நடத்திவைத்த நன்னுதலே
கோட்டு வரையாளே கோவே யென்தங்கையரே
நீயும் நம்மீசுரரும் நீணிலத்தில் போகவென்று
நானும் நினைத்திருந்தேன் என்று நவின்றாயே
ஈஸ்வரிக்கு மீசுரர்க்கும் இந்த நினைவானால்
தேசமதில் போக வேண்டாமென்று சொல்வாரோ
நானுங் களைவலிய நாட்டிற்போ மென்றிலனே
தானுங்கள் தம்நினைவில் தரித்ததுபோ லேபோவும்
நீங்கள் நடப்பதென்றால் எனக்குவெகு சந்தோசம்
தாங்கள் மனதிரங்கி சாற்றிமிகப் போவுமென்றார்
அப்போது ஈசுரனார் அச்சுதரைத் தானோக்கி
மைப்போடுங் கண்ணினிய மைத்துனரே யென்றாவி
சொல்லுச் சொல்லாதபடி சொல்லுதற்கு உம்மையல்லால்
அல்லும் பகலும் அலைந்தாலுங் கிட்டாது
போங்களென்று சொல்லாமல் புத்திசொன்னாப் போலேநீர்
தாங்கி யுரைத்தீரோ சத்தியுள்ள மைத்துனரே
புத்தியிது நன்று புண்ணியநா ராயணரே
தத்தியுட னடக்க தருணமெப்போ தென்றுரைத்தார்
நடக்கக் கருமமிது நல்லதுதா னென்றுசொல்லி
அடக்க முடனே அய்யாநா ராயணரும்
ஒத்திருந்து தங்கள் உற்பனமா யாராய்ந்து
புத்திபோல் வாசகங்கள் பூத்தான மாயெழுதி
நாட்டு நருளறிய நடைசீவ செந்தறிய
காட்டு மரமறிய கல்லப்பு தானறிய
புற்பூ டறிய பூமிதெய் வாரறிய
நற்பறிந்து பேய்கள் நடுங்கி மிகஅறிய
சேட னறிய சிறுவாய்வு தானறிய
மேக மறிய மேலோர்கள் தாமறிய

பூக மறிய பொழுதுசந் திரனறிய
நட்சேத் திரமறிய நமனறிய கொளறிய
பொய்ச்சரியை கிரியை பேர்நா லுந்தானறிய
வேத மறிய விளங்கு மறையறிய
வாதை யறிய மன்றுபதி னாலறிய
சங்கறிய முத்தறிய சகலமச்ச முமறிய
அங்கறிய நாம்படைத்த எல்லோருந் தானறிய
எழுதி விடுவோங்காண் ஏற்றரிய புத்திவைத்து
பழுதுவைத்தா ரென்று பார்பலதுஞ் சொல்லாமல்
நம்பேரில் குற்றம் நகத்தளவு மில்லாமல்
பம்முதலாய் நாமும் பரிந்தெழுதி தான்விடுவோம்
என்று திருமாலும் இறவாத ஈசுரரும்
மன்று படைத்த மறையோனும் பார்வதியும்
சரசு பதியும் சத்தியுள்ள லட்சுமியும்
விரசு முனிமாரும் வேத மறையோரும்
சாஸ்திரரும் கின்னரரும் சங்கத் துறைவோரும்
பார்த்திவனுந் தெய்வ பாவாணர் தாமுதலாய்
வானவருந் தேவர்களும் மற்றுஞ்சித் தாதிகளும்
தானவரும் வேதத் தம்புருக் காரர்களும்
சங்கம் வரையும் தாண்டவர்கள் தாமுதலாய்
எங்கெங்கு முள்ள இருஷிமுதல் தான்வருத்தி
எல்லோருங் கயிலை இடம்விட் டெழுந்தருளி
வல்லோர்கள் வாழும் வைகுண்ட மீதில்வந்து
கங்கைநதி கண்டு கறைக்கண்டர் தேவர்வரை
கங்கை தீர்த்தமாடி கிருஷ்ணர் பதிபுகுந்து
மேடை விதானமிட்டு மிகுமேடை பொன்னழுத்தி
வாடை கமழவிட்டு வானவர்கள் பாடவிட்டு
எக்காள டம்மானம் எங்கு முழங்கவிட்டு
மிக்க புராணக்கலை மிகுமறையோர் போற்றவிட்டு
ஆகமங்கள் போற்றவிட்டு அரம்பையர்கை காட்டவிட்டுப்
போகமுனி சித்தரெல்லாம் புராணகவி யோசையிட்டு
மும்முதற்குத் தேவரெல்லாம் முறையிட்டு வாழ்த்தவிட்டுச்
சங்குத் தொனிகளிட்டு சகலோரும் போற்றவிட்டு
இத்தனை நற்சிறப்பும் இதமா யலங்கரித்து
வித்தையருள் தண்டரள விழியாளைத் தான்வருத்தி
அப்போ சரசுபதி ஆனந்த மேபெருகி
இப்போ எழுந்தருளி இன்பமுடன் போகவென்று

கங்கை நதிமூழ்கி கிரணப்பச்சை யாடைபெய்து
சங்கையுட னாபரணம் சரசு பதியணிந்து
குழல்முடித்து குழையில் குவிந்ததங்கத் தோடணிந்து
வளையல் முறுக்குமிட்டு மாதுசந் தோசமுடன்
பச்சைநிறக் காப்பணிந்து பவளமணித் தண்டையிட்டு
மச்சமதில் மையெழுதி மகிழ்ந்து மூக்குத்தியிட்டுக்
தண்டரளமீதில்த் தங்கத்தகடணிந்து
கொண்டைதனில் தேமலரைக் குவிய மிகச்சூடி
பொற்சரிகைச் சேலை பெரியயேத் தாப்புமிட்டு
அச்சரக்கைத் தோழி அரம்பையர்முன் னாடிவர
அன்ன நடைநடந்து அனல்கொழுந் திட்டாப்போல்
வன்ன அழகுடனே வந்தாள்திரு முன்பதிலே
மாது வரவே மறையோனும் மாயோனும்
ஏதுகோ லமெனவே எண்ணமதி லுன்னினராம்
உன்னித் திடமாய் உளமகிழ்ந்து மாயவனும்
கன்னி தனைப்பார்த்துக் கறைக்கண்டர் தானுரைப்பார்
வன்னத் திருவடிவே மறையோனி னோவியமே
அன்ன மடமாதே அரசுக் குகந்தவளே
கருத்துடைய சோதி கவியுடையீ ருந்தனையும்
வருத்தின காரியந்தான் வகுக்கக்கே ளொண்ணுதலே
நாட்டிலொரு நீசன் நன்றியறியாப் பிறந்து
மேட்டிமையாய் லோகமெல்லாம் மெய்யழித்தான் கண்டாயே
கோட்டிப் பவம்பிறந்து குருநீதி யைக்கெடுத்தான்
கேட்டிருக்கக் கூடாது கெடுநீசன் பொல்லாங்கு
நம்மை நினையாததுதான் நமக்குசற் றெண்ணமில்லை
செம்மையுள்ள சான்றோரைச் செய்தபங்க மேற்கலையே
தெய்வப் பிறவியல்லொ திசைவென்ற சான்றோர்கள்
மெய்வரம்பை யெல்லாம் மிகக்கெடுத்தான்மாபாவி
கற்பகலாப் பெண்களுட கற்புக்கிரங் காதிருந்தால்
உற்பனமோ நாமள் உடையபர னென்றாமோ
எளியவனை வம்பால் இடுக்கஞ்செய் தேயடித்தால்
விளியிட் டழுதாலும் மேதினியிற் கேட்பதில்லை
கேளாத காரணத்தால் கீர்த்திகொண்ட பேரெளியோர்
நாளான நாள்வழியாய் நம்பிநம்பேரில் வைத்தார்
அல்லாமல் நம்முடைய அரிதன்மகா நாமமதை
இல்லாம லேமறைத்தான் இயல்புகெட்ட மாநீசன்
ஆனாலும் பாரமில்லை அன்னீதம் பொறுக்கரிது

மானாபர ஞாயமதை வரம்பழித்தான் மாநீசன்
ஆகமத்தைக் கூறழித்தான் அன்னீத மாபாவி
தாக மடைந்தார்கள் தவசுமுனி மார்களெல்லாம்
நீசப் பாசாசு நீணிலத்தைக் கொள்ளைகொண்டு
தோசப் பயலோடு துணையாய் மிகக்கூடிக்
கெடுக்குதுகாண் பசாசு கேட்பார்க ளில்லாமல்
கொடுக்கவொன் றில்லா நருட்பார்த்துக் கொல்லுதுகாண்
அதுவே யொருகொடுமை அநேகம் பொறுக்கரிது
எதுவும் வரம்புதம்பி இருக்குதுகாண் வையகத்தில்
ஆனதால் நாங்கள் அவனிதனிற் போயிருந்து
மானமுறை சோதித்து மனுவிடுக்கந் தான்தீர்த்து
நாட்டிலுள்ள குற்றம் நாங்கள்பார்த் துத்தீர்த்து
ஓட்டுவதை யோட்டி உறைப்பதை யுறைப்பித்து
நாடையொரு சொல்லதுக்குள் நலமாக வாழ்விக்கவே
பேடையன்ன மாமயிலே பெண்ணரசே இப்போது
நாங்கள் நடப்பதற்கு நாளான நாளிதுவே
தாங்கள்வைகுண்டம் விட்டுதாம் போகும்முன்னதாக
ஆனதால் பாவி அவனிழுக்குச் சொல்லாமல்
மானமுள்ள புத்தியைப்போல் வாசகமொன் றேயெழுதி
வருவோமென அயச்சால் மாபாவி தானறிந்து
கருவி குழறி கற்பினைக்குள் ளாகுவதும்
என்னவோ வென்று இடும்புசெய்வ துமறிய
அவனறிய விட்டதுபோல் அவனிபதி னாலறிய
எவரும்புற் பூண்டுவரை எவ்வகையுந் தானறிய
சித்தன் கிருபையினால் சிவசங்கந்தான்கூடி
புத்திபோல் நீசொல்ல பூவறிய நானெழுதி
எழுதியொரு வாசகந்தான் இப்போவிட வேணுமென்று
முழுது முன்னிங்கே ஓடிவா வென்றதுதான்
அப்போ சரசுபதி ஆனஅயன் மாமயிலும்
இப்போ திவ்வகைக்கு யானென்ன செய்கருமம்
எல்லாங் கிருபை எம்பரனே யுன்செயலு
அல்லாம லென்றனக்கு ஆகுமோ ஏதாலும்
ஆட்டுவதும் நீயல்லவோ ஆடுவானும் நீயல்லவோ
ஓட்டுவதும் நீயல்லவோ ஓடுவானும் நீயல்லவோ
சொல்லுவதும் நீயல்லவோ சொல்லவைப்பானும் நீயல்லவோ
அல்லும்பகல் நீயல்லவோ அழியாத வனும்நீயல்லவோ
எல்லா முமது கிருபை யெனக்கல்லாது

சொல்லீது வந்ததென்ன சுவாமியெனப் பணிந்தான்
மாது திருமால் மலர்ப்பாதம் போற்றிடவே
ஆதித் திருமால் அவரேது சொல்லலுற்றார்
நீயுரைக்க நானெழுதி நீணிலத்தில் விட்டதுண்டால்
வாயுரைக்கக் கூடாது மற்றோர்க ளாராலும்
வம்புரைக்கக் கூடாது வம்புரைத்தால் வன்னரகம்
உம்பதுவே யல்லால் உறுகெதிகள் காணார்கள்
ஆனதா லுன்வாக்கும் அரியச்சரமுங் காண்பித்தால்
மானமென்ன வாகுமென்று வகுத்துரைத்துப் பார்ப்போம்நாம்
அப்போ சரசுபதி அன்போ டுளமகிழ்ந்து
செப்புகிறாள் நல்ல திருவாசகந்தா னம்மானை

திருவாசக விருத்தம்

கலையொடு கலையைத் தாக்கிக் கண்ணின்மேல் கருணை நாட்டி
மலையொடு மலையைத் தாண்டி வளர்ந்தவன் பதமே கண்டு
சிலையொடு சிலையி னாளும் சிவபரா கிருபை யென்றே
அலைதலை முழக்கம் போலே அவளுரை கூற லுற்றாள்

விருத்தம்

கூறிய வாசகத்தை யிந்தக் குவலயத் தோர்கள் காண
மீறிய மொழிகள் சொல்லி விளம்புவர் நாச மாகும்
தேறிய பூதத் தோடு தேர்ந்துணர்ந் தவரே வாழ்வார்
கூறிய வாசகத்தை யுள்ளங் கொண்டவர் குருவைக் காண்பார்

விருத்தம்

ஒருதிரு விபூதி யுண்டை ஒருயிரு மிச்ச மாகும்
ஒருதிடத் தேங்காய்ப் போலும் ஒருமனத் திரணை போட்டுக்
கருதிட வெற்றிலை பாக்கும் கனிந்திடு வோர்க்கு மூவர்
வருகிட ஞாய மெய்யின் வழியிது வாகுந் தானே

விருத்தம்

மனுமொழி யிதுவா மென்று மதத்துடன் பேசு வோர்க்கு
இனிதல்ல வீண்தா னென்று இயம்பிய பகைஞர் தம்மை
குனிதவள் துர்க்கை சென்று கொன்றவள் நரகம் பூத்தி

கனிதுடன் துர்க்கை வாரி கடல் தீர்த்த மாடுவாளே

வேறு

எறும்புகடை யானைமுதல் எண்பத்துநான் குயிர்கள்
எழுகடல் பதினாலு புவிகளும் இரதிமதி சூரியர்கள்
பருதி பாலாழியும் இயல்வானம் வாயு முதலாய்
தெறும்பு மாமலை மாமரச் சோலையும் சேடனுந்
தலைமோடனு மறியவே தென்கீழத் தேவரு
மிங்குள்ள மூவரும் தேசதெய் வேந்திர னறியவே
வாச முனிவோர்களும் வேதசன் னாசியும்
மறையாறு சாஸ்திர மறியவே மண்டல மளந்தகை
கொண்டெழுதும் வாசகம் மண்டலர்க ளெவரு மறியவே
சொல்கிறேன்

வறும்பகல் தொளாயிரத்து தொண்ணூற் றெட்டாண்டினில்
வளர்ஸ்ரீ சாம்பசிவ மூர்த்தியும் மகாபரசுராமரும் ஸ்ரீராமசேயரும்
பதியேறும் மூர்த்தியும் வண்மை பார்த்திந்தக்கலி யுகத்தில்
படுரேநீ சக்கலியால் வரும்வாறு வண்மையைப் பகர்ந்து
திருவாசக மெழுதிப் பலநூல் அறிந்தவர் எவர் அவர்களும்
பக்தியுட னெக்காலமும் பணிந்துதிரு வாசகத்தை முத்தியணைந்
தோர்க்குமிகுபல னுண்டாம் பகரக்கேளு நத்தியுடன் பூலோகக்
கலியுகா தேசத்தில் நடக்கு முறைதானுங் கேளீர்

திருவாசம்- 1

நல்ல வீரபுரந்தரத் தர்மராசா வங்கிசத்திலே
நாடும் ஒரு மதலை பிறந்து வந்தவுடன் நல்ல அருணாசலத்திலே
வாலிபப் பிள்ளையாயிருக்கிறார் .அந்தப் பூலோகக்
கலியுகத்திலே ஆசாரமாயிருக்கிற பேர்களும் அழுக்கான
புத்திமதியா இருக்கிற பேர்களும் அவரவர் ஆங்காரமாகியே
அலைந்து உயிர்நிலையில்லாதவர் அழிந்து போவார்கள் .
அதில்மேல் பதினெட்டுத் துர்க்கையம்மாள் பிறந்து அந்தக்
கலியுகப் பஞ்சமிர்த ராச்சியத்திலே வருகிறார்கள் .வந்தவுடனே
மூன்று நாள் இருள்மூடி ஆனைத் துதிக்கைபோல் மழைபெய்யும்.
அதிலே சில துர்ச்சனர்களெல்லாம் மாண்டு போவார்கள்.

அதின்மேல் பக்தியாயிருக்கிற பேர்களுக்கும்
பிள்ளை யில்லாமலிருக்கிற பேர்களுக்கும்
கண்ணில்லாமலிருக்கிற பேர்களுக்கும் தனமில்லாமலிருக்கிற பேர்களுக்கும் பராபர மூர்த்தியும் சாம்பசிவ மூர்த்தியும் ஸ்ரீராமச்சேயரும் தீட்சையாகித் திருமனதிரங்கிப் பக்திகாரணங்களைச் சோதித்துப் பகிர்ந்து அவரவர் கேட்ட வரங்களைக் கொடுப்பார்கள். இன்னுஞ் சிறிது நாளையிலே சிலபேர்கள் தெய்வீகமாய்ப் போவார்கள்.
முன்னுக்கு மழைதட்டும் உலகிற்பல பல வஸ்துவும் பலிக்குமென வகுத்தார்.
சிலநீசர் மிகக் கறுப்பை நினைவில்லாத்தொட்டு
மிகப் பாசமடைந்து அலைந்து அழிந்து போவார்கள்.
வாலி சுக்ரீபனும் பண்டாரமாகிப் போவார்கள்.
வாச்சி கொழு கலப்பையெல்லாம் நாசமாகிப் போய்விடும்.
முன்னாலே துலுக்கர் தம்மை நாசம் பண்ணுகிறதற்காகவே துர்க்கையம்மாளைப் பிறவி செய்தனுப்புகிறோம்.
பிராமணர் நன்றாய் சுகத்துடன் வாழ்வார்கள்.
புவியில் முகத்துலிங்க மில்லாத பேர்க்குப் பிரமதேவரை யனுப்புகிறோம். பிரமதேவர் புவிமீதில் வந்து பக்தி காரணங்களைச் சோதித்துப் பொல்லாத பேரைத் தெரிந்து பிடித்துப் புதுக்கிராம தேசத்தில் வாழுந் தேவதைக்குப் பூசைப்பண்ணிப் போடுவாரெனப் புகட்டினார்.
காவேரியாற்றுக்குள்ளே மூன்று பொதி மங்கிலியம் கவிழ்ந்து அடையவேணுமென்றும் காசினியில் ஒரு ஏழு பெண்பிள்ளைகள் ஒரு ஆண்பிள்ளையை அடர்ந்து பிடிப்பார் களென்றும், அறுத்த மங்கிலியத்தை மிகுத்துக் கட்டுவார்களென்றும், இன்னுஞ்சிறிது நாளையிலே கேள்விகேளாமலிருக்கிற பேர்களும் துர்ச்சனராயிருக் கிறபேர்களும் வர்த்தகனாயிருக்கிற பேர்களும் தம்மில் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டு மாண்டுபோவார்களென்றும் போனபேர்கள் போக இருக்கிற பேர்கள் புண்ணிய புருஷரைத் தெரிசனம் பண்ணிக் கொண்டு சர்வபாக்கியத்திலே அடைவார்களென்றும்
மூன்று லோகத்துக்கு ஒரு வால்வெள்ளி யுண்டாக்கி நெருப்புப் போட்டுக் கொண்டு வருகிறோம்.
அதினால் மானிடரெல்லாம் உயிரிழந்து உட்கொள்ளைப்

பிறக்கொள்ளை யடிப்பார்களென்று நமக்கு நன்றாய்த் தெரியும்.
நாமதற்குமேல் பூலோகக் கலியுகப் பஞ்சமிர்த ராச்சியத்திலே
பண்டார வேசமாய் வருகிறோம்.
நாம் வருகிறபோது மண்ணெல்லாம் கிடுகிடென்றாடும்,
மலையும் வானமும் முழங்கித் திடுக்கிடும்,
அப்போது அதிலே அநேக துர்ச்சனர்களெல்லாம்
மாண்டு போவார்கள் .போனபேர்கள் போக
இருக்கிறபேர்கள் புண்ணிய புருஷராய் இருப்பார்கள்.
மந்திர தந்திர வைத்தியங்களெல்லாம் மறைந்து போய்விடும்.

வாதை பேய்களெல்லாம் வட கயிலாசத்திலே போய்ச்
சட்டுத்தீர்ந்து போவார்கள் .ஏழு சமுத்திரத்திலே
மூன்று சமுத்திரம் நீருள்வாங்கிப் போய்விடும்.
ஒரு சேர்வை விபூதி ஆறு சக்கரத்திற்கு விற்கவும்,
ஒரு லிங்கம் மூன்று வராகனுக்கு விற்கவும்,
ஒரு கழஞ்சிச் சலமெடுக்கவும், இரண்டு நாழிகை வழிக்கு
ஒரு தண்ணீர் பந்தலும், மூன்று நாழிகை வழிக்கு
ஒரு தர்மசாலை மடமும் நன்றாய் முடியும்.
தர்மங்கொடுக்கிற பேர்களுண்டு
தர்மம் வாங்கிற பேர்களில்லை யென்று சொல்லுகிற வெயிலாள்
மடக்கொடியாள்
வயிற்றிலே நாடுமொரு மதலை பிறந்து
பத்து வருசமாச்சுது .நாங்களும் மகா அருணா சலத்திலே
நாங்களும் வாலிபப் பிள்ளையா யிருக்கிறோம்.

அந்த வாலிபப் பிள்ளை என்ன சொல்கிறா ரென்றால்
வீர புரந்தர தர்மராசா வழியிலே விகிநாராயணர்
இங்கே வந்து மூன்று மாதத்துக்குத் தவசுபண்ணி
இரண்டு மாதத்துக்கு மேல் வருகிறார்.
வந்தவுடனே அந்நியோன் னியக் கலகமாகும்.
அந்தக் கலகத்திலே ஒருவருக்கொருவர்
சத்தியமாய்ப் போவார்கள்.போன பேர்கள் போக
இருக்கிற பேர்கள் புண்ணிய புருஷராய் இருப்பார்கள்.
அவர்களுக்கு வேண்டிய பாக்கியத்தைக் கொடுப்போம் 998-ல்.

விருத்தம்

பாக்கியங் கொடுப்போம் நாமும் பலனுடன் வாழு வோர்க்கு
நோக்கிய கருணை யுண்டாம் நோயில்லா திருந்து வாழ்வார்
தாக்கிய வாச கத்தின் தன்மையை நம்பு வோர்க்கு
வாக்கிய வைகுண்ட வீடு வந்தவர் வாழ்வார் தாமே

விருத்தம்

தினமொரு நேர மெந்தன் திருமொழி யதனைக் கேட்டால்
பனிவெள்ளம் போலே பாவம் பறந்திடும் நிசமே சொன்னோம்
கனிமொழி சோதி வாக்கும் கையெழுத் தாதி நோக்கும்
துணிவுடன் கேட்டோ ருற்றோர் தொலைத்தனர் பிறவி தானே

விருத்தம்

வாசித்தோர் கேட்டோ ருற்றோர் மனதினி லுணர்ந்து கற்றோர்
ஆசித்தன் பதமே கண்டு அவ்வழி முறையே நின்றோர்
கோசித்தன் பதமே கண்டு கோமலைப் புவியின் வாழ்வும்
தேசத்தின் செல்வத் தோடும் சிறப்புட னிருந்து வாழ்வார்

விருத்தம்

திருமொழி வாசகந் தன்னைத் தேசத்தில் வருமுன் னாக
வருவது திடனா மென்று வழுத்தினோம் தொளாயிருத்து 98ல்
ஒருதிருக் கூட்ட மாக ஓராயிரத் தெட்டா மாண்டில்
வருகென வந்து நாங்கள் அம்மானையில் வருத்தி னோமே

விருத்தம்

வருத்தினோ மம்மானை தன்னில் மானமாய்ப் புதிய தாக்கிக்
கருத்தினுள் ளகமே கொண்டு கவனித்தோ ரவர்க்கே தக்கும்
உருத்தில்லாக் கேட்போ ரெல்லாம் ஒருரை வெளியே காணார்
சிரித்துரைக் கேட்போ ரெல்லாம் சிவபொருள் வெளியே
காண்பார்

விருத்தம்

உலகில் மனுக்கள் தமிழாலே உவமை யுரைத்து விட்டாப்போல்

கலக முடனே யென்மொழியைக் கண்டு பழித்து நகைத்தோரை
அலகைத் துளைத்து நரகதிலே ஆணி யறைந்து அவனிதனில்
குலையக் குலைத்துத் தீநரகில் கொண்டே போடச் சொல்வேனே

விருத்தம்

எந்தன் மொழியு மென்னெழுத்தும் ஏடாய்ச் சேர்த்து இவ்வுலகில்
சிந்தை மகிழ்ந்த அன்பருக்குத் தெரியத் திறமா யெழுதி வைத்தேன்
எந்தன் பெருமான் திருமொழியை எடுத்தே வாசித் துரைத்தோரும்
சந்த முடனே வாழ்ந்துமிகத் தர்ம பதியுங் காண்பாரே

விருத்தம்

காண்பார் தர்மக் கண்காட்சை கண்டே மரண மில்லாமல்
காண்பா ரென்றுங் களிகூர்ந்து கண்ணோன் பதத்தைக் கண்ணாடி
காண்பார் நீதக் கண்ணாலே கருணா கரராய்க் கவ்வையற்றுக்
காண்பா ரென்றுங் கயிலாசம் கண்டே நன்றாய் வாழ்வாரே

விருத்தம்

இந்த மொழியைத் தூஷணித்த இடும்பர் படும்பா டதுகேளு
கந்த உலகுக் கலிபிடித்துக் கண்ணு முருகிக் காலுழன்று
குந்தக் குடலும் புறம்பூற கொப்புள் சிலந்தி யுண்டாகி
எந்த இடமும் அலைந்தழிவார் என்னாணை இது தப்பாதே

விருத்தம்

தப்பா தெனவே சாபமிட்டேன் சத்திபேரி லுண்மை யதாய்
எப்பா ரெல்லா மறிந்திடவே இந்த மொழியை எழுதிவைத்தேன்
ஒப்பா ரொருவ ரெழுதார்கள் உலகில் மனுக்கள் தன்னாலே
அப்பா நாத னெழுதிவைத்த அகிலத் திரட்டம் மானையிதே

விருத்தம்

என்றே யிந்தத் திருவாசகம் இயம்பச் சரசு பதிமாது
கன்றே மேய்த்தோ னெழுதிமிகக் கலியுக மதிலே விட்டிடவே
நன்றோர் மறையோ னிடமேகி நாட்டி லறியச் செய்யெனவே

அன்றே அவனி தானறிய அனுப்பி மகிழ்ந்து இருந்தனரே

## அகில வாசக விளக்கம்:

சிவபெருமான் தன்னுடைய திருநடன தாண்டவத்தின் மூலம் இந்த பிரபஞ்சத்தின் நன்மை தீமைகளைப் பாடி அருளுகின்றார். உடனே அம்மை உமையவள் அவரைப் பார்த்து ஐயனே நீர் இப்போது பாடியப் பாட்டு சற்றேனும் வழுகாதே! ஆகையினால் சக்தி சிவன் வரைக்கும் மாண்டவர் போல் கிடந்து மறுத்தெழும்ப வேண்டுமல்லவோ? அது மட்டுமல்லாமல் காரணமான அண்ணன் கலியுகத்தை முடிக்க நாராயணர் பூமியில் அவதாரம் எடுப்பது உண்மையானால் நம்மளும் இங்கே இருக்க முடியாது அல்லவா?

மழை வெயில் என்றுப் பாராமல் கொந்தல் குளிரென்று இல்லாமல் எந்த நிலையிலும் நாமும் நமக்குத் தரும் வேடங்களில் நடித்துதான் ஆக வேண்டும். கந்தை துணிகள் தந்து கையில் திருவோடு தந்தும் எந்தனுக்கு நல்ல இளங்குறத்தி வட்டி தந்தும், மைந்தன் சரவணனுக்கு மறிப்புமிக கொடுத்தும், பிரம்மனுக்கு கோலமிட்டு பிசாசுகளை விரட்டி வாரம் உள்ள தேவதைகளான பஞ்சபூத மகாசக்திகளுக்கு மாற்றி உருவெடுத்து எல்லோரும் லோகமதில் நம்மையும் உகக்கோலங்களிட்டு இந்த உலகமெல்லாம் திரிந்து அலைய வைத்து பல சோதனைக்கு அனுப்பிக் கலியழிக்கச் செய்வார் என்று என் உள்ளத்தில் தோன்றுகிறது என்றாள் அம்மை உமையவள். எப்படி இது நடக்கும் என்பது என்னுடைய சிந்தையில் தோன்றுகிறது என்று சிவபெருமானிடம் கூறினாள்.

உடனே நாராயணமூர்த்தி சிவபெருமானிடம் வந்து தெண்டனிட்டு நிற்கின்றார். அப்போது நாராயணமூர்த்தி தன் மனதிற்குள் மகிழ்ந்து தங்கையாகிய அம்மை உமையவளோடு சொல்லுகின்றார், எப்படி என்றால் என்னுடைய தங்கையரே எனை மேனியாக்குபவளே உன்னுடைய தன்பொருட்டால் உலகளந்தோன் நானாகி நாட்டில் என் பெருமையை நாட்டி வைத்த நன்னுதலே அதாவது யுகாயுகங்கள் தோறும் நான் எடுக்கின்ற ஒவ்வொரு அவதாரத்திலும் என்னை இயக்குகின்ற ஒரு சக்தியாக என்னோடு இருந்து என்னை உயர்வடையச் செய்தவளே உன்னுடையப் பொருட்டால் தீமைகளை அழித்து

நன்மை நிலைநாட்டி தர்ம சிந்தனையால் கலியழிப்பதற்காக பரபிரம்மமான வைகுண்டம் என்றப் பெயரோடு மாயை அழிப்பதற்கும் உதவிப் புரிபவளே! நீயும் நம் ஈஸ்வரும் தேசமதில் போக நினைக்கும் போது யாராவது உங்களை நீங்கள் போக வேண்டாம் என்றுச் சொல்வார்களா? நானாக உங்களை நாட்டில் போங்கள் என்றுச் சொல்லவில்லை. நீங்கள் நினைத்தது போல நடப்பதென்றால் எனக்கு மிகவும் சந்தோஷம் உங்கள் திருவுள கருணையின் படிச் செய்யுங்கள் என்றுத் திருவாய் மலர்ந்து கூறினார்.

உடனே ஈசர் அவரை பார்த்து சொல்லுச் சொல்லாத படிச் சொல்வதற்கு உம்மை விட்டால் வேறு யார் உள்ளாரோ அல்லும் பகலும் அலைந்தாலும் யாரும் கிடைக்க மாட்டார்கள். போங்கள் என்று சொல்லாமல் புத்திச் சொன்னதைப் போல போக சொல்லுகிறீரே! மிக்க நன்றி. ஆனால் நாங்கள் எப்பொழுது போக வேண்டும் அதற்குரிய தருணத்தைச் சொல்ல வேண்டும் என்றுக் கேட்டார்.

சிவபெருமான் நாராயண மூர்த்தியிடம் கேட்கின்றார் மைத்துணரே நாங்கள் பூவுலகில் போய் பிறப்பதற்குரிய தருணம் எப்போது அதை எங்களுக்கு உரைக்க வேண்டும் என்றுக் கேட்கின்றார். அப்போது நாராயண மூர்த்தி அவர்களிடம் சொல்லுகின்றார், நாம் எல்லோரும் ஒத்திருந்து உற்பனமாய் ஆராய்ந்து புத்தி போல் வாசகங்கள் பூத்தானமா எழுதி இந்த உலகில் எல்லோரும் அறியும் படியாக அனுப்ப வேண்டும். நாட்டு நருளறிய நடை ஜீவ செந்தறிய காட்டுமரம் அறிய கல்லப்பு தான் அறிய புற்பூடறிய பூமி தெய்வார் அறிய நற்பரிந்து பேய்கள் நடுங்கி மிக அறியச் சேடனறிய சிறுவாயு தான் அறிய மேகமறிய மேலோர்கள் தாமறிய பூதமறிய பொழுது சந்திரன் அறிய நட்சேத்திரமறிய நமனறிய கோளறிய பொய் சரியை கிரியை பெயர்நாலும் தான் அறிய வேதமறிய விளக்கு மறை அறிய வாதை அறிய மன்று பதினான்கு அறிய சங்கறிய முத்தறிய சகல மச்சமும் அறிய அங்கறிய நாம் படைத்த எல்லோரும் தான் அறிய எழுதி விடுவோம் காண் ஏத்தரிய புத்தி வைத்து பழுது வைத்தார் என்று பார் முழுதும் சொல்லாமல் நம் பெயரில் குற்றம் எள்ளளவும் இல்லாமல் பம்முதலாய் நாமும் பரிந்தெழுதி தான் விடுவோம்

என்று சிவபெருமானிடம் திருவாசகம் எழுதுவதைப் பற்றி எடுத்துரைக்கின்றார்.

கலி நீசர்கள் நம்பேரில் குற்றம் சொல்ல முடியாத அளவுக்கு நான் முதலில் எல்லோரும் அறியும் படியாக திருவாசகத்தை எழுதி அனுப்ப வேண்டும் என்று நாராயண மூர்த்தி சிவபெருமானிடம் கூறினார். உடனே சிவபெருமானும் சம்மதம் தெரிவித்தார். திருவாசகம் எழுத வேண்டும் என்று எல்லோரும் கயிலையை விட்டு வைகுண்டம் செல்லத் தீர்மானித்தார்கள். நாராயணமூர்த்தியும் சிவபெருமானும், கயிலையை சிறப்பாக மறை சாஸ்திரங்களால் அலங்கரித்த மறைய வரும், பார்வதி தேவியும், சரஸ்வதி தேவியும், லெட்சுமி தேவியும், முனிவர்களும், சங்கத்தார்களும், சாஸ்திரர்களும்,கின்னர்களும் சங்கத்துறைவோரும், பார்த்தீவனும், தெய்வ பாவாணர்களும், வானவரும், தேவர்களும் மற்றும் சித்தாதிகளும் , தானவர்களும், வேதத் தம்பூருகாரர்களும், சங்கம் வரையுள்ள தாண்டவர்களும், எங்கெங்கும் உள்ள இருள்சிகளையும் வரவழைத்து கொண்டு கயிலையை விட்டு எழுந்தருளி வைகுண்ட லோகம் வருகின்றார்கள். வைகுண்டலோகத்தில் வந்து கங்கை தீர்த்தம் ஆடி கிருஷ்ணருடைய பதியாகிய வைகுண்டத்தில் வந்திருந்து சிறப்பாக மேடை அமைக்கின்றார்கள்.

மேடைகளைச் சிறப்பாக அலங்கரித்து எங்கும் மனம் பரவச் செய்கின்றார்கள். பாவாணவர்கள் பாடல்களை பாடிச் சிறப்பிக்கின்றார்கள். எக்காளடம்மானம் எங்கும் முழங்கும்படியாகச் செய்கின்றார்கள். புராணகலைகளை மிகு மறையோர்கள் போற்றும் படியாகச் செய்தார்கள். ஆகமங்கள் போற்ற விட்டு ஆரம்பை யர்கள் கைக்காட்ட விட்டு சித்தர்கள் எல்லாம் புராண கவி ஓசையிட்டிருக்கின்றார்கள். தேவர் எல்லாம் முறையமிட்டு வாழ்த்து இருக்கின்றார்கள். சங்குத்தொனிகளிட்டு சகலோரம் போற்றி நிற்கின்றார்கள். இத்தனை நற்சிறப்பும் இதமாக அலங்கரித்து சரஸ்வதி தேவியை அங்கு வரவழைக்கிறார்கள்.

சரஸ்வதி தேவியை வரவழைத்தவுடனே உடனே சரஸ்வதி தேவியானவள் கங்கையில் நதியில் மூழ்கி கிரணப்பச்ச ஆடை உடுத்து சங்கையுடன் ஆபரணம் அழகாக அணிகின்றார்கள்.

காதுகளில் குவிந்த தங்கத்தோடுகளை அணிகின்றார்கள். வளையல்கள் அணிகின்றார்கள். மார்பில் பொற்றாவிடங்களை அணிந்து கொள்ளுகின்றார்கள். பச்சை நிற பவளமணி தண்டையை அணிந்து கொள்கின்றார்கள். மச்சமதில் மை எழுதி மகிழ்ந்த மூக்குத்தி அணிந்து தண்டரள மீதில் தங்க தகடணிந்து கொண்டை தனில் தேன் மலரை மிக சூடி பொற்சரிகைச் சேலை பெரிய ஏத்தாப்புமிட்டு தோழியர்களோடு அரம்பயர்கள் முன்னாடி வர அன்ன நடை நடந்து அனற்கொழுந்து இட்டார் போல் வன்னி அழகுடனே நாராயண மூர்த்தியின் முன்பு வந்து நிற்கின்றாள் அம்மை சரஸ்வதி தேவி. உடனே மறைய யோராகிய நாராயணமூர்த்தியும் சிவபெருமானும் சரஸ்வதி தேவியின் கோலத்தை பார்த்து மனதில் மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

இவ்வாறு மகிழ்ந்து இருக்கின்ற அந்த வேளையில் சிவபெருமான் சரஸ்வதி தேவியை பார்த்து கூறுகின்றார் எப்படி என்றால் வன்னத் திருவடியே! மறையோனின் ஓவியமே! அன்ன மடமாதே அரசுக்கு உகந்தவளே! கருத்துடைய சோதி கவியுடையீரித்தனையும் உன்னை இங்கு வரவழைத்ததன் நோக்கத்தைச் சொல்லுகிறேன் என்று எடுத்துக் கூறுகின்றார்.

நாட்டில் கலிநீசன் நன்றியறியாமல் பிறந்து அவன் நாட்டில் உள்ள நல்ல நீதங்களை எல்லாம் அழித்துவிட்டான். இந்த உலகம் எல்லாம் உண்மை நிலையான மெய்ஞானத்தை மறந்து தடுமாறி நிற்கின்றது. அறியாமையுடன் பிறந்து குருநீதியைக் கெடுத்து பல பாவங்களைச் செய்து விட்டான். மக்கள் உண்மையாக அறிந்து கொள்ள வேண்டிய குரு நீதியான மெய்ஞானம் இல்லாமல் இருக்கிறது. இப்படி நம்மை நினையாது (இறைவனை) கூட பாவம் இல்லை. ஆனால் செம்மையுள்ள சான்றோர் மக்களை அவன் செய்கின்ற பாவம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தெய்வப்பிறவி அல்லோ திசைவென்ற சான்றோர்கள். சான்றோர் மக்களின் மெய் வரம்பை எல்லாம் மிகக்கெடுத்து விட்டான். சான்றோர்கள் படுகின்ற துன்பப்பத்தைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியவில்லை. கற்பகலா பெண்களுடைய கற்புக்கு அதாவது ஒழுக்கமும், வைராக்கியமும், ஒருமை நினைவுடைய இறைவனே தஞ்சம் என்று வாழும் சான்றோர் மக்களுக்காக

இரங்காதிருந்தால் அவர்கள் வேதனைப்படுவார்கள் . எளியவர்களை வலியவர்கள் வேதனைப் படுத்துகிறார்கள். அதைக் கேட்பதற்கு இந்த கலியுகத்தில் யாரும் இல்லை. அவர்களுடைய துன்பத்தை போக்குவதற்காக நாம் இப்போது இரங்க வேண்டும். காரணம் நாங்கள் நேர்மை ஒழுங்கோடு வாழ்ந்தும் எங்களுக்கு யாரும் உதவி செய்யவில்லையே என்று அவர்கள் மனம் வருந்தினால் அதை தாங்கிக்கொள்ள முடியாது. ஆகவே அங்கு அவர்களுக்கு உதவிச் செய்வதற்காக இப்போது அந்த பூவுலகில் செல்வதற்குரியத் தருணம் வந்திருக்கின்றது.

மேலும் இறை நாமத்தைச் சொல்லாதே என்றுத் தடுத்து அடிக்கிறான். ஆனாலும் பாரமில்லை. அநியாயம் தாங்க முடியவில்லை. ஒழுக்க நீதி நெறிமுறைகளை கெடுக்கிறான். வேதாந்தத் தத்துவத்தை விளக்கும் வேத ஆகமங்களின் மெய்ப்பொருளை மறைத்து அவற்றை சூதும், வாதும், பொய்யும் புனைந்து உண்மையை மறைத்து பொய் புரட்டு வஞ்சகம் நிறைந்த தன்னலம் பொருந்திய ஒரு வேதத்தை உருவாக்கி மக்களை அஞ்ஞான இருளில் மூழ்கடிக்கிறான் அந்த மாபாவி. இதனால் மக்களிடம் ஒற்றுமை சிதைந்து உண்மை உணர்விழந்து கீழான நிலையில் விலங்குகளை விட கேவலமான நிலைக்கு ஆளாகி இருக்கின்றார்கள். இந்நிலை கண்டு தவசியர்கள் எல்லாம் அருள் தாகத்தால் தவிக்கின்றார்கள். அதோடு பேய் பிசாசுகள் அந்த தோசப் பயலோடு சேர்ந்து கொண்டு கொடுக்க ஒன்றும் இல்லாத ஏழை மக்களைக் கொடுமைப்படுத்திக் கொல்லுகின்றன. வையகத்தில் நீதி நெறிமுறைகளை எல்லாம் வரம்புத் தப்பி போய்விட்டன.

நாங்கள் எல்லோரும் ஒன்றாக அவனில் போய் இருந்து மானமுறை சோதித்து மனு இடுக்கம் (மக்களின் துன்பங்களை) தீர்த்து ஓட்டுவதை ஓட்டி உறைப்பதை உறைப்பித்து நாட்டை ஒரு சொல்லுக்குள் நலமாக வாழ்வைக்க செல்லும் தருணம் இப்போது வந்திருக்கிறது. அதற்கு முன்னால் நம் பேரில் குற்றம் நகரத்தளவு இல்லாமல் அந்த நீசனுக்கு புத்தி சொல்ல வேண்டிய கடமை இருக்கின்றது. ஆகவே அவனுக்கு புத்தி சொல்லுகின்ற வகையிலே பதினான்கு லோகங்களும் அறியும் படியாக திருவாசகம் ஒன்றை எழுதி அனுப்ப வேண்டும். அதற்காகவே உன்னை இங்கே அழைத்தோம் என்றார்.

திருவாசகம் எழுதுவதற்காக உன்னை அழைத்தோம் என்று கூறியவுடனே சரஸ்வதி தேவி கூறுகின்றாள், இப்போது இவ்வகைக்கு நான் என்ன செய்ய முடியும். எல்லாம் கிருபை எம்பரனே உமது செயலல்லவா? எந்த செயல் நடைபெற்றாலும் அது உன்னுடைய செயலாக அல்லவா இருக்கிறது. நீங்கள் இல்லாமல் எந்த செயலும் நடைப்பெறாது அல்லவா? ஆட்டுவதும் நீயல்லவோ ஆடுவானும் நீயல்லவோ, ஓட்டுவதும் நீயல்லவோ ஓடுவானோ நீயல்லவோ, சொல்வதும் நீயல்லவோ, சொல்ல வைப்பானும் நீயல்லவோ , அல்லும் பகலும் நீயல்லவோ அழியாதவரும் நீயல்லவோ எல்லாம் உமது கிருபையால் அல்லவா நடக்கிறது. என்னால் எதுவும் நடக்கவில்லையே! அப்படி இருக்க என்னிடம் இந்த திருவாசகத்தை நீங்கள் எழுதுவதற்கு உரைப்பதற்குரிய காரணம் என்ன என்று நாராயண மூர்த்தியினுடைய பாதத்தை பணிந்து கூறுகின்றாள் அம்மை சரஸ்வதி தேவி.

அப்போது நாராயண மூர்த்தி கூறுகின்றார் நீயுரைக்க நான் எழுதி நீணிலத்தில் விட்டது ண்றால் வாயுரைக்கக்கூடாது மற்றவர்கள் யாராலும் அதாவது யாராலும் எதிர்த்து பேச முடியாது. ஆயக்கலைகளுக்கு அதிபதியாக இருக்கின்ற உன்னால் இந்த திருவாசகம் எழுதப்பட்டு இந்த உலகம் அறியும் படியாக செய்தோமேயானால் யாரும் இது குறை சொல்ல முடியாது. அப்படி குறைச் சொல்பவர்கள் வன்னரகத்திற்கு செல்வார்கள். இறைவனை கண்டு கொள்ள மாட்டார்கள். ஆகவே உன்னுடைய சொல்லும் அரி அச்சரமும் காண்பித்தால் கலி நீசர் கள் திருந்துவார்களா பார்ப்போம் என்று சரஸ்வதி தேவியிடம் திருவாசகம் எழுதப் பணிகின்றார்.

கலைவாணியின் திருவாக்கில் வெளிபட்டு அய்யா நாராயணரல் எழுதப்படும் திருவாசகத்திற்கு, உண்மைக்கு புறம்பாக பொய் விளக்கம் என்று அறியாமையால் கூறும் அஞ்ஞானிகள் இந்த வாசகத்தின் உண்மைத்தன்மை புரியாமல் தானாகவே அழிந்து போவார்கள். மேலும் இந்த உலக வாழ்வை தாண்டி பேரின்ப வாழ்வுக்குரிய வழி இங்குக் கூறப்பட்டுள்ளது என்று தன்னுடைய அகத்தில் அதனுடைய உட்பொருளை உணர்ந்து கொண்டவர்கள் இறைவனை காண்பார்கள். பரம்பொருளுடைய அருளைப் பெற்று

மரணம் இல்லாத பேரின்ப வாழ்வு பெறுவார்கள் என்று இந்த வாசகத்தின் மூலம் அய்யா நமக்குச் சொல்லுகின்றார்.

கலியுகத்தின் கடவுளாம் அய்யா வைகுண்டருடைய அவதாரமானது மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியாக வந்திருக்கின்ற அவதாரம் அவதாரமாகும் அய்யா வைகுண்டரை வழிப்பட்டால் நாம் மூர்த்திகளையும் வழிபட்டதற்குச் சமமாக இருக்கும் . இதையே அய்யா இங்கு ஒரு திரு விபூதி யுண்டை ஒரு இரு மிச்சம் ஆகும் ஒரு என்றுக் கூறி இருக்கின்றார். அதாவது திரு என்பது இறைவன் . மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியாக அவதரித்திருக்கின்ற வைகுண்டராகிய ஜோதி சொரூபனை வழிபட்டால் மும்மூர்த்திகளையும் வழிப்பட்டதற்குச் சமமாகும்.

ஒரு இரு மிச்சம் ஆகுமே அதாவது இரண்டு இறைச் சக்தியாகிய சிவன் பிரம்மா என்ற இரண்டு நாமங்களோடு வழிப்படுகின்ற வழிபாட்டு முறை நமக்கு மிச்சமாகும். மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியாக வைகுண்டம் இருக்கின்றக் காரணத்தினால் தனித்தனியாக பிரித்து நாம் இறைவனை வழிபட வேண்டிய அவசியம் இல்லை. அந்த ஒரு மூர்த்தியாகிய வைகுண்டத்தை நம்முடைய உள்ளத்தில் கண்டுக் கொள்ள வேண்டும் என்றால் நம்முடைய மனமானது உறுதித் தன்மையோடு இருக்க வேண்டும். அதை இங்கே ஒரு தேங்காயினுடைய உறுதி தன்மையோடு எம்பெருமான் ஒப்புமை இட்டுக் கூறி இருக்கின்றார்.

அதாவது தேங்காயின் மேல் தோடானது நாரால் பின்னிப் பிணைந்து இருக்கும். அதுபோல கலியுகத்தில் நாம் வாழும் வாழ்க்கையும் இன்பத்துன்பத்துடன் இல்லற வாழ்வின் பற்றினால் பின்னி பிணைந்து இருக்கிறது. இந்த இல்லற வாழ்வைத் தவமாக ஏற்றுப் பற்றை விலக்கி வாழ்ந்தால், தேங்காயின்னுடைய வெளித்தோலை விலக்குகின்றப் போது எப்படி உறுதியான ஓடுடைய தேங்காய் கிடைக்கிறதோ அதுப்போல நம்மைப் பின்னிப் பிணைந்து இருக்கின்ற உலக இன்பமாகிய அந்தப் பற்றை விலக்குகின்றப் போது நம்முடைய மனம் உறுதி படும்.

அப்படி மன உறுதி வந்து விட்டால் உள்ளத்தில் தூய்மை வந்துவிடும். தேங்காய் இந்த உறுதியான ஒட்டிற்க்குள் எப்படி ஒரு

தூய்மையான தேங்காய் பருப்பைப் பார்க்க முடியுமோ அதுபோல உறுதியான உள்ளத்தில் இறைவனை நாம் காண முடியும் என்பதை ஒருதிடத் தேங்காய் போலும் ஒரு மனதிரணைப் போட்டு என்பதன் மூலம் விளக்கி இருக்கின்றார் .மேலும் கருதிட வெற்றிலைப் பாக்கு கனிந்திடுவோர்க்கு மூவர் என்று கூறியிருப்பதன் மூலம் இறைவனை காண்பதற்கு ஆடம்பரப் பூஜைகள் செய்து நாம் இறைவனை வழிபட வேண்டிய அவசியம் இல்லை.

நாம் எளிய வழிபாட்டின் மூலம் எளிய முறையிலே உண்மையான அன்போடு இறைவனை நாம் வழிப்பட்டாலே இறைவன் நமக்கு அருள் பாலிப்பார். தூய்மையான உள்ளத்தோடு எளிய முறையில் வெற்றிலை பாக்கு மட்டும் வைத்து நாம் இறைவனை வழிபடுகின்றப் போது மும்மூர்த்திகளும் நமக்கு அருள் பாலிப்பதாகவும் கலியுகத்தில் எளிய வழிப்பாட்டு முறைகளாலும் தூய்மையான உள்ளத்தாலும் மட்டுமே இறைவனை உணர்ந்துக் கொள்ள முடியும் அதற்குரிய மெய்யான வழி இதுவாகும் என்று எளிய ஒரு வழிபாட்டு முறையை இங்கே எடுத்துக்காட்டி இருக்கின்றார்.

இதனை சாதாரண மனுமொழி என்றுக் கருதி இதில் என்ன இருக்கின்றது இவை எல்லாம் வீணான வார்த்தைகள் என்றும் இவை உண்மைக்கு புறம்பானது என்றும் ஆணவத்தோடு பேசியவர்களை எல்லாம் ருத்ர காளியினால் அழிவுக்கு உள்ளாவார்கள் என்றுக் கூறியிருக்கிறார்.

பேரறிவுடைய (ஞானிகள்) யானை முதல் சிற்றறிவுடைய சிற்றுயிர்கள்(எறும்புகள்) முதல் எண்பத்து நான்கு லட்சம் யோனி பேத உயிர்களும், இவ்வுலக வாழ்வை பெரிதென நினைக்கும் புற அறிவுடையவர்கள், அக ஞானமுடையவர்கள், மற்றும் சூரிய சந்திரர்கள், ஆகாயம் முதலான பஞ்சபூதங்கள், தாவரங்கள் , மலைகள் கடலில் வாழும் மிகக் குறைந்த அறிவுடைய உயிர்கள், மேல் உலகம் கீழ் உலகம் இவற்றில் உள்ள தேவர்கள், பூமியில் வாழும் ஆணவம் கன்மம் மாயையுடைய சகலர், ஆணவமும் கன்மும் உடைய பிரளயாகலர்கள், ஆணவம் மட்டுமுடைய விஞ்ஞானகலர்கள் ஆகிய மூவரும் ,தேச தேவேந்திரனும், முனிவர்கள், வேத சன்னியாசிகள், சாஸ்திரிகள் ஆகிய

அனைவரும் அறையும்படியாக பூலோக உயிர்கள் அனைத்துக்கும் படியளக்கும் அருள்திரு கரங்களால் எழுதப்படும் வாசகம் இது என்று அறியவும்.

பரபிரம்மம் என்பது எந்த மாயைக்கும் கட்டுப்படாத சத்திய சொரூபமாகும். அந்த பரம்பொருளே இப்போது வைகுண்ட மாக அவதாரம் எடுத்து வர இருக்கிறார். வாலிபப் பிள்ளையாக எப்போதும் போல் எந்த நிலை மாற்றமும் இல்லாமல் என்றும் இருக்கின்ற அந்த நிலையை எடுத்து உரைக்கின்றார் . வைகுண்ட அவதாரம் எடுத்த பூலோகத்தில் வந்த உடனே ஆசாரம் என்று சொல்லக்கூடிய பேத புத்தியால் சாதி வெறி மதவெறி என்றுக் கொடுமைகளை வளர்ப்பவர்களும், அழுக்கான புத்தி என்றுச் சொல்லக்கூடிய கலிமாய எண்ணங்களை உடையவர்களும் அவரவர் ஆணவத்தால் அழிந்துப் போவார்கள்.

அதன் பிறகு உலகில் பதினெட்டு துர்க்கை அம்மாள் பிறந்து அதாவது இறைவனிடமிருந்து வெளிப்படுகின்ற ருத்ர சக்தியாகிய அந்த துர்கா தேவியானவள் பூலோகத்தில் இயற்கை சீற்றங்களால் பதினெட்டு வகையான பேரழிவுகளை உண்டாக்குவாள். அதிலே பல துச்சனர்களெல்லாம் மாண்டுப் போவார்கள்.

அதன் பிறகுப் பக்தியாய் இருக்கிற பேர்களுக்கும் பக்தியை வரமாக கேட்பவர்களுக்கும், பிள்ளை இல்லாமல் பிள்ளை வரம் கேட்கிறபேர்களுக்கும், கண்ணில்லாமல் கண் வேண்டும் என்று கேட்கிறபேர்களுக்கும், செல்வம் இல்லாமல் செல்வம் வேண்டிக் கேட்கிறபேர்களுக்கும் பராபரமூர்த்தியும் சாம்பசிவ மூர்த்தியும் ஶ்ரீ ராம சேரும் தீட்சையாகி திருமனதிரங்கிப் பக்தி காரணங்களைச் சோதித்துப் பகர்ந்து அவரவர் கேட்ட வரங்களைக் கொடுப்பார்கள்.

இன்னும் சிறிது நாளையிலேயே பக்தியை வரமாகக் கேட்டவர்கள் அந்த பக்தியினால் முக்தி நிலையை அடைவார்கள். இயற்கையின் கொடை நாளுக்கு நாள் குறைந்து விடும். உலகியல் அறிவாகிய விஞ்ஞான அறிவு வளர்ச்சியடைந்து புதிய புதிய கண்டுபிடிப்புகள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வரும். ஆகையால் தீமைகள் அதிகமாகும். மக்களின் மனதில் ஆணவம்

என்ற இருள் சூழ்ந்து அகப் பகைகள் மனதிலே வளர்ந்து பந்தப் பாசங்களுக்கு அடிமையாகி மீண்டும் மீண்டும் இம்மண்ணில் பிறந்து அலைந்து அலைந்து போவார்கள்.

தன் உடல் பலத்தால் ஆணவம் கொண்டவன் வாலி. தெய்வ பலத்தால் ஆணவம் கொண்டவன் சுக்ரீவன். இப்படிப்பட்டவர்களும் அவர்களின் ஆணவத்தினாலே சக்தி இழந்துப்போவார்கள் . மேலும் தன்னை உணர்ந்து பற்றற்ற வாழ்வை வாழும் மெய்யடியார்கள் மேன்மை பெறுவார்கள் என்பதாகும். மேலும் அறிவியல் வளர்ச்சியால் உருவாக்கப்படும் நவீன இயந்திரங்களின் சக்தியின் காரணமாகத் தற்போது நடைமுறையில் இருக்கும் வாச்சி, கொழு, கலப்பை போன்ற அனைத்து உபகரணங்களும் பலனற்று போய்விடும் என்பதாகும்.

இங்கே துலுக்கர் என்று அய்யா குறிப்பிட்டு அசுரக் குணம் கொண்ட பயங்கரவாதிகளையும் , வன்முறையாளர்களையும் பற்றிக் கூறுகின்றார். அதாவது தானும் தன் கூட்டமும் வாழ வேண்டும் என்றத் துடிப்பும் வெறியும் வைராக்கியம் கொண்டு பிறர் மீது ஆதிக்கம் செலுத்துவதும், அவர்களுக்கு வேண்டாதவர்களை ஒடுக்குவதும், அப்பாவி மக்களை அழிப்பதுமாகியக் கொடும் பாதகச் செயல்களை வீடுகளிலும் சரி ஊரிலும் சரி நாட்டிலும் சரிச் செய்கின்றவர்களை அய்யா துலுக்கர்கள் என்று சொல்லுகின்றார். தீய எண்ணங்களை மனதில் கொண்டு பிறரை அழிக்க வேண்டும் என்று எண்ணுபவர்களை அழிப்பதற்காக துர்க்கை அம்மாளை அனுப்பி இருக்கிறார். பிறரை ஆயுதத்தை பயன்படுத்தி அழிக்க வேண்டும் என்று எண்ணி யார் செயல்படுகிறார்களோ அவர்கள் தாங்கள் பயன்படுத்துகின்ற வெடிகுண்டுகள் வகைகள் அணு ஆயுதங்கள் போர்க்கருவிகள் ஆகியவற்றால் அழிந்து போவார்கள். மேலும் கொள்ளை நோய்கள், பூகம்பம், புயல், பெருமழை, பெருவெள்ளம், ஆழிப்பேரலை ஆகியவற்றாலும் அழிவுக்கு வழிவகுப்பதற்கு துர்க்கை அம்மாளை அனுப்பி இருக்கிறோம் என்று கூறுகின்றார். பயங்கரவாதம் ஒருநாளும் நன்மை தராது அது தீமையை தரும் என்பதை இங்கே எடுத்துரைக்கிறார். இப்போது உலகில் இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் பேரழிவுக்கெல்லாம் மனிதனுடைய இந்த தீயக்குணங்களே காரணம் என்பதை எடுத்துரைக்கிறார்.

பிராமணர்கள் சுகத்துடன் வாழ்வார்கள் என்பது பரபிரம்மத்தை கண்டவர்கள் என்றும் சிறப்பாக வாழ்வார்கள் என்றும் அப்படி காண்பதற்கு துணை புரிபவர்களும் அவர்களுடைய வாழ்வும் சிறப்பாக அமையும் என்பதை இங்கே எடுத்துரைக்கிறார்.

புவியில் முகத்து லிங்கும் இல்லாதப் பேருக்கு பிரம்மதேவரை அனுப்பி இருக்கிறோம் என்று குறிப்பிடுவது, யார் யார் இறைவனை பற்றிய சிந்தனை இல்லாமல் இருக்கின்றார்களோ அவர்களுக்கு இறை சிந்தனை ஊட்டுவதற்குரிய வழிகளை காட்டுவதற்குரிய ஏற்பாடுகளை இங்கு செய்யப்படும் என்பதும், அப்படி செய்யப்பட்ட பிறகும் அந்த பக்தி நிலையில் அவர்கள் இறைவனை அடைவதற்கு முயற்சி செய்கிறார்களா இல்லை இந்த பூலோக சுகமே பெரிது என்று வாழ்கிறார்களா என்பதை பலச் சோதனைகள் செய்து பார்க்கப்படும். வெற்றி பெற்றவர்கள் பரபிரம்மத்தை கண்டுக் கொள்வார்கள் என்றும், இறை ஞானம் அடைய வேண்டும் என்ற எண்ணம் இல்லாத அறிவிலிகளைப் புது கிராமத்தில் வாழுகின்ற தேவதைக்குப் பூஜை பண்ணிப் போடுவதற்காக அதாவது நரகத்தில் தள்ளுவதற்காகவும் உள்ள வழிமுறைகள் கையாளப்படும் என்பதை எடுத்துரைக்கிறார்.

காவேரி ஆற்றுக்குள்ளே மூன்று பொதி மாங்கல்யம் கவிழ்ந்த அடைய வேண்டுமென்றும் என்றுக் குறிப்பிட்டு இருப்பது கீழான எண்ணம் கொண்ட பெண்களுடைய கழுத்தில் கட்டப்படும் தாலியானது அவர்களின் இழிவான குணத்தால் புனிதம் கெட்டுவிடும் என்பதாகும்.

காசினியில் ஒரு ஏழு பெண் பிள்ளைகள் ஒரு ஆண் பிள்ளையை அடர்ந்த பிடிப்பார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது சப்த மாதரை ஆகும். அதாவது சப்த மாதார்கள் பரபிரம்மமாக இருக்கும் வைகுண்டரை ஜீவ பிரமாக்கியத்தின் மூலம் ஐக்கிய படுத்துகின்ற நிகழ்ச்சியை எடுத்துக் கூறுகின்றார்.

அறுத்த மாங்கல்யத்தை மிகுத்து கட்டுவார்கள் என்று இங்கே குறிப்பிட்டு இருப்பது இந்த பூவுலகில் பிறப்பெடுத்த ஜீவாத்மாக்கள் ஒவ்வொரு பிறவியிலும் பரம்மாத்மாவோடு ஐக்கியமாக வேண்டும் என்ற நோக்கோடு வாழ வேண்டும்.

அப்படி வாழாமல் உலக இன்பங்களான சிற்றின்பத்திற்கு ஆசைப்பட்டு இந்த உலக வாழ்க்கையோடு எப்போதும் கடைசி வரை தொடர்புடையவர்களாக இருக்கின்ற போது பரமாத்மாவோடு ஐக்கியமாக வேண்டும் என்ற அந்த உயர்ந்த நிலையை அறுக்கப்பட்டு மீண்டும் இந்த உலகில் பிறப்பெடுக்கின்றார்கள் என்பதை இங்கே எடுத்துக்காட்டுகின்றார்.

மேலும் கேள்வி கேட்காமல் இருக்கின்ற பேர்களும் துச்சனர்களாக இருக்கின்ற பேர்களும் தம்மில் ஒருவருக்கொருவர் சண்டை போட்டும் மாண்டு போவார்கள் என்றுக் கூறியிருப்பது கேள்வி கேளாமல் இருப்பவர்கள் என்பது நான் யார்? என்னுடைய பிறவியினுடைய நோக்கம் என்ன என்பதை அறிந்து கொள்ளாதவர்கள் ஆகும். அய்யா சொல்வார் ,"**தன்னை அறிந்தால் தலைவனை நீ அறிவாய் என் மகனே**" என்று தான் யார் என்ற பக்குவ நிலைக்கு வர முயற்சிக்காதவர்கள் மற்றும் துஷ்ட குணம் உடையவர்கள் மற்றும் இறைவனை வழிபாடு செய்கிறேன் என்ற நோக்கோடு இறைவனிடம் ஏதாவது ஒன்றை எதிர்பார்த்து வழிபாடு செய்கின்றவர்கள் வியாபார நோக்கத்தோடு இறைவனிடம் ஒன்றை பெற வேண்டும் என்பதற்காக இறை வழிபாடு செய்கிறேன் என்று லாப நோக்கோடு வழிபடுபவர்கள் இவர்களெல்லாம் ஒருவருக்கொருவர் சண்டை போட்டு மாண்டு போவார்கள் என்பதை எடுத்துக் கூறுகிறார்.

யார் யாரெல்லாம் தன் உள்ளே இறைவனை கண்டு கொண்டார்களோ அவர்கள் என்றும் புண்ணிய புருஷர்களாக இறைவனை தரிசனம் பண்ணிக்கொண்டு எல்லாவித சர்வ பாக்கியங்களையும் பெற்றுச் சிறப்பாக வாழ்வார்கள். தர்மயுக வாழ்வை அடைவார்கள் என்பதை இங்கே கூறுகின்றார்.

மேலும் மூன்று லோகத்திற்கு ஒரு வால் வெள்ளி உண்டாக்கி நெருப்பு போட்டுக் கொண்டு வருகிறோம் என்பது உலகில் அழிவுகள் வருகின்ற விபரத்தை எடுத்துக் கூறுகின்றார். மக்களின் வாழ்வியல் சுழலினால் உலகில் அழிவுகள் அதிகமாக இருக்கும். இதனால் மக்களுடைய வாழ்வாரம் பாதிக்கப்பட்டு அதனால் அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை

போட்டுக்கொண்டு அடிப்படை வசதிகள் கூட நிறைவேற்ற முடியாமல் சண்டை போட்டுக் கொண்டு பகைத்துக் கொள்வார்கள். ( போர்நடக்கும் நாடுகள் மற்றும் இயற்கை பேரிடர்களின் போது அடிப்படை வசதிகள் கூடக் கிடைக்காமல் அவதி படும் நிலை) அதனால் அவர்கள் ஒருவருக்கொருவர் கொள்ளை அடித்து மாண்டு போவார்கள் என்பதை இங்கு எடுத்துக் கூறுகின்றார்.

நான் அதற்கு மேல் பூலோக கலியுக இராச்சியத்தில் பண்டார வேசமாய் வருகிறோம் என்பது வைகுண்ட அவதாரத்தை இங்கே குறிப்பிடுக்கிறார். வைகுண்டர் பண்டாரமாக வருகின்றப் போது தீமைகள் எல்லாம் அழிய துவங்கி விடும் என்பதை மண்ணெல்லாம் கிடுகிடு என்று ஆடும் என்றும் வானமும் மலையும் முழங்கி திடுக்கிடும் என்றுக் கூறினார். அதாவது வைகுண்டர் பண்டாரமாக வந்திருந்து மக்களுக்கு கலியுகத்தில் எப்படி வாழ வேண்டும் என்ற வாழ்வியலை எடுத்துரைத்துள்ளார். அவர் கூறிய அந்த வழிமுறைகளை ஏற்று நடக்காதவர்கள் எல்லாம் அழிந்து போவார்கள். அய்யா வகுத்த வழிமுறையில் வாழ்ந்தவர்கள் புண்ணியவான்கள். அவர் நடந்தவர்கள் சிறப்பான வாழ்வை அடைவார்கள். இதையே போன போவர்கள் போக இருக்கிற பேர்கள் புண்ணிய புருஷர்களாக இருப்பார்கள் என்பதை இங்கே நமக்கு எடுத்துரைக்கின்றார்

மந்திர தந்திர வைத்தியங்கள் எல்லாம் மறைந்து போய்விடும் வாதை பேய்கள் எல்லாம் வட கைலாசத்தில் போய் சட்டுத் தீர்ந்து போவார்கள் என்பது மாந்திரீகமும் அது சம்பந்தமான வைத்தியங்களும் மறைந்து போகும் என்றும் மாந்திரீகத்துக்கு துணை நிற்கின்ற துஷ்ட தேவதைகள் பிசாசுகள் எல்லாம் அழிந்து போகும். அவர்களுடைய சக்தி இல்லாமல் போய்விடும் என்பதை இங்கு எடுத்துக் கூறுகின்றார்.

ஏழு சமுத்திரத்திலே மூன்று சமுத்திரம் நீர் உள்வாங்கி போகும். ஒரு சேர்வை விபூதி ஆறு சக்கரத்திற்கு விற்கவும் ஒரு லிங்கம் மூன்று வராகனுக்கு விற்கவும் ஒரு கழஞ்சி சலம் எடுக்கவும் இரண்டு நாழிகை வழிக்கு ஒரு தண்ணீர் பந்தலும் மூன்று நாழிகை வழிக்கு ஒரு தர்மசாலையும் நன்றாய் முடியும். தர்மம்

கொடுக்கின்ற பேர்கள் உண்டு. தர்மம் வாங்குகிற பேர்கள் இல்லை அதாவது கலியுகத்தில் ஞான உபதேசம் செய்பவர்கள் இருப்பார்கள் . ஆனால் அதைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதி உடையவர்களாக மக்கள் இருக்க மாட்டார்கள். வெயிலாள் மடக்கொடியால் வயிற்றிலே நாடும் ஒரு மதலைப் பிறந்து பத்து வருஷம் ஆச்சு நாங்கள் மகா அருணாச்சலத்தில் வாலிப பிள்ளையாய் இருக்கிறோம்.

வெயிலால் மடக்கொடியாள் என்பது பிரம்மமும் சக்தியும் ஒன்றே என்ற ஒரு நிலை. பிரம்மத்தோடு ஒன்றி இருக்கும் மகா லோகமாதாவாகிய மகாலட்சுமியை குறிக்கிறது. கோடி சூரிய பிரகாச மகர ஜோதியாய் விளங்கும் அந்த மகாலட்சுமியின் மகர உந்தியில் உலக உயிர்களை உய்விப்பதற்காக தோணியாக ஒரு மதலை தோன்றி அவர்களை நாடி வருகிறது. அது நவ பேதங்களை எல்லாம் கடந்து பத்தாவது நிலையில் பண்டு முறை போல் பரபிரம்மமாக இருக்கின்றது. அதாவது இந்த உலகம் தோன்றுவதற்கு முன்பு பரபிரம்மமாக இருந்த இறைசக்தியானது உலக இயக்கச் சுழற்சியின் பொருட்டு பல நாமங்களில் பிரிந்து இருந்தது. மீண்டும் அதே பாபிரம்ம நிலையில் எந்த மாற்றமும் இல்லாமல் பரபிரம்மமாக இருக்கின்ற வைகுண்ட அவதாரத்தை இங்கே குறிப்பிடுக்கிறார். இதையே நாங்களும் அந்த மகாபாரமாகிய மகா அருணாச்சலத்தில் அவருக்குள்ளாகி ஒரு வாலிபப் பிள்ளையாக அதாவது பரபிரம்மமாக இருக்கின்றோம் என்ற நிலையை எடுத்துக் கூறுகின்றார்.

வெயிலாள் மடக்கொடியாள் வயிற்றில் பிறந்த அந்த வாலிபப் பிள்ளை என்ன சொல்கிறார் என்றால் யாருடைய மாயைக்கும் கட்டுப்படாத வீரமும் பெற்று தருமராசாவாய் இருந்து யுகா யுகங்கள் தோறும் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைப்படுத்திக் கொண்டிருக்கும் சத்திய சொரூபனான விதி நாராயணர் இங்கே வந்து எங்குமாய் எல்லாமாய் இருந்து மகாபார நாராயணரே உலக உயிர்களின் மீது கொண்ட கருணையால் மக்களுக்கு தர்ம யுக வாழ்வை அளிப்பதற்காக ஸ்ரீ பண்டாரமாக பூவுலகில் எழுந்தருளி பூமியில் உள்ள ஜீவாத்மாகளைக் கர்ம வினையில் இருந்து விடுவித்து இறைவன் ஒருவனே இறைவனை பிரிப்பது மாயை என்பதை தன்னுடைய தவத்தால் உணர வைத்து ஜீவ பிரம்ம ஐக்கியத்தை

அருளுகின்றார். இதனால் ஜீவாத்மாவாகிய உலக மக்களைப் பற்றி இருந்த அக அழுக்குகள் எல்லாம் அழிந்து போகும் என்றுக் கூறி இருக்கிறார் . இவ்வாறு அக அழுக்கான காமம், குரோதம், தோசம், மதம், மாச்சரியம், மோகம் ஆகியவற்றிலிருந்து விடுப்பட்டவர்களின் ஆத்மாவே முக்தி பெறத் தகுதி உடையது. அவர்களுக்கு வேண்டிய பாக்கியத்தைக் கொடுப்போம் 998 - ல் என்பதாகும்.

அய்யா அருளி இருக்கின்ற ஆகமத்தின் நெறிப்படி வாழ்ந்து வருபவர்களுக்கு எல்லாவித பாக்கியங்களையும் கொடுப்போம். அவர்கள் தர்மயுக வாழ்வை பெறுவார்கள். மேலும் எப்பொழுதும் இறை சிந்தனையோடு வாழ்பவர்கள் பிறவி என்றப் பிணியில் இருந்து விடுபட்டு பேரின்ப வாழ்வை பெறுவார்கள். மேலும் யார் யாரெல்லாம் ஆகமத்தில் கூறப்பட்டுள்ளக் கருத்துகளின் தன்மை யை உணர்ந்து அதை உண்மை என்று நம்பி தங்களுடைய வாழ்க்கையில் பின்பற்றுபவர்கள் வாக்கிய வைகுண்ட வீடாகிய தர்ம யுக வாழ்வை பெற்றுச் சிறப்புடன் வாழ்வார்கள் என்பதாகும்.

நாம் வாழ்ந்து கொண்டிருப்பதோ கலிமாய உலகில். ஆகையால் கலிமாய எண்ணங்கள் நம்மை சூழ்ந்து நம்முடைய மனதை எப்போதும் மாற்றமடையச் செய்து கொண்டே இருக்கும். இதிலிருந்து நாம் விடுபட வேண்டும் என்றால் தொடர்ந்து அய்யாவினுடைய அறக் கருத்துக்களை நாம் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அப்போது கலிமாய எண்ணங்கள் நம்முடைய மனதில் இருந்து விலகி விடும். எப்படி அழுக்கை நாம் தண்ணீரால் துவைத்து நீக்குகின்றோமோ அதுபோல தீய அழுக்குகள் நம்மிடம் சேர சேர அது நம்மை தூய்மைப்படுத்திக் கொண்டே இருக்கும். ஆகவே நம்மிடம் பாவம் என்பது சேராது. இந்த உண்மையை நாம் தெரிந்துக் கொண்டு ஆகமகருத்துகளைத் துணிவோடு நாம் கேட்டுக் கொண்டே இருந்தோமேயானால் இந்த பிறவிப் பிணியில் இருந்து விடுபட்டு விடலாம் என்பதை இங்கே எடுத்துரைக்கிறார்.

ஆகம கருத்துக்களை வாசித்தவர்கள் கேட்டவர்கள் இதை மனதில் உணர்ந்து அறிந்து கற்றுக்கொண்டு அதன்படி வாழ்ந்தவர்கள், அய்யா கூறுகின்ற நெறிப்படியே வாழ்ந்து

அய்யாவை அடைய வேண்டும் என்று அதன் முறைப்படி வாழ்ந்து அந்த வழியை பின்பற்றியவர்கள் இவர்கள் எல்லோரும் இறைவனுடைய பாதாரமாகிய தர்மயுக வாழ்வைப் பெறுவார்கள். அது மட்டுமல்ல இந்த தேசத்தில் என்னென்ன சிறப்புகள் இருக்கின்றதோ அத்தனை சிறப்புகளையும் பெற்று சிறப்புடன் இருந்து வாழ்வார்கள் என்று அய்யா கூறுகின்றார்.

தெட்சணாப் பூமியில் தேசபர சோதனைக்கு நிச்சியமாக நாம் வருவோம் என்று தொள்ளாயிரத்து தொண்ணூற்று எட்டில் [998] திருவாசகத்தின் மூலம் வெளிப்படுத்தி அதன் பிறகு ஆயிரத்து எட்டாம் [1008 –ம்] ஆண்டு ஒரு திருக்கூட்டமாக அனைத்து திருவருள் சக்திகளையும் உள்ளடக்கிய பரப்பிரம்மமாக வந்து இந்த அகிலத்திரட்டு அம்மானையில் வருத்தி வெளிப்படுத்தினோம் என்பதாகும்.

அகிலத்திரட்டு அம்மானையில் கூறப்பட்டிருக்கின்ற கருத்துகளானது என்றும் மானத்துடன் புதுமை குலையாது மெய்யறிவுடன் பேரின்பத்தில் திழைத்து வாழ்வதற்கான வழிமுறைகள் ஆகும். இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைக் கேட்டு உணர்ந்து அதன்படி நடந்தவர்கள் பரபிரம்மத்தை கண்டு கொள்வார்கள். ஆனால் என்னவோ என்று கேட்பவர்கள் மனதில் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று நினையாதவர்கள் அஞ்ஞான இருளில் மூழ்கி சிவப்பெருளை வெளியில் தேடி அலைவார்கள். தன்னுள் இருக்கும் பரம்பொருளைக் கண்டுக் கொள்ள மாட்டார்கள். ஆன்ம ஞானம் என்பது அவர்களுக்கு எட்டாதக் கனியாகவே இருக்கும்.

இந்த உலகில் பல நூல்கள் மக்களால் எழுதப்பட்டிருக்கின்றது. அதுபோல இதுவும் ஒரு நூல்தான் என்றும் மக்களால் எழுதப்பட்டது என்றும் இதனை எண்ணி நிந்தனை செய்பவர்கள் பழித்து நகைத்துப் பேசுபவர்கள் எல்லாம் பேய் அலகை வாழுகின்ற நரகில் தள்ளப்பட்டு மீள முடியாமல் நடுங்கி துன்பக்கடலில் தத்தளிக்க செய்து விடுவேன். அதாவது மீண்டும் மீண்டும் பிறவி அமைந்து துன்பக் கடலில் துவண்டுப் போவார்கள்.

அகிலத்திரட்டு அம்மானையானது ஒரு ஞான பொக்கிஷம். இதை எல்லோரும் அறிந்து கொள்ளுகின்ற வகையிலே எளிய நடையில் எழுதப்பட்டு இருக்கின்றது. இதை எடுத்து ஏடாய் சேர்த்து இந்த உலக மக்கள் அறிய வேண்டும் என்று நினைத்து ஏடாய் சேர்த்தவர்கள் மக்கள் புரிகின்ற வகையில் எடுத்து உரைத்தவர்கள் பல வழிகளில் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று அதற்குரிய எல்லா வகையான முயற்சிகளை மேற்கொண்டவர்கள் எல்லாம் சந்தமுடனே எல்லா சிறப்புகளையும் பெற்று பூவுலகிலும் வாழ்ந்து, தர்ம பதியும் காண்பார்கள் என்பதாகும்.

அகிலத்திரட்டு என்னும் ஞான பொக்கிஷத்தை அறிந்து உணர்ந்து அதைத் தெளிந்து தெளிவுப் பெற்றுக் கொண்டவர்கள் என்றைக்கும் தர்மப் பதியின் சிறப்பை பெறுவார்கள். அவர்கள் என்றைக்கு மரணம் இல்லாத பேரன்ப வாழ்வாகிய மெய்ப்பொருளைத் தன்னுள் உணர்ந்து அவர்களுடைய நீத கண்ணாலே எல்லா சிறப்புகளையும் பெற்று துன்பங்கள் என்ற வினைகள் எல்லாம் அகற்றப்பட்டு எப்போதும் அந்த பரபிரம்ம நிலையை அடைந்து சிறப்புப் பெற்று வாழ்வார்கள்.

மெய்ப்பொருளை உணர்த்தும் இந்த ஞான மொழியை தூசணித்தவர்கள் இதை அவமதித்தவர்கள் இதை கற்றறிந்தால் பிரம்மத்தை உணர்ந்து கொள்ளலாம் என்பதை உணராதவன் பொய் விளக்கம் பேசுகின்றவர்கள், ஆணவத்துடன் மெய்யைப் பொய்யாக்கி கேடு விளைவிப்பவர்கள் இவர்கள் எல்லாம் மனம் இருள் அடைந்து கலிமாய எண்ணங்களால் உண்மையான ஞானம் உணரமுடியாதவர்களாக ஆணவம் மேலோங்கி மீண்டும் மீண்டும் இந்த உலகில் பிறந்து பிறந்து பிறவிப் பிணி யில் இருந்து விடுபட முடியாமல் எங்கும் அலைந்து திரிந்து மெய்ப்பொருளை உணராமல் அழிந்து போவார்கள்.

அகிலத்திரட்டு அம்மானை என்ற இந்த ஞானத் மொழியினை அவமதிப்பவர்கள் தெய்வத்தை நிந்தனை செய்ததற்கு சமமாகின்றார்கள். அவர்கள் தெய்வத்தை நிந்தனை செய்ததிற்கானப் காணப் பலனை அனுபவித்து தான் ஆக வேண்டும். அதிலிருந்து தப்பவே முடியாது. உலகில் உள்ள அனைவரும் அறியும் படியாக இதனை நான் எழுதி வைத்து

உள்ளேன். இதனை எழுதும் தகுதி உடையவர் மக்களில் எவரும் இல்லை. இது நாராயண மூர்த்தியால் அருளப்பட்டது ஆகும். இதை அப்பா நாதன் எழுதி வைத்த அகிலத்திரட்டு அம்மானையிதே என்றுக் கூறினார்.

அய்யா நாராயணர் அருளால் இந்த திருவாசகத்தை சரஸ்வதி மாது இயம்ப நாராயண மூர்த்தியால் எழுதப்பட்டு கலியுகத்தில் உள்ளவர்கள் அனைவரும் அறியும் படியாக செய்வதற்காக கட்டளையிட்டார். இறைவனை மறவாமல் வாழும் மறையோர்களாகிய நல்லவர்களிடம் அதைக் கொடுத்து உலகில் எல்லோரும் அறியும் படியாக செய்ய வேண்டும் என்று அனுப்பி வைத்து மகிழ்ந்து அங்கு இருந்தார்கள்.

## வினா விடை:-

1. "**என்னுடைய தங்கையரே எனைமேனி யாக்குவாளே உன்னுடைய தன் பொருட்டால் உலகளந்தோனானாகி**" யார் யாரிடம் கூறியது?
   நாராயண மூர்த்தி அம்மை உமையவளிடம் கூறியது.

2. பூவுலகில் பிறவி எடுப்பதற்கு சிவபெருமானையும், அம்மை உமையவளையும் நாராயணமூர்த்தி அனுப்பி வைத்தாரா? இல்லை அவர்கள் சிந்தையில் தோன்றியப் படி வந்தார்களா?
   அவர்கள் சிந்தையில் தோன்றியப் படிவந்தார்கள். நாராயணமூர்த்தியிடம் சிவப்பெருமான் கேட்கின்ற போது உங்கள் சிந்தையில் தோன்றியப் படிசெய்யுங்கள் என்று கூறியதன் மூலம் தெளிவாகிறது.

3. திருவாசகம் எழுதி அனுப்பியதன் நோக்கம் என்ன?
   நாராயண மூர்த்தி வைகுண்ட அவதாரம் எடுக்க இருக்கும் செய்தியையும் அதன் பின்னர் நிகழ இருக்கும் செயல்பாடுகள் பற்றியும் அனைத்து ஜீவராசிகளும் அறிந்து கொள்வதற்காகவும், எந்த விதமான குறைகளை கலி நீசர்கள் சொல்லாமல் இருக்கவும் ஆகும்.

4. திருவாசகம் யார் மூலம் எழுதப்பட்டது?
   சரஸ்வதி தேவி

5. சரஸ்வதிதேவி ஏன் திருவாசகம் எழுத வேண்டும் என்றுக் கேட்டதற்கு நாராயணமூர்த்தி கூறிய பதில் யாது?
நாராயண மூர்த்தி சரஸ்வதி தேவயிடம் நாட்டில் ஒரு நீசன் நன்றி யறியாமல் பிறந்து இந்த லோகமெல்லாம் மெய்யழித்து விட்டான். அவனிடம் இறைச் சிந்தனையோ இறை பயமோ எள்ளளவும் இல்லை. நேர்மையுடன் வாழும் சான்றோர் மக்களை துன்புறுத்துகிறான். அவர்கள் இடும் முறையும் பொறுக்க முடியுதில்லை.ஆகவே அந்த கலி நீசனை அழிப்பதற்கு முன்பாக அவன் குறை கூறா வண்ணம் திருவாசகம் எழுதி அனுப்ப வேண்டும் என்றுக் கூறினார்
.

6. அய்யா யாரைத் தெய்வ பிறவி என்று கூறுகிறார்?
சான்றோர் மக்களை

7. “தெய்வ பிறவியல்லோ திசை வென்ற சான்றோர்கள்
மெய் வரம்பை எல்லாம் மிகக் கெடுத்தான் மாபாவி” யார் யாரிடம் கூறியது?
நாராயண மூர்த்தி சரஸ்வதி தேவியிடம் கூறியது.

8. “**கற்பகலா பெண்களுடைய கற்புக்கு இரங்காதிருந்தால் உற்பனமோ நாங்கள் உடைய பரயென்றோமோ**” இதில் கூறப்பட்டுள்ள உற்பனமோ என்பது எதைக் குறிக்கிறது?
இறை அவதாரத்தைக் குறிக்கிறது. (கற்புடைய பெண்களின் துன்பங்களை போக்கவில்லை என்றால் இறைவனாக அவதாரம் எடுத்து என்ன பயன் என்றுக் கூறினார்).

9. மானபர ஞாயமதை வரம் பழித்தான் ______(மாநீசன்)
10. ஆகமத்தை கூறழித்தான் அன்னீத_____(மாபாவி)

11. பேய்களை எல்லாம் ஏன்அழிக்க வேண்டும் என்று நாராயண மூர்த்தி சரஸ்வதி தேவியிடம் கூறினார்?
தோசப்பயலோடு துணையாய் மிகக்கூடி கொடுக்க ஒன்றும் இல்லாதவர்களை பார்த்து கொல்லுகின்ற காரணத்தால் பேய்களையும் எரிக்க வேண்டும் என்றுக் கூறினார்.

12. சரஸ்வதிதேவியிடம் திருவாசகம் எழுத நாராயண மூர்த்தி கூறியவுடன் சரஸ்வதி தேவிக்கு எழுந்த சந்தேகம் என்ன?
சரஸ்வதி தேவி நாராயண மூர்த்தியிடம் சுவாமி எல்லாம் உமது கிருபையால் தான்நடக்கிறது. என்னால்இதை செய்யமுடியுமா? ஆட்டுவது நீயல்லவோ,ஆடவைப்பானும் நீயல்லவோ, ஓட்டுவதும் நீயல்லவோ ஓட வைப்பானும் நீயல்லவோ சொல்லுவதும் நீயல்லவோ சொல்ல வைப்பானும் நீயல்லவோ அல்லும் பகலும் நீயல்லவோ அழியா திருவுளம் நீயல்லவோ இப்படி எல்லாமாக நீயிருக்க எப்படி அய்யா நான் திருவாசகம் எழுதுவது என்றுக் கேட்டாள் அம்மை சரஸ்வதி தேவி.

13. திருவாசகம் எழுத பணிந்த போது சரஸ்வதி தேவிக்கு எழுந்த சந்தேகத்தை நாராயணமூர்த்தி எவ்வாறுத் தெளிவுப்படுத்தினார்?
சரஸ்வதி தேவியிடம் நாராயணமூர்த்தி ஆயக்கலை அறுபத்து நான்கிற்கும் அதிபதியாக இருப்பவள் நீ. இந்த திருவாசகத்தை நான் உரைத்தாலும் உன்னால் எழுத படுமேயானால் யாரும் குறைச் சொல்ல மாட்டார்கள். அதையும் மீறி குறை கூறுபவர்கள் வன்னரகில் வீழ்வார்கள். ஆகையால் உன் வாக்கும் அரி அச்சரமும் சேர்த்து திருவாசகமாக உலகோர் அறியச் செய்ய வேண்டும் என்றார்.

14. "**கலையோடு கலையைத் தாக்கி கண்ணின்மேல்கருணை நாட்டி** " இதில் கூறப்பட்டுள்ள கலையோடு கலையைத் தாக்கி என்பதன் பொருள் என்ன?
சாஸ்திர வேத நூல்களை எல்லாம் ஆராய்ந்து என்பதாகும்.

15. ."**ஒருதிருவிபூதி யுண்டை யொருயிரு மிச்சமாகும்**
**ஒருதிடதேங்காய் போலும் ஒரு மனத்திரணைப்போட்டு**
**கருதிட வெற்றிலை பாக்கும் கனிந்திடுவோர்க்கு மூவர்**
**வருகிட ஞான மெய்யின் வழியிதுவாகுந்தானே**" விளக்குக?
மும்மூர்த்தி ஒரு மூர்த்தியாக வைகுண்டர்அவதாரம் நிகழ்ந்து இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு வைகுண்டர் அருளிய வாழ்வியல் நெறிகளை பின்பற்றி இறைவனை சிந்தையில் வைத்து உறுதியான மனதோடு இறைவனை மனதில் நினைத்து கொண்டவர்கள் இறைவனை கண்டு கொள்வார். எப்படி என்றால் தேங்காயானது பின்னி பிணைந்த

நார்களுக்குள் இருக்கிறது. நாமும் இந்த உலக வாழ்க்கையில் பல துன்பங்களை அனுபவித்து அதிலிருந்து விடுபட உறுதியுடன் செயல்பட வேண்டும். எப்படி உறுதிமிக்க தேங்காய் ஓட்டிற்குள் பல நன்மைகளை தரக்கூடிய தேங்காய் பருப்பு இருக்கிறதோ அது போல நாம் மன உறுதியோடு இறைவனை பற்றுகின்ற போது பல நன்மைகளை அருள்வதற்கு இறைவன் தயாராக இருக்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறார்.
மேலும் அய்யாவை ஆடம்பர செலவுகள் செய்து வழிபடவேண்டிய அவசியம் இல்லை. அன்புடன் கூடிய தூய மனத்தோடு மனம் உருகி வேண்டினாலே நாம் இறைவனை நம் உள்ளத்தில் கண்டு கொள்ள முடியும் என்பதாகும்.

16. அகிலத்திரட்டு அம்மானை என்ற இறை மொழியை தூற்றியவர்களின் நிலை என்ன?
நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

17. சரஸ்வதி அம்மையால் திருவாசகம் எழுதப் பட்ட ஆண்டு?
998

18. திருவாசகம் யார் யாரெல்லாம் அறியும் படி எழுதப்பட்டது?
இறைவனால் படைக்கப்பட்ட எண்பத்து நான்கு லட்சம்உயிர்கள், ஏழு கடல், பதினான்கு லோகம்,இரதி பதி,சூரியன், சந்திரன், மாமலை, சோலைகள் ,தேவர்கள், முனிவர்கள், சாஸ்திரிகள், சாஸ்திரம்,மறை முதலியன அறியும் படி எழுதப்பட்டது.

19. திருவாசகத்தை அறிந்துகொண்டவர்களுக்கு கிடைக்கும் பேறு யாது?
பக்தியுடன் அறிந்து பணிந்து கொண்டவர்களுக்கும் முக்தி அடைந்தவர்களுக்கும் மிகுந்த பலன் உண்டாகும்.

20. கலியுகத்தில் யார் யார்அழிந்து போவார்கள் என்று திருவாசகத்தின் மூலம் அய்யா நமக்குஉணர்த்துகிறார்?
ஆசாரமாய் இருக்கிற பேர்கள்,அழுக்கான புத்தி என்று சொல்லகூடிய தீய எண்ணத்தோடு வாழ்பவர்கள் அவரவருடைய ஆங்காரத்தினால் அழிந்து போவார்கள்.

21. முகத்து லிங்கம் என்ற இறை ஜோதி யார் மூலம் வழங்கப்படும்?
பிரம்மதேவர்

22. ஏழு சமுத்திரத்துள் எத்தனை சமுத்திரம் நீர் உள் வாங்கி போவதாக ஆகமம் கூறுகிறது?
மூன்று

23. ஒரு சேர்வை விபூதி எத்தனை சக்கரத்திற்கு விற்கப்படும்?
ஆறு

24. ஒரு லிங்கம் எத்தனை சக்கரத்திற்கு விற்கப்படும்?
மூன்றுவராகனுக்கு (பத்தரை ரூபாய் பொன்நாணயம்)

25. வராகன் என்பது எவ்வளவு பொன்னைக் குறிக்கிறது?
மூன்றரை ரூபா மதிப்புள்ள பொன் நாணயத்தை குறிக்கிறது.

26. தர்ம யுகத்தில் எத்தனை நாழிகை வழிக்கு ஒரு தண்ணீர்பந்தல் அமைவதாகக் கூறுகின்றார்?
இரண்டு நாழிகை வழிக்கு ஒரு தண்ணீர் பந்தல் அமைவதாகக் கூறுகின்றார்.

27. தர்ம யுகத்தில் எத்தனை நாழிகை வழிக்கு ஒரு தர்மமடம் அமைவதாக கூறுகின்றார்?
மூன்று நாழிகை வழிக்கு ஒரு தர்மமடம் அமைவதாகக் கூறுகின்றார்.

28. அய்யா வைகுண்டர் வைகுண்டவீடாகிய தர்மயுக வாழ்வை யாருக்கு அருள்வதாக கூறினார்?
அகிலத்திரட்டு அம்மானை ஆகமத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளை உண்மை என்று எண்ணி வழி நடப்பவர்களுக்கு தர்மயுக வாழ்வு கிடைக்கும் என்றுக் கூறியிருக்கிறார்.

29. அய்யா வைகுண்டர் வைகுண்ட வீடாகிய தர்ம யுக வாழ்வும் இந்த கலியுகத்தில் எல்லா செல்வ சிறப்புகளையும் யாருக்கு அருள்வதாக கூறினார்?
அகிலத்திரட்டு அம்மானை ஆகமத்தை வாசித்தவர்கள், கேட்டவர்கள், ஆகமத்திற்கு உரை பகர்ந்தவர்கள் அய்யா கூறிய

நூல்முறைப்படி வாழ்ந்தவர்களுக்கும் இந்த சிறப்பை அருள்வதாகக் கூறியிருக்கிறார்.

30. அகிலத்திரட்டு அம்மானைஆகமத்தைதூசணித்தவர்களின் நிலை என்ன?
பல விதமான நோய்களால் துன்பங்களை அனுபவித்து பின்னர் நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

31. அகிலத்திரட்டு அம்மானை ஆகமத்தை வாசித்தவர்கள் கேட்டவர்கள் ஆகமம் படிநடந்தவர்கள் அடையும்சிறப்பு யாது?
"**காண்பார் தர்மக் கண்காட்சை கண்டே மரணம் இல்லாமல்**
**காண்பார் என்றும் களிகூர்ந்து கண்ணோன் மதத்தைக் கண்ணாடி**
**காண்பார்நீதக்கண்ணாலே கருணாகரராய்க் கவ்வையற்று**
**காண்பார் என்றும்கைலாசம் கண்டே நன்றாய் வாழ்வாரே** "
தர்மயுக வாழ்வு பெற்று எந்த விதமான துன்பமும் இல்லாமல் வாழ்வார்கள்.

32. அகிலத்திரட்டுஅம்மானையில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் நெறிகளை பின்பற்றி வாழாதவர்கள் நரகத்திற்கு செல்வார்கள் என்பதை யார் பெயரில் உண்மையாக சாபமிட்டுக் கூறினார்?
சக்திபெயரில் உண்மையாக சாபமிட்டுக் கூறினார்.

33. அய்யா நாராயணமூர்த்தி சரஸ்வதி தேவியிடம் யாருக்காக திருவாசகம் எழுதி அனுப்புவதாகக் கூறினார்?
கலி நீசனுக்கு புத்தி உரைப்பதற்காக இந்த திருவாசகம் எழுதி அனுப்ப வேண்டும் என்றுக் கூறினார்.

34. அய்யா நாராயண மூர்த்தி சரஸ்வதி தேவி மூலம் எழுதி அனுப்பிய திருவாசகத்தை இந்த உலகமக்கள் ஏற்றுக் கொண்டார்களா?
இல்லை

35. அய்யா நாராயண மூர்த்தி சரஸ்வதி தேவி மூலம் எழுதி அனுப்பிய திருவாசகத்தை இந்த உலக மக்கள் ஏற்றுக் கொள்ளாததால் வந்த விளைவு யாது?
மக்கள் கலிநீசக் கொடுமைக்குள் அகப்பட்டு கொண்டார்கள்

36. .சிவப்பெருமான் தாண்டவம் ஆடி முடித்தவுடன் அம்மை உமையவள் சிவபெருமானிடம் கேட்ட சந்தேகம் என்ன?

சிவப்பெருமான் தாண்டவம் ஆடி முடித்தால் சிவன் முதல் சக்தி வரை மாண்டாரைப் போல் கிடந்து மறுத்தெழும்ப வேண்டுமல்லவா என்று தன்னுடைய சந்தேகத்தை வெளிப்படுத்தினாள் அம்மை உமையவள்.

37. அம்மை உமையவள் சிவபெருமானிடம் பூலோகத்தில் பிறவி எப்படி தங்களுக்கு அமையப் போவதாகக் கூறினார்?

மழை வெயில் பனி என்று பாராமல் கந்தை துணி உடுத்தி கையில் திருவோடு தந்தும், குறத்தி வேடம் பூண்டு, மைந்தன் சரவணனுக்கு மறிப்பு மிகக்கொடுத்தும், பிரம்மனுக்கு கோலமிட்டு பிசாசுதனை விரட்டியும், தேவதைகளுக்கு மாற்றி உருக்கொடுத்து , உகக்கோலங்கள் இட்டு திரிந்து அலைய வேண்டிய நிலை இருக்கிறது என்று தனக்கு தோன்றுகிறது என்று அம்மை உமையவள் கூறினாள்.

********அய்யா உண்டு********

# அய்யா துணை

## அகிலத்திரட்டு அம்மானை அருள் நூல்

## பட்டயப்படிப்பு

## மூன்றாம் பருவம்

## பாகம்-II

# அகிலம் கல்விச்சாலை

**அகிலத்திரட்டு பாடம் படிக்க, அகிலத்திரட்டு வாசிப்பு பயிற்சி மேற்கொள்ள , பதி, தாங்கல்களில் அறப்பாடச்சாலை நடத்த, அகிலத்திரட்டு பாராயணப் பயிற்சி வழங்கப்படுகிறது.**

- **வகுப்புகள் ஆன்லைன் மூலமாகவும்,**
- **நேரடியாகவும் வழங்கப்படுகிறது.**

## தொடர்புக் கொள்ள வேண்டிய முகவரி:

14/14-1, **மணலிவிளை, மண்டைக்காடு அஞ்சல்,**
**கன்னியாகுமரி மாவட்டம்**-629252.
**வாட்ஸ் அப் எண்**:9489655691
**வாட்ஸ் அப் குழுவின் பெயர்: அகிலம் அறிவோம்**

**தொடர்பு கொள்ள வேண்டிய அலைப்பேசி**: 9486880072,9489655691